பொதுசன நூலகம்
படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்

YARL OSAI
# யாழ் ஓசை
வார இதழ்

Regested No. QD/130/News/2011

ஓசை : 01 | நாதம் : 22 | வெள்ளிக்கிழமை 01.04.2011 | வார இதழ் | விலை ரூபா: 15.00

# வடக்கு- கிழக்கு உள்ளிட்ட குடிசன மதிப்பீடானது சர்வதேசத்துக்கு பொய்யான தகவலையே வழங்கும்

## த. தே. கூ. கடும் எதிர்ப்பு; தேவையெனில் ஏனைய பகுதிகளை கணக்கெடுத்துக் கொள்ளட்டும் என்கிறது

(ஜே. ஜி. ஸ்டீபன்)

கொடிய யுத்தத்தினால் அழிவையும் நலிவையும் சந்தித்திருக்கின்ற வடக்கு - கிழக்கின் நிலைமைகள் சீர்செய்யப்படாத இன்றைய காலகட்டத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவிருக்கின்ற குடிசன மதிப்பீடானது சர்வதேசத்துக்கு பொய்யான தகவல்களையே கொண்டு சேர்க்கும். எனவே குடிசன மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு ஏற்ற தருணம் இன்னும் கிட்டி வரவில்லை என்பதை அரசாங்கத்துக்கு அறிவுறுத்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (06 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்ற யாழ். இசை விழாவில் மாணவிகள் உழவர் நடனம் ஆடிக் காண்பிப்பதை படத்தில் காணலாம்.
(படப்பிடிப்பு:- எஸ்.எம். சுரேந்திரன்)

## யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போதே இனப்பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட்டுவிட்டது

### மீண்டும் தீர்வுக்கான முயற்சி முட்டாள்தனம் என்கிறது தே.தே.இ.

(லியோ நிரோஷ தர்ஷன்)

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவினதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் விருப்பங்கள் இடம் பெறாது. அதிகாரப் பகிர்வு தொடர்பாக கூட்டமைப்பு பேசுமாயின் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர்

## முன்னாள் போராளிகள் 206 பேர் இன்று விடுதலை

(லியோ நிரோஷ தர்ஷன் )

புனர்வாழ்வு அளிக்கப்படும் முன்னாள் புலி உறுப்பினர்கள் 4 ஆயிரத்து 800 பேரையும் விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக இன்று வெள்ளிக்கிழமை 206 பேரையும் புத்தாண்டில் குறிப்பிட்ட தொகையினரும் விடுதலை (06 ஆம் பக்கம் பார்க்க)

## இரவு 9 மணிக்குப் பின்னரும் வீதிச் சோதனைகள் நீடிப்பு

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரின் வீதிச் சோதனை நடவடிக்கைகள் இனிமேல் இரவு 9 மணிக்குப் பின்னரும் தொடரும்என யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார். தற்போது யாழ். குடாநாட்டில் வீதிகளில் இரவு 6 மணி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுவரும் (06 ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பட்டோர் பிரச்சினையிலும் இராணுவத் தலையீடுகள் இருப்பதினால் வடக்கு மக்கள் அச்சத்துடனேயே உள்ளனர்

## சர்வமதக் குழுக்களிடம் தெரிவிப்பு

வண்ணார்பண்ணை

தனிப்பட்ட குடும்பப் பிரச்சினையிலும் இராணுவத்தின் பிரசன்னம் இருப்பதால் வடக்கு மக்கள் இன்னும் பயத்துடன் வாழ்ந்து வருகின்றனர் என யாழ்ப்பாணத் திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த சர்வமத குழுவினரிடம் யாழ்ப்பாண சமயப் பெரியோர்களால் எடுத்துக்கூறப்பட்டது.

குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொண்ட சர்வமத குழுவினர் யாழ்ப்பாணத்தில் பல தரப்பட்ட மக்களையும் இராணுவம் மற்றும் ஏனைய பிரதிநிதிகளையும் சந்தித்தனர்.

நேற்று முன்தினம் நண்பகல் ரிம்பர் மண்டபத்தில் யாழ்ப்பாண மதகுருமாரைச் சந்தித்தபோது இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

அமைதி , சமாதானம் என்பது வெளியில் காணப்படும் பொருள் அல்ல. மனித உள்ளத்தில் தோன்றுவதாகும். சமாதானம் இருக்கும் இடத்தில் பயம் இருக்காது.

வடக்கு மக்கள் தற்போதும் பயத்துடனும் அச்சத்துடனுமே வாழ்ந்து வருகின்றனர்.

குடும்ப பிரச்சினைகளிலும் தனிப்பட்ட பிரச்சினைகளும் இராணுவத்தினரின் தலையீடுகள் அதிகமாக காணப்படுகிறது. இதனால் மக்கள் தமது உண்மை நிலையை மறந்து பொய்யான வாழ்க்கை வாழ்கிறார்கள்.

நாட்டில் சமாதானம் அமைதி உருவாகியுள்ளதாகக் கூறிவரும் அரச மற்றும் அரச ஆதரவாளர்கள் குடாநாட்டின்பொது மக்கள் வீடுகள் , பொது இடங்கள் , தொழில் இடங்களில் இராணுவமும் இராணுவ முகாம்களுமே காணப்படுகிறது. அங்கிருந்து வெளியேறுவதாக தெரிவிக்கின்ற போதும் இதுவரை நடந்ததாக இல்லை.

இந்த மக்கள் பல ஆண்டுகளாக எதிலிகளாகக் கூடாரங்களிலும் பொதுஇடங்களிலும் அநாதைகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

ஒரு சமூகத்தின் கலை, கலாசாரம், பண்பாடுகள் விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். சர்வதேசத்திலே இது ஏற்றுக் கொள்ளப்பட்டபோதும் இங்கு எதிராகவே இருக்கின்றது. கலை , கலாசாரம் சிதைக்கப்பட்டு வருகிறது. சில சர்வமதத் தலைவர்கள் கூட அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இது பாதிப்பை ஏற்படுத்தும். இலங்கை ஓர்ஆன்மிக நாடு என்பதால் எல்லா மதத்தவர்களும் ஒன்றிணைந்து சமாதானத்தை உருவாக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என யாழ்.மாவட்ட சமயத் தலைவர்களால் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கையர் உட்பட ஆஸியில் கடனட்டை மோசடியில் ஈடுபட்ட கும்பல் கைது

இலங்கையர்களும் அங்கம் வகிக்கும் கடனட்டை மோசடிக் கும்பல் ஒன்று அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் கைது செய்யப்பட்டது.

சுமார் 56 பேரைக் கொண்ட இந்த மோசடிக் கும்பலில் பிரித்தானியா மற்றும் கனடா போன்ற நாடுகளில் இருந்து சென்றிருப்பவர்களும் உள்ளடங்குவதாக அவுஸ்திரேலியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் எரிபொருள் நிலையங்களில் பணியாற்றுமிலங்கையர்களைப் பணத்தைக் கொடுத்து வளைத்தெடுத்து அவர்கள் மூலம் கடனட்டைத் தகவல்களைத் திருடுவதில் பிரஸ்தாப கும்பல் ஈடுபட்டுள்ளது. அதன்மூலம் அவுஸ்திரேலியாவில் பரந்த கடனட்டை மோசடி வலையமைப்பொன்றை உருவாக்க அவர்கள் முயன்றுள்ளனர். அவ்வாறான மோசடிகள் மூலம் அவர்கள் இதுவரை 25.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை மோசடியாக உழைத்துக் கொண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

# ஆஸியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதி தற்கொலை முயற்சி

அவுஸ்திரேலியாவின் கேட்டின் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த அகதி ஒருவர் தற்கொலை செய்து கொள்ள முயன்றபோது அதிகாரிகளால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

மேற்கு அவுஸ்திரேலியாவில் உள்ள கேட்டின் தடுப்பு முகாமில் நேற்று முன்தினம் அதிகாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கேட்டின் தடுப்பு முகாமில் இருந்த ஆப்கானிஸ்தான் அகதி ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் இடம்பெற்ற 24 மணிநேரத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை இலங்கையைச் சேர்ந்த இந்த அகதி தோட்டத்துக்குள் நடந்துசென்ற சற்று நேரத்தில அங்குள்ள மரம் ஒன்றில் கழுத்தில் சுருக்கு மாட்டிக் கொண்டு தொங்கியுள்ளார்.

மரத்தில் தொங்கியபடி உயிருக்குப் போராடிய அவரை தடுப்பு முகாம் அதிகாரிகள் காப்பாற்றி மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

தற்கொலை செய்துகொள்ள முயன்ற இவர் சிறிய காயமடைந்துள்ளதாக அவுஸ்திரேலிய குடிவரவு அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் அவரது பெயர் விபரத்தை அவர்கள் வெளியிடவில்லை.

அவுஸ்திரேலியாவில் அடைக்கலம் கோரிய ஆயிரக்கணக்கானோர் கிறிஸ்மஸ் தீவு மற்றும் கேட்டின் தடுப்பு முகாம்களில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

இதனால் அங்குள்ள அகதிகள் மத்தியில் மனவிரக்தி அதிகரித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை நேற்று முன்தினமும் அஸ்மோர் தீவுக்கு அருகே 37 அகதிகளுடன் வந்த படகு ஒன்றை அவுஸ்திரேலியா அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இதில் இருந்த அகதிகள் அனைவரும் கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

எனினும் இவர்கள் எந்தநாட்டவர்கள் என்ற விபரத்தை அவுஸ்திரேலிய குடிவரவு அதிகாரிகள் கூற மறுத்துவிட்டனர்.

# 13 ஆவது திருத்தத்திற்கு அப்பாலான அதிகார பரவலாக்கலை கோருமாறு இந்தியா அறிவுறுத்தியது

இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின்போது 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான அதிகார பரவலாக்கத்தை கோருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தியா அறிவுறுத்தியுள்ளதாக அக்கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம், இந்திய வெளிவிவகார அமைச்சர் எம்.எஸ். கிருஷ்ணா யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மேற்படி அறிவுறுத்தலை வழங்கியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் பொலிஸ் அதிகாரம் எந்தச் சூழ்நிலையிலும் வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி திட்டவட்டமாக தெரிவித்துள்ளதாகவும் மாவை சேனாதிராஜா கூறினார். அடுத்த மாதம் நடைபெறவுள்ள அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின்போது அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆவணமொன்றை தயாரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

# கனடாவுக்கு கப்பலில் அகதிகளை அனுப்பிய நபருக்கு இன்ரபோல் பிடியாணை

கனடாவுக்கு 76 தமிழ் அகதிகளை கப்பலில் அனுப்பி வைத்தவர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரித்தானிய குடியுரிமை பெற்ற இலங்கைத் தமிழர் ஒருவரைக் கைது செய்வதற்கு அனைத்துலக காவல்துறை பிடியாணை பிறப்பித்துள்ளதாக கனடாவின் நெசனல் போஸ்ட் ஊடகம் தெரிவித்துள்ளது.

40 வயதான குறித்த நபரை கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அனைத்துலக காவல்துறையின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவரே 2009ஆம் ஆண்டில் ஓசன் லேடி என்ற கப்பலில் 76 தமிழ் அகதிகளை கனடாவுக்கு அனுப்பி வைத்திருந்தார் என்றும் நெசனல் போஸ்ட் குறிப்பிட்டுள்ளது.சங்கர் என்று அழைக்கப்படும் இவர் இலங்கையில் பிறந்தவர்.

பிரித்தானிய கடவுச்சீட்டை வைத்துள்ள இவர், பிரித்தானியா, இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளில் இருந்து செயற்பட்டவர்.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் பிரிவில் இணைந்திருந்த இவர் சண்டை ஒன்றில் கால் ஒன்றை இழந்த பின்னர் பிரித்தானியாவுக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரின்சஸ் ஈஸ்வரி என்ற கப்பலில் இவர் வடகொரியாவில் இருந்து இலங்கைக்கு ஆயுதங்களைக் கடத்தியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. 2009 மே மாதம் இந்தக் கப்பல் இலங்கைக்கு ஆயுதங்களைக் கடத்திக் கொண்டிருந்தபோது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மரணமானதாக இந்தக் கப்பலின் பணியாளர்கள் அறிந்தனர்.

இதையடுத்து கப்பலில் இருந்த ஆயுதங்களை அவர்கள் இந்தோனேசியாவுக்கு அப்பாலுள்ள கடலில் கொட்டி விட்டனர். அதன்பின்னர் இவர் கனடாவுக்கு அகதிகளை ஏற்றி அனுப்பும் ஆட்கடத்தலில் ஈடுபடத் தொடங்கினார்.கம்போடியாவில் பதிவு செய்யப்பட்ட பிரின்சஸ் ஈஸ்வரி என்ற கப்பலின் பெயரை ஓசன் லேடி என்று மாற்றிய பின்னர் இந்தியாவில் இருந்து அது புறப்பட்டது.

மலேசியாவில் நிறுத்தப்பட்ட அந்தக் கப்பல் பின்னர் 76 அகதிகளுடன் பிரிட்டிஷ் கொலம்பியா கரையை வந்தடைந்தது. அதன் பின்னர் 10 மாதங்கள் கழிந்து 492 அகதிகளுடன் சன் சீ கப்பல் கனடாவுக்கு வந்தது என்றும் நெசனல் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

# மாகாண சபை முறைமை தோல்விகண்டுவிட்டது மக்கள் சபைகள் என்ற விடயமே பொருத்தமாகும்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(நமது நிருபர்)

அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எவ்வகையான பேச்சுக்களை நடத்தினாலும் மக்கள் ஆணை வழங்கியுள்ள மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்துக்கு அமைவாகவே அவை இருக்க வேண்டும். அதனை மீறி எதனையும் செய்ய முடியாது. மக்களின் ஆணையை தமிழ்க் கூட்டமைப்பும் மதிக்கவேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிநிதியும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமை தோல்வியடைந்துவிட்டது. மக்கள் சபைகளே சிறந்த முறைமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் கூறியதாவது

அரசாங்கம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் அபிவிருத்தி மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து பேச்சுக்களை நடத்திவருகின்றது. ஆனால் அந்த பேச்சுக்கள் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்துக்கு அமைவாகவே இடம்பெறவேண்டும்

காரணம் நாட்டின் அதிகளவான மக்கள் ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்துக்கே ஆணை வழங்கியுள்ளனர். அதனை அனைவரும் மதிக்க வேண்டியது அவசியமாகும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இக்காலத்தில் பெரும்பாலான மாணவர்கள் ஆசிரியர்களைக் கனம் பண்ணுவதில்லை

## பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

(வட்டுக்கோட்டை நிருபர்)

இக்காலத்தில் பெரும்பாலான மாணவர்கள் ஆசிரியர்களை மதிக்காது மூத்தோரை, பெரியோரை கனம் பண்ணாது நடக்கின்றனர். பேராசிரியர் விசாகரூபன் எப்பொழுதுமே தனக்கு கல்வி போதித்த ஆசிரியர்களைப் போற்றி வணங்குபவர். அதனால்தான் அவர் இந்தளவு பெரிய பதவிக்கு உயரமுடிந்தது.

இவ்வாறு இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவு சம்பந்தன் விருது வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய யாழ்ப் பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தெரிவித்தார்.

இவ்வருடம் சம்பந்தர் விருது பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் எழுதிய ஈழத்தின் தமிழ் நாவல்கள், நாட்டார் பண்பாட்டுக் கூறுகள் - பயில் நிலையும் பயன்பாடும் என்ற நூலுக்கு வழங்கப்பட்டது. மேற்படி விருது வழங்கும் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் - திருஞான சம்பந்தர் ஆதீன கேட்போர் கூடத்தில் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றபோது பேராசிரியர் சிவலிங்கராஜா அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

பேராசிரியர் விசாகரூபன் சிறந்த இலக்கியகர்த்தா, மிகச்சிறந்த நடிகர், சுறுசுறுப்பாகக் கருமமாற்றும் இயல்புடையவர்; திட்டமிட்டுப் பணியாற்றுபவர். செம்மையாக, சிறப்பாக, பொறுப்பாக ஒரு விடயத்தைச் செய்துமுடிக்கும் ஆற்றல் நிறைந்தவர். இத்தகைய சிறப்புவாய்ந்த இளம் பேராசிரியர் இன்று மூத்த பேராசிரியர்கள் வரிசையில் சம்பந்தன் விருதினைப் பெற்றுக்கொள்வது பெருமைக்குரிய விடயமாகும்.

இவர் பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் வேலுப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் சிவத்தம்பி போன்றவர்களின் வரிசையில் பல சாதனைகளைப்படைத்து மின்னிப் பிரகாசிக்க வாழ்த்துகிறேன் என்றார்.

வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேராசிரியர் விசாகரூபனுக்கு பொன்னாடை போர்த்தி சம்பந்தர் விருதினை வழங்கிக் கௌரவித்தார். க. குணராசா (செங்கை ஆழியான்) வரவேற்புரை நிகழ்த்தினார். பேராசிரியர் விசாகரூபன் பதிலுரை வழங்கினார்.

# அளவை நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி ஆரம்பிப்பு

கொடிகாமம்,

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் அளவை நிறுவை உபகரணங்களுக்கான முத்திரையிடும் பணிகள் சாவகச்சேரி நகர சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்ட இப்பணி எதிர்வரும் 8 ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. இம் முத்திரையிடும் பணிக்கு மேற்படி மன்ற எல்லைக் குட்பட்ட வர்த்தக நிலையங்கள், சந்தை வியாபாரிகள் தவறாது தங்கள் நிறுவை உபகரணங்களைக் கொண்டுவந்து முத்திரையிடுமாறு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் அறிவித்துள்ளார்.

# 'தவறிப்போனவன் கதை' நாவல் வெளியீட்டு விழா

வடமராட்சி,

மூத்த எழுத்தாளர் தெணியான் எழுதிய 'தவறிப்போனவன் கதை' என்னம் நாவல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் கலையகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் த. கலாமணி தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் நாவலின் நயப்புரையை கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி ஆசிரியை திருமதி. எஸ். தனேஸ்வரி, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா. தனபாலன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணா ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

இந் நாவலின் முதற் பிரதியை மக்கள் வங்கியின் முன்னாள் முகாமையாளர் க. சின்னராஜன் பெற்றுக்கொள்வார்.

# நிர்வாகிகள் தெரிவு

வரணி,

கொடிகாமம் அஞ்சலக அபிவிருத்திச் சபையின் நிர்வாகிகள் தெரிவு அண்மையில் அஞ்சல் அதிபர் திருமதி. யோகராணி வல்லிபுரநாதன் தலைமையில் நடைபெற்றது. தலைவராக அஞ்சல் பொறுப்பு அதிபரும் காரியதரிசியாக த. கந்தையாவும் தனாதிகாரியாக லயன் செ. சரவணமுத்துவும் உப-தலைவராக சி. அருளம்பலமும் உப-செயலாளராக க. பாலசிங்கமும் நிர்வாக சபை உறுப்பினர்களாக க. ஞானலிங்கம், செ. ஜெயசேகரம், வே. இரத்தினசிங்கம், அ. திருநாவுக்கரசு, இ.,கந்தையா மற்றும் ஜீ. ஞானேஸ்வரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.



ஊடகவளங்கள் பயிற்சி மையத்தால் நடத்தப்பட்ட கருத்தரங்கு நிகழ்வில் பேராசிரியர் என். சண்முகலிங்கன் உரைநிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

# சர்வமத சம்மேளனப் பிரதிநிதிகள் யாழில் பல தரப்பினரையும் சந்திப்பு

(அலுவலக நிருபர்)

சர்வ மதங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் சர்வமத சம்மேளனத்தைச் சேர்ந்த மதப்பெரியார்கள் நேற்று வட பகுதிக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

அதன் ஒரு கட்டமாக யாழ்ப்பாணத்தின் பல பிரதேசங்களிலும் விஜயங்களை மேற்கொண்டு பலதரப்பு சந்திப்புக்களையும் மக்களின் குறை நிறைகளையும்கேட்டறிந்து கொண்டனர்.

யாழ். நாகவிகாரைக்கு விஜயம்செய்து மத வழிபாடுகளில் கலந்துகொண்டதன் பின்னர் நாகவிகாராதிபதி மற்றும் நாகவிகாரை அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். பின்னர் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்திற்கு விஜயம் செய்த மேற்படி சர்வமதப் பெரியார்கள் யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவை சந்தித்து உரையாடினார்.

யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைவரங்கள் மற்றும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினார். இச் சந்திப்பில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகமும் உடனிருந்தார்.

இதேவேளை, நாவாந்துறையிலுள்ள முஸ்லிம் வட்டாரத்துக்கும் விஜயம் செய்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினார்கள்.

அத்துடன், உரும்பிராய் மற்றும் சுன்னாகத்திலுள்ள இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்களுக்கும் விஜயம்செய்த போது, அங்குள்ள மக்கள் தமக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் விரைவாகத் தங்களை சொந்த இடங்களுக்கு மீள்குடியேற்றுவதற்கு ஆவன செய்யுமாறும் மேற்படி சர்வமத சம்மேளனப் பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்கு ப்பதிலளித்த சர்வமதங்களின் சம்மேளனத்தைச் சேர்ந்த கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை , இது தொடர்பில் உரிய அக்கறை எடுத்து மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவுவதாகவும் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்துடன் இணைந்து பல வித சமூகநலப் பணிகளை முன்னெடுக்க விருப்பதாகவும் அவர் அங்கு தெரிவித்தார். சர்வமத சம்மேளனங்களைச் சேர்ந்த இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மற்றும் பௌத்த மதத் தலைவர்கள் என சுமார் 10க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் நேற்று யாழ். குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் விஜயம்செய்து முக்கிய பிரமுகர்களுடன் பல முக்கிய சந்திப்புக்களையும் மேற்கொண்டனர்.

# யாழ். மாவட்டக் கலைஞர்களை ஒன்றிணைத்து ஆற்றுகைக் கலைஞர்கள் அமையம் உருவாக்கம்

இந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் ஒன்றுகூடலின் முடிவில் சகல கலைஞர்களும் ஒன்றிணைந்து செயலாற்றவும் மேலும் பல கலைஞர்களை ஒன்றிணைத்து வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் ஆற்றுகைக் கலைஞர்கள் அமையம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

முன்னாள் தென்னிந்திய திருச்சபைப் பேராயர் வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் போஷகராகத் தெரிவுசெய்யப்பட்டார். வழக்கறிஞர் பொன். பூலோகசிங்கம் அமைப்பின் தலைவராகவும், செயலாளராக திரைப்படக் கலைஞர் விஸ்வலிங்கம் விஸ்வசந்திரனும், அமையத்தின் ஆலோசகர்களாக திரைப்பட நெறியாளர் யோகேந்திரநாதனும் நாடகநெறியாளர் ந. பரமேஸ்வரனும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

பெரும் பொருளாளராக யாழ்ப்பாணப் பல்லைக்கழக முதுநிலை விரிவுரையாளர் இ. விக்னேஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டார். எட்டு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்கள் ஒவ்வொரு மாதமும் கூடி ஆற்றுகைக் கலைஞர்களின் மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளார்கள் என அந்த அமையத்தின் தலைவர் பொன். பூலோகசிங்கம் அறிவித்துள்ளார். இந்த வைபவத்தில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி அதிபர் ஓங்காரமூர்த்தி உட்பட கலைஞர்கள், அறிஞர்கள் பலர் கலந்துகொண்டு தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yarl Osai

# யாழ் ஓசை

2011 ஏப்ரல் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# வடக்கில் அல்லல்படும் வயோதிபர்கள்; தொண்டு நிறுவனங்கள் கவனிக்குமா?

வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் முதியவர்களில் கணிசமானோர் அண்மைக் காலமாக கவனிப்பாரற்ற நிலையில் போதிய நிவாரணங்களின்றி சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக போர் நடைபெற்ற காலப்பகுதியில் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழ்ந்து தற்போது மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளவர்களே இவ்வாறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக 'ஹெல்ப் ஏஜ் சிறீலங்கா' எனும் அரசசார்பற்ற நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள இவ் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சமந்த லியனவதுகே, ஆயிரக் கணக்கான முதியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டும் மருத்துவ பராமரிப்புகள் இன்றியும் வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

வன்னி மாவட்டத்தில் மாத்திரம் 60 வயதைத் தாண்டிய சுமார் 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இவ்வாறு கவனிப்பாரற்ற நிலையிலும் வாழ்ந்து வருவதாகவும் இவர்கள் உள ரீதியாக பாதிக்கப்பட்ட நிலையிலும் தனிமைப்படுத்தப்பட்டு தமது அன்றாடத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கில் தற்போது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் இவ்வாறானவர்களுக்கு உதவியளிக்கும் வகையில் இதுவரை எந்தவிதமான திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படாமை கவலைக்குரியதாகும்.

குறிப்பாக குடும்ப ரீதியான ஆதரவையும் பாதுகாப்பையும் இழந்த அதிகமானோர் இப் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கான உணவு, தங்குமிடம், சுகாதார வசதிகள் என்பன எட்டாக்கனியாக மாறியுள்ளன.

உண்மையில் இவ்வாறான வயோதிபர்கள் அனைவரும் தமது ஆயுட் காலத்தில் அரைவாசிப் பகுதியை போர்ச் சூழலுக்குள்ளேயே கழித்திருக்கிறார்கள்.

இக் காலப்பகுதியில் இவர்கள் தமது உறவுகளை இழந்திருப்பார்கள். பல்வேறு துன்பியல் சம்பவங்களைச் சந்தித்திருப்பார்கள். பல தடவைகள் இடம்பெயர்ந்து அல்லல்பட்டிருப்பார்கள். இத்தனைக்கும் மத்தியில்தான் தற்போது இவர்கள் கைவிடப்பட்ட நிலையில் தனிமையில் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரையில் சமூக சேவைகள் அமைச்சானது அநாதரவான முதியோர்களைப் பராமரிப்பதற்கு தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்கி வருவதை மறுக்க முடியாது. அந்தவகையில் இவ்வாறு போரினால் பாதிக்கப்பட்டு அல்லல்படும் இவ்வாறான ஆயிரக் கணக்கான வயோதிபர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி அவர்களுக்கு உதவிக் கரம் நீட்ட நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

அது மட்டுமன்றி இலங்கையில் போருக்குப் பின்னரான மீள்கட்டுமானப் பணிகளிலும் ஏனைய அபிவிருத்திப் பணிகளிலும் ஈடுபட்டு வரும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்த அநாதரவான வயோதிபர்கள் விடயத்தில் . விசேட கவனம் செலுத்துவதுடன் அது தொடர்பாக வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் முன்வர வேண்டும்.

வருடத்தில் ஒக்டோபர் மாதத்தின் முதல் நாளில் மாத்திரம் 'சர்வதேச முதியோர் தினம்' என்ற பெயரில் ஒரு நாளில் மாத்திரம் அவர்களை நினைத்து அவர்களுக்கு சில நிவாரணங்களை வழங்கி விட்டு பின்னர் வருடத்தின் ஏனைய அனைத்து நாட்களிலும் அவர்களை மறந்து விடுகிறோம்.

இந்நிலை மாற்றப்பட்டு வருடம் முழுவதும் இவ்வாறான அநாதரவான வயோதிபர்களை பாதுகாத்து அவர்களுக்கு உதவிக் கரம் நீட்ட சகலரும் முன்வர வேண்டும். குறிப்பாக இந்த வயோதிபர்களின் குடும்பத்தினருக்கு இது விடயத்தில் அதிக பொறுப்பும் கடமையும் உண்டு என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

# தமிழ் மக்களின் அரசியல் ஸ்திரத்தை குலைக்கும் ஏகத்தலைமைப் பிடிவாதம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்த விடயத்தில் செல்வாவை முன்னுதாரணமாகக் கொண்டு சம்மந்தர் சிந்தித்திருக்க வேண்டும். ஆனால், அவர் அப்படி நடந்து கொள்ளவில்லை.

சரி பிழைகளுக்கு அப்பால் கடந்த முப்பது ஆண்டுகளாக ஈழத் தமிழ் மக்களின் தலைமையாக விளங்கிய விடுதலைப்புலிகள் வீழ்ச்சியடைந்துவிட்ட ஒரு சூழலில் ஈழத் தமிழ் மக்களுக்கான அரசியல் தலைமையில் ஒரு பாரிய வெற்றிடம் தோன்றியிருக்கிறது.

இந்த வெற்றிடத்தை உடனடியாக நிரப்பவும் முடியாது ஏனெனில் நாம் ஒரு தோல்வியடைந்த இனம்.

புலிகள் இலங்கை அரசை செயலிழக்கச் செய்வதன் மூலம் நமது அரசியல் அவாவினை வென்றெடுக்க முடியும் என்று நம்பியவர்கள். அதற்காக இறுதிவரை அவர்கள் போராடி அழிந்துமிருக்கின்றனர். புலிகளின் வீழ்ச்சி என்பது ஈழத் தமிழரின் அரசியலைப் பொருத்தவரையில் சாதாரணமான ஒன்றல்ல.

எனவே இத்தகையதொரு சூழலில் உடனடியாக நமக்கானதொரு சிறந்த தலைமைத்துவம் உருவாகிவிடப் போவதில்லை. ஆனால் அதுவரைக்கும் ஈழத் தமிழர்கள் வெறுமனே காலத்தைக் கழிக்கவும் முடியாது. எனவே இத்தகையதொரு சூழலில் நமது அரசியல் நிலைத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் நமக்கு ஒன்றுபட்ட அரசியல் அமைப்பொன்றே தேவை.

இந்தப் பின்புலத்தில் இந்தக் கட்டுரை 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற அடிப்படையில் ஓர் அரசியல் கட்சியாக இயங்குவதே அறிவுபூர்வமான அணுகுமுறை என்று கருதுகிறது. அவ்வாறில்லாது 'மீண்டும் பழைய குருடி கதவைத் திறடி' என்பது போல் நமது பெருமைவாதங்களுக்குள் சிறைப்படுவோமாயின் ஈழத் தமிழர்களின் அரசியல் பலம் மேலும் சிதைவடையும். தவிர எமக்கு அரசியல் என்று ஒன்றே இல்லாமலும் போகலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு தனிக்கட்சியாக இயங்குவதில் எவ்வாறான தடைகள் இருக்கின்றன? இதற்கு தடையாக இருப்பவர்கள் யார்? தமிழரசுக் கட்சித் தரப்பினரே கூட்டமைப்பை தனிக்கட்சியாக பதிவு செய்வதற்கு தடையாக இருந்துவருகின்றனர் என்பதே பொதுவான கருத்தாக இருக்கிறது.

எனினும் இந்தக் கட்டுரை அவ்வாறான பொதுநிலை அபிப்பிராயங்களின்வழி எழுந்தமானமாக தமிழரசுக்கட்சி மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முயலவில்லை. நிலைமைகளை நிலைமைகளுடாகவே ஆராய விழைகிறது. மேற்குறிப்பிட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதில் தமக்கு உடன்பாடில்லை என்று தமிழரசுக்கட்சி தரப்பினர் குறிப்பிட்டதிலிருந்து, அவர்கள் தொடர்பில் இதுவரை வெளிவந்த பொதுவான அபிப்பிராயங்களை அவர்களே உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு தனிக்கட்சியாக பதிவு செய்வதிலும் அவ்வாறானதொரு ஒன்றுபட்ட அரசியல் அமைப்பாக இயங்குவதிலும் ஆர்வமற்று இருப்பவர்கள் தமிழரசுக் கட்சியினரே என்பதை ஏற்றுக்கொள்ளுமாறு தகவல் மூலங்கள் இந்தக் கட்டுரையை நிர்ப்பந்திக்கிறது.

தமிழரசுக்கட்சி ஏன் அவ்வாறு ஆர்வமற்றிருக்கிறது? அவ்வாறு இருப்பதற்கான காரணங்கள் எவையாக இருக்கலாம்? உறுதிப்படுத்தப்படாத தகவல்களின்படி தலைமைத்துவம் தொடர்பான பயத்திலிருந்தே இந்தப் பிரச்சினைகள் முளை கொண்டதாகச் சொல்லப்படுகிறது. நமது கடந்த அறுபது ஆண்டுகால அரசியல் அனுபவங்களின் வழியாக பார்த்தால் பிரிந்து செல்வதை நியாயப்படுத்துவதில்தான் நமது தலைமைகளின் ஆயுள் அதிகமாகச் செலவழிந்திருக்கிறது. தவிர 'தமிழ்க் கட்சிகள் கூட்டணியாக இருந்தபோதும் கூட்டமைப்பாக இருந்தபோதும் தலைமை தமிழரசுக் கட்சியிடமே இருந்தது. இப்போதும் எப்போதும் அப்படியே தான் இருக்கும்' என்று மேற்குறிப்பிட்ட பத்திரிகையாளர் சந்திப்பில் தமிழரசுக் கட்சி தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதானது அதன் தலைமை குறித்த அச்சத்தை துலாம்பரமாக்கியுள்ளது.

எனவே தமிழரசுக் கட்சியினர் தலைமைத்துவம் குறித்த பயங்களால் ஆட்பட்டிருக்கிறனர் என்பதை இந்தக் கட்டுரையால் நிராகரிக்க முடியாதுள்ளது. இந்தக் கட்டுரை எந்தவொரு நபர் குறித்தும் அக்கறை கொள்ளவில்லை மாறாக தமிழர்களின் எதிர்காலத்தை மட்டுமே கருத்தில் கொள்கிறது.

தற்போது எதிர்தரப்பில் இருந்த சித்தார்த்தன் தலைமையிலான புளொட் அணியினரும் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியும் அத்துடன் சிவாஜிலிங்கமும் கூட்டமைப்பில் இணைந்திருக்கின்ற நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதில் தமக்கு உடன்பாடில்லை என்ற கருத்தை அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சி முன்வைத்துள்ளது. தமிழரசுக்கட்சியின் முடிவு தொடர்பில் புதிதாக இணைந்திருப்பவர்கள் என்னவகையான கருத்துக்களை கொண்டிருக்கின்றனர் என்பது வெளியாகவில்லை.


**நந்தன் அரியரட்ணம்**

ஆனால், சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் அடைக்காலநாதன் ஆகியோர் தமது விமர்சனங்களை பகிரங்கமாகவே தெரிவித்து வருகின்றனர். சமீபத்தில் திருகோணமலையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும் போதுமறைமுகமாக தமிழரசுக் கட்சியை கண்டிக்கும் வகையிலேயே அவர்கள் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.இங்கு பேசிய ஆனந்தசங்கரி நாங்கள்தான் எல்லாம் என்னும் ஏகப்பிரதிநிதித்துவ வாதத்தை விட்டுவிட்டு டக்லஸ் வந்தாலும் உள்வாங்கத்தான் வேண்டும் (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய, பாகிஸ்தான் உறவு மேம்பட இருநாட்டுப் பிரதமர்களும் விருப்பம்

## இந்திய வெளிவிவகார செயலர் நிருபமாராவ்



பாகிஸ்தானுக்கு வருமாறு பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கிலானி அழைப்பு விடுத்துள்ளார். இது குறித்து விவாதித்து முடிவெடுக்கப்படும் என்றார்.

**மொஹாலி,**

இரு நாடுகள் இடையேயான உறவு மேம்பட வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங், பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி ஆகியோர் விருப்பம் தெரிவித்துள்ளதாக இந்திய வெளிவிவகார செயலர் நிருபமாராவ் தெரிவித்தார்.

இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கான கிரிக்கெட் போட்டிக்கு இடையே கிலானிக்கு மன்மோகன் சிங் விருந்து அளித்தார். அப்போது இருவரும் பேசியது குறித்து நிருபமா ராவ் செய்தியாளர்களிடம் கூறியதாவது,


இரு நாடுகள் இடையேயான உறவு மேம்படுவதற்கு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவது முக்கியமானது என்பதை இரு தலைவர்களும் வலியுறுத்தினர். அதன் மூலம் உறவு மேம்பட வேண்டும் என்று இருவரும் விருப்பம் தெரிவித்தனர்.

இதன் மூலம் மும்பை தாக்குதலை இந்தியா மறந்துவிட்டது என்று கூற முடியாது.

வன்முறையற்ற சூழலில் தான் உறவு மேம்பட முடியும் என்பதை மன்மோகன் சிங் சுட்டிக்காட்டினார். அதை கிலானியும் ஒப்புக் கொண்டார்.

மும்பை தாக்குதல் குறித்து புதுடில்லியில் நடைபெற்ற உள்துறைச் செயலர்கள் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. குற்றம் இழைத்தவர்கள் விரைவில் தண்டிக்கப்பட வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே உள்ள பழைய பகைகளை பின்னுக்குத் தள்ளி, இப்போதுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முன் வர வேண்டும் என மன்மோகன் சிங் கூறினார். அதற்கான மன உறுதியும் இரு நாடுகளுக்கும் உள்ளது என்றும் மன்மோகன் சிங் குறிப்பிட்டார். இரு நாடுகளின் வர்த்தகச் செயலர்கள் அடுத்த மாதம் சந்திக்க உள்ளனர். பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் சல்மான் பஷீரை ஓரிரு மாதங்களில் நான் சந்திக்க உள்ளேன். அதன் பின்னர் வெளியுறவுச் செயலர்கள் கூட்டம் நடைபெறும்.



அகில இந்திய காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி அக்கட்சியின் பொதுச்செயலாளர் ராகுல் காந்தி ஆகியோர் நேற்று முன்தினம் இடம்பெற்ற 10 ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதிய இரண்டாம் அரையிறுதிப் போட்டியை நேரில் பார்த்து ரசிப்பதை படத்தில் காணலாம்.

# அனுதாப வாக்கில் வெற்றி பெற கருணாநிதி திட்டம்: விஜயகாந்த்



**சேலம்:**

மருத்துவமனையில் படுத்துக்கொண்டு, அனுதாப வாக்கில் வெற்றி பெற முதல்வர் கருணாநிதி திட்டமிட்டிருப்பதாக தனக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது என தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தனது கட்சி வேட்பாளரை ஆதரித்து சேலத்தில் பிரசாரம் செய்த அவர் மேலும் கூறியதாவது,

தி.மு.க.வினர் பணத்தை நம்பி தேர்தலில் நிற்கின்றனர். நாங்கள் மக்களாகிய உங்களை நம்பி நிற்கிறோம்.

அடிக்கடி டில்லி சென்று வரும் கருணாநிதி விலைவாசி உயர்வு, பெற்றோல் விலை போன்றவற்றை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பதிலாக தனது குடும்பத்தினர் மீது வழக்குப் பதிவு செய்யக் கூடாது என்று கோரிக்கையிடுகிறார். இவர்கள் எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என ஆட்சி நடத்துபவர்கள். எனவே இவர்களுக்கு வாக்களித்து ஏமாந்து விடாதீர்கள்.

மேலும், தேர்தல் நேரத்தில் மருத்துவமனையில் படுத்துக்கொண்டு, அனுதாப வாக்கில் வெற்றி பெறலாம் என கருணாநிதி திட்டமிட்டிருப்பதாக இரகசிய தகவல் ஒன்று எனக்கு கிடைத்துள்ளது. ஆனால் அதில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது எனத் தெரியவில்லை. இருப்பினும் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றார்.

# ஹிந்தி நடிகருக்கு 7 ஆண்டு சிறை மும்பை நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு



**மும்பை,**

வேலைக்காரப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கில் பிரபல ஹிந்தி நடிகர் சைனி அகுஜாவுக்கு 7 ஆண்டு கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து மும்பை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

பிரபல ஹிந்தி நடிகர் சைனி அகுஜா (வயது 37). மும்பையில் வசித்து வரும் இவருக்கு திருமணமாகி அனுபம் என்ற மனைவியும், அர்ஷியா என்ற மகளும் உள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி வீட்டில் மனைவியும், குழந்தையும் இல்லாத நேரத்தில் அங்கு வேலை பார்த்து வந்த 18 வயது வேலைக்காரப் பெண்ணை இவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக புகார் எழுந்தது. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண்ணின் புகாரின் பேரில், பொலிஸார் வழக்கு பதிவு செய்து, அகுஜாவை கைது செய்தனர்.

புகார் கூறிய பெண் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில், அவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டது உறுதியானது.

இதனைத்தொடர்ந்து மூன்றே மாதங்களில் நீதிமன்றில் அகுஜா மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

எனினும் அகுஜா, தான் நிரபராதி என்பதை இறுதி வரை சொல்லி வந்தார். அதை அவர் மனைவியும் ஏற்றுக்கொண்டிருந்தார்.

இந்நிலையில், மும்பை நீதிமன்ற விசாரணையில் இருந்த இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

அதில், சைனி மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாகக் கருதிய நீதிபதி சவுகான், அவருக்கு 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிப்பதாக தெரிவித்தார்.

இதனிடையே குறித்த வழக்கில் சைனி மீது புகார் கூறிய வேலைக்காரப் பெண், நீதிமன்றத்தில் ஆஜராகி தான் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படவில்லை என்று சாட்சியம் கூறி அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தினார். ஆனாலும் அதை ஏற்காத நீதிபதி மேற்படி தீர்ப்பளி[illegible] குறிப்பிடத்தக்கது.




அதிக சக்தி வாய்ந்த ரொடிகுல ரகசிய நீச்சகுல/ வசிய மந்திரம்
இனியும் ஏமாற வேண்டாம்
ஒரே ஊரில் பொய் வசியம் செய்பவர்களும் உண்டு.
✿ ஆண்/பெண் வசியம். ✿ பிரிந்து சென்றவர்களை ஒன்று சேர்த்து தருவோம்.
✿ மதுபானம் அருந்துபவர்களை 7 நாட்களில் நிறுத்த வைப்போம்.
நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளும் பொழுது, தபால் மூலமும் தீர்வு காணலாம்.
உங்கள் பிரச்சினையை தீர்க்க வேண்டுமாயின் எமக்கு உங்களின் பெயர், பிறந்த திகதி, முகவரி மட்டுமே போதுமானது.
T.P: 077 9889261
தீய சக்திகளிடம் (பில்லி, சூனியம்) இருந்து விடுவித்தும் தருவோம்.
வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட உதவிகள் செய்துதரப்படும் 0094779889261
லூலிரத்ன No.35, பொல்லேகொட, அம்பாதன்ன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவு 9...(தொடர்ச்சி)

வீதிச் சோதனை, அடையாள அட்டைப் பதிவுகள் பின் நகர்த்தப்பட்டு இனி இரவு 9 மணி முதல்மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித் தார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சர்வ மதத் தலைவர்கள்கு ழுவினருடனான சந்திப்பின் போதே இரா ணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்தார்.

இதுவரை காலமும் இரவு 6 மணிக்கு ஆரம்பமாகும் இராணுவத்தினரின் வீதிச் சோதனைகள் இரவு 8.30 மணிக்கு நிறைவு பெற்றுவிடும்.அதன் பின்னர் செல்லும் வாகனங்களோ மோட்டார் சைக் கிள்களோ மறிக்கப்பட்டு சோதனையிடப் படுவதில்லை. குடாநாட்டில் மேற் கொள்ளப்பட்ட களவுகளும் கொலைக ளும் பெரும்பாலும் பின்னிரவுகளிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன. அதே வேளை நெடுந்தூர வாகனங்களும் இரவு 9 மணிக்குப் பின்னரே யாழ்.குடாநாட்டுக் குள் நுழைகின்றன.

# நல்லிணக்க ஆணைக்குழுவின் சேவைக்காலத்தை மேலும் மூன்று மாதங்களினால் நீடிக்க நடவடிக்கை?

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்க மும் தொடர்பான ஆணைக்குழுவின் செயற்பாட்டுக் காலத்தை மேலும் மூன்று மாதங்களினால் நீடிப்பது தொடர்பில் ஆராயப்பட்டுவருவதாக தகவல்கள் தெரி வித்தன.

எனினும் இது தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழுவின் சார்பில் அரசாங்கத்தி டம் இதுவரை கோரிக்கை விடுக்கப்பட்ட தா? என்ற விடயம் உறுதிபடுத்தப்படா மல் உள்ளதாகவே தெரிவிக்கப்படுகின் றது. ஏற்கனவே நல்லிணக்க ஆணைக்கு ழுவின் செயற்பாட்டுக் காலத்தை ஒரு வருடத்தினால் நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளி வந்தன. ஆனால் அவ்வாறு நீடிப்புக்கோ ரிக்கையை ஆணைக்குழுவின் சார்பில் முன்வைக்கவில்லை என ஆணைக்குழு வின் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

எனினும் தற்போது அதன் சேவைக்கா லத்தை மேலும் மூன்று மாதங்களினால் நீடிப்பது குறித்து ஆராயப்பட்டுவருவ தாக தகவல்கள் தெரிவித்தன.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்க மும் தொடர்பான ஆணைக்குழு எதிர்வ ரும் மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தனது இறுதி பரிந்துரைகளை சமர்ப்பிக் கும் நோக்கில் செயற்பட்டுவருகின்றது.

நாடளாவிய ரீதியில் பல மாவட்டங்களி லும் கொழும்பிலும் ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெற்றுள்ள நிலையில் இறுதி பரிந்துரைகள் அடங்கிய அறிக் கையை தயாரிக்கும் நோக்கில் பெறப் பட்ட சாட்சியங்களை ஆய்வு செய்யும் பணிகள் தற்போது இடம்பெற்றுவருகின் றன.

## யுத்தம்...(தொடர்ச்சி)

கலாநிதி குணதாச அமரசேகர கூறுகை யில்,

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுடன் இணைந்து மீண்டும் புலிகளின் விருப்பத்தை இலங்கையில் நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கின்றது. இதற்கு ஒரு போதும் இடமளிக்க போவ தில்லை. புலிகள் அழிக்கப்பட்டு உள் நாட்டு யுத்தம் முடிவிற்கு கொண்டு வந்த போதே தேசிய இனப்பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட்டு விட்டது.

தற்போது மீண்டும் புதிய ஒரு தீர்வை வழங்கவோ அல்லது பேச்சுவார்த்தை நடத்தவோ தேவையில்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அதனூடாக அதிகாரப் பகிர்வை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கூட்டமைப்பு அரசுடன் பேச்சுக்கள் நடத்துவதுடன் இந்தியாவிடமும் உதவிகளை பெற்றுக் கொள்கின்றது.

இந்தியா எமது அயல் நாடு என்பது உண்மைதான். ஆனால் இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் தலையிட அதனை அனுமதிக்க முடியாது. புலிகளின் தோல்வியின் பின்னர் நாட்டில் சுமுகமான சூழல் ஏற்பட்டு அனைத்து இன மக்களும் ஒற்றுமையாகவே வாழ் கின்றனர். இவ்வாறானதொரு சூழ்நிலை யில் ஒரு இனத்திற்கு தனியான தீர்வை வழங்கி நாட்டில் பிளவுகளை ஏற்படுத்த முடியாது.

எனவே இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு ஏற்கனவே தீர்வு காண ப்பட்டு விட்டது. தீர்க்கப்பட்ட பிரச்சி னைக்கு மீண்டும் தீர்வு காண முயற்சி ப்பது இந்தியாவினதும் கூட்டமைப்பி னதும் முட்டாள்தனமாகும் என்றும் கூறினார்.

## முன்னாள்...(தொடர்ச்சி)

செய்யப்படுவார்கள் என்று புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுனந்த ரணசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக இவர் தொடர்ந்தும் கூறுகையில்,

இறுதி யுத்த காலப் பகுதியின் போது சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் பணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது. பெருந் தொகையானோர் புனர்வாழ்வு பெற்று விடுதலையாகியுள்ளனர். தற்போது புனர்வாழ்வு நிலையங்களிலுள்ள 4 ஆயிரத்து 800 பேரும் மிக விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள். இன்று வெள்ளிக்கிழமை ஒரு பெண் முன்னாள் போராளியும் 205 ஆண் போராளிகளும் புனர்வாழ்வு பெற்று பெற்றோர்களுடன் இணைக்கப்படவுள்ளனர். அத்தோடு எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விசேட நடவடிக்கைகளில் அடிப்படையிலும் பெருந் தொகையா னோர் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

எவ்வாறாயினும் புனர்வாழ்வு நிலையங் களில் உள்ள முன்னாள் போராளிகள் அனைவருக்கும் சமூகத்துடன் ஒன்றி ணைந்து வாழக்கூடிய வகையில் சகல துறைகளிலும் விசேட பயிற்சிகள் வழங்கப்படுகின்றது எனக் கூறினார்.

## வடக்கு-கிழக்கு... (தொடர்ச்சி)

நாட்டின் நிலைமைகள் உணரப்பட் டுள்ள நிலையில் குடிசன மதிப்பீட்டுக் கான அவசியத்துக்கும் அவசரத்துக்கும் காரணம் என்ன என்று கேள்வியெழுப்பி யுள்ள கூட்டமைப்பு, அரசாங்கத்துக்கு தேவையெனில் வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளை கணக்கெ டுத்துக் கொள்ள முடியும் என்றும் குறிப் பிட்டுள்ளது.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட விருக்கின்ற குடிசன மதிப்பீடானது வடக்கு - கிழக்கில் எத்தகைய தாக்கத் தினை ஏற்படுத்தப் போகின்றது என்பது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிச் செயலாளரும் வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

இது தொடர்பில் செல்வம் எம்.பி. மேலும் கூறுகையில்,

நாடு முழுவதிலும் குடிசன மதிப்பீட் டினை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக அறிவித்திருக்கின் றது. நாட்டின் குடிசன மதிப்பீட்டினை மேற்கொள்வதையிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் எந்தவிதமான எதிர்ப் பும் கிடையாது. ஆனாலும் யுத்தத்தால் வடக்கு - கிழக்கு அழிவடைந்து நலிவ டைந்து கட்டியெழுப்பப்படாத நிலையில் காணப்படுகின்ற இன்றைய காலகட்டம் குடிசன மதிப்பீட்டினை மேற்கொள்வதற் கான தருணம் இல்லை என்பதை இங்கு கோடிட்டுக் காட்ட விரும்புகிறோம்.

வடக்கு - கிழக்கின் அழிவு, இடம்பெ யர்வு, நிறைவு பெறாத மீள்குடியேற்றம், தொடர்ச்சியான முகாம் வாழ்க்கை, அகதி நிலை, அச்சத்தினாலும் அச்சுறுத்தலினா லும் நாட்டை விட்டு வெளியேறியமை, மீள்குடியமர்த்தப்பட்டதாக கூறப்படுகின் றவர்களுக்கான நிரந்தரத் தன்மை யின்மை உள்ளிட்ட பலதரப்பட்ட விட யங்களுக்கு விடை காணப்படாதிருக் கின்ற நிலையில் அரசாங்கத்தினால் மேற் கொள்ளப்பட்டு வருகின்ற மேற்படி திட் டத்துக்கான அவசியமும் அவசரமும் எதற் காக என்பது எமது பக்க கேள்வியாக இருக் கின்றது.

எமது மக்களை தெருவில் நிறுத்தி விட்டு குடிகளை, குடிமனைகளை கணக் கெடுக்கப் போவதாக கூறுவது வேடிக் கையானது - கேளிக்கையானது.

யுத்தம் நிறைவடைந்து இரண்டு வரு டங்களை எட்டவிருக்கின்ற நிலையில் இதற்கு முன்னர் அரசாங்கத்தினால் வழங் கப்பட்டுள்ள உறுதிமொழிகளின் பிரகா ரம் நடந்து கொண்டிருந்தால் அதன் பிரகா ரம் குடிசன மதிப்பீட்டினை மேற்கொள்வ தில் அர்த்தம் இருந்திருக்கும். யுத்தம் நிறைவடைந்ததன் பின் 180 நாட்களுக் குள் இடம்பெயர்ந்த சகலரையும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதாக உறுதியளித்த அரசாங்கம் இன்று வரை யில் தனது வாக்கினைக் காப்பாற்றத் தவ றியிருக்கின்றது.

இந்தியாவில் தஞ்சமடைந்திருக்கின்ற அகதிகளை இங்கு அழைத்து வருவதற் கான திட்டங்கள் அரசாங்கத்திடம் இல்லை. இன்னும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் நாட்டை விட்டு வெளியேறி யுள்ளனர்.

இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தி யில் மேற்கொள்ளப்படுகின்ற குடிசன மதிப்பீடு சர்வதேசத்துக்கு பொய்யான தக வல்களையே கொண்டு சேர்க்கும் என்ப தில் சிறிதும் ஐயமில்லை.

அரசாங்கத்தின் பணிப்பின் பேரில் புள்ளி விபரத் திணைக்களத்தினால் மேற் கொள்ளப்படவிருக்கின்ற இந்த நடவ டிக்கை தற்காலத்தில் அவசியமற்றது என் பதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதற்கு தமது எதிர்ப்பினையும் தெரிவித் துக் கொள்கின்றது. அதுமட்டுமல்லாது இப்போதைக்கு இத்திட்டத்தை கைவிடு மாறும் அரசாங்கத்தை வலியுறுத்த விரும் புகிறோம்.

தமிழர் விடயத்தில் மேலும் மேலும் பொய்யான திட்டங்கள் புகுத்தப்படுவது ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே புள்ளி விபரத் திணைக்களத்தின் தீர்மா னத்தில் மறுபரிசீலனை மிக மிக அவசிய மானதாகவே அமைந்திருக்கின்றது.

வடக்கு - கிழக்கின் நிலைமைகளைப் பூரணப்படுத்தியதன் பின்னர், வடக்கு - கிழக்கு மக்கள் தமது சொந்த இடங்களில் நிரந்தர வதிவிடங்களில் பதியப்பெற்ற தன் பின்னரே குடிசன மதிப்பீடு செய்வது பொருத்தமானதாக இருக்கும்.

அரசாங்கத்துக்கு அவசரமெனில் வடக்கு - கிழக்கின் அத்தியாவசிய தேவைகளில் உண்மையான ஈடுபாட் டினை துரிதப்படுத்த வேண்டும்.


அப்படி இல்லாது விடின் வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மாத்திரம் குடிசன மதிப்பீட்டினை மேற் கொண்டு தகவல்களைத் திரட்டிக் கொள் ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு வலியுறுத்தலுடனான ஆலோசனையையும் . வழங்குகின்றது. குடிசன மதிப்பீட்டு விடயத்தில் நாம் இடையூறாக நிற்கவில்லை. எனினும் நியாயமான முறையில் அது நடைபெற வேண்டும் என்றே கோருகின்றோம்.

ஆறு மாதங்களுக்கு உட்பட்டதாக விப ரங்களே மதிப்பீட்டுப் பணிகளுக்கு வரை யறுக்கப்பட்டிருப்பதாக புள்ளி விபரத் திணைக்களம் கூறுமானால் அது கொடிய யுத்தம் ஒன்று நடைபெற்ற எமது நாட் டுக்கு எந்த அளவில் பொருத்தமானது என்பது குறித்தும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஏனோ தானோ என்ற வகையில் தீர்மா னங்களை மேற்கொள்வதும் நடவடிக்கை களில் இறங்குவதும் சிறந்த பலாபலன் களை பெற்றுக் கொடுக்காது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். அர சாங்கத்தின் செயற்பாடு அனைவருக்கும் சமமானதாக அமைய வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர் பார்ப்பாகும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சிதமாக இருப்பதே அழகு



பார்ப்பது கண்ணுக்கு குளிர்ச்சி. மனதுக்கும் மகிழ்ச்சி.

நல்ல உணவு, அமைதியான மனம், மலர்ந்த முகம் இந்த மூன்றுமே உலகின் தலைசிறந்த டாக்டர்கள். மூன்றும் நன்றாக இருந்தால் தோற்றத்தில் அழகு துள்ளும். இயற்கையாகவே பெண்கள் அழகுதான். அழகுக்கு மேலும் அழகு சேர்க்க இதோ! சில டிப்ஸ்கள்:

- பசுமையான மரம், செடி, கொடிகளை அடிக்கடி பார்ப்பது கண்ணுக்கு குளிர்ச்சி. மனதுக்கும் மகிழ்ச்சி.
- கன்னம் ஒட்டிப் போய் இருக்கிறதா? தினமும் வாயில் தண்ணீர் ஊற்றி கன்னத்தின் உட்பகுதி விரியுமளவுக்கு நன்றாக கொப்பளியுங்கள்.
- ஆடை அணிவது முதலில் வசதிக்காக என்பது நினைவிருக்கட்டும். உடை உடலை கவ்விப் பிடிக்கும் அளவுக்கு இறுக்கமாக இருக்கவேண்டாம். ரிலாக்ஸ்டாக இருக்கிறது என்று ஓவராக தொளதொளவும் வேண்டாம். கச்சிதமாக இருப்பதே அழகு.
- வேலைக்கு போகும் பெண்களுக்கு புடைவை கம்பீரமாக இருந்தாலும், இன்றைய சூழலில் அதை எப்போதுமே கட்டமுடிவதில்லை. சுடிதார், சல்வார் கமீஸ் சௌகரியமாக இருக்கிறது, புடைவை கட்டமுடியவில்லையே என்ற ஏக்கமின்றி அணியுங்கள்.
- வெளியூர் அல்லது உல்லாசப் பயணத்துக்கு ஜீன்ஸ் எப்போதும் வசதிதான். உடல் உழைப்பு அதிகம் தேவைப்படுகிற வேலை என்றாலும் ஜீன்ஸ் சௌகரியம், பணியிடத்தில் இடுப்பு அல்லது பின்புறம் முழுமையாக தெரியும் வகையிலான குட்டை டாப்ஸை தவிர்ப்பது நல்லது.
- கூந்தலில் சிக்கு விழுகிறது என்ற பயத்தில் பலர் வாரம் ஒருமுறை தலை குளிப்பதைக் கூட தவிர்க்கின்றனர். தலையை குனிந்தபடி கூந்தலை முன்னால் போட்டு கைவிரல்களால் கோதி அழுத்தி நன்றாக அலசி சுத்தம் செய்யவேண்டும். அழுக்கு எளிதில் நீங்குவதுடன், சிக்கு விழாது. வெயில் காலங்களில் வாரத்திற்கு மூன்று தடவையாவது தலைக்கு குளித்தால் நல்லது.
- வெயில் காலத்தில் உடற்பயிற்சி செய்யும்போது கூந்தலை இறுக்கிக் கட்டக்கூடாது. முடி அதிகமாக உதிரிந்து விடும். தூக்கி குதிரைவால் போட்டு கட்டலாம். ரப்பர் பாண்ட் போட வேண்டாம்.
- தலையை துடைக்க தனியாக டவல் வைத்துக்கொள்ளுங்கள். முகத்துக்கு அதே துண்டை பயன்படுத்தும்போது, தலையில் இருக்கக் கூடிய பொடுகு முகத்தில் பருக்கள் வரக் காரணமாகலாம்.
- பொறுப்புள்ள பணியில் இருப்பவர்கள் ஓரளவு டல் கலரில் பேன்ட்டும் அதே துணியில் முக்கால் கை சட்டையும் அணியும்போது அசத்தலாக தோற்றமளிக்கும். கேஷுவல் உடைகளை பொறுத்தவரை இது பெண்களுக்கானது, இது ஆண்களுக்கானது என்ற வித்தியாசம் மறைந்து வருவதால் எதெல்லாம் உடலுக்கும் வேலைக்கும் சௌகர்யமாக இருக்கிறதோ அதையெல்லாம் அணிய பழகிக்கொள்ள வேண்டும்.
- என்னதான் பொறுமையாக நடந்துகொண்டாலும் அதை மீறி ஆத்திரம் உண்டாக்கும் வகையில் யாராவது ஏதாவது பேசுவார்கள், செய்வார்கள். இது வீட்டுக்கும் அலுவலகத்துக்கும் பொதுவானது. ஆனால், நம்மால் கோபத்தை வெளிப்படுத்த முடியாத நிலை இருக்கும். இதனால், உணர்ச்சிகள் உள்ளேயே அடக்கப்பட்டு டென்ஷன் நிறைந்திருக்கும். இது மிகவும் ஆபத்தானது. இத்தகைய சந்தர்ப்பத்தில் என்னதான் முயன்றாலும் நம்மால் அழகாக காட்சியளிக்க முடியாது. தியானம், யோகாசனம், இசை கேட்பது, பாடுவது, நடனமாடுவது போன்ற ஏதாவது ஒரு பொழுதுபோக்கில் ஈடுபட்டு மன அழுத்தத்தை குறைக்க வேண்டும்.

# டுபாய் ரொட்டி



**தேவையான பொருட்கள்**

கோதுமை மா - 1/4 கி.கிராம், கரட் - 100 கிராம், லீக்ஸ் - 100 கிராம், உருளைக்கிழங்கு - 100 கிராம், கறி மிளகாய் - 100 கிராம், சிறிதாக வெட்டிய வெங்காயம் - 2 மேசைக்கரண்டி, சிறிதாக வெட்டிய பச்சை மிளகாய் - 2 மேசைக் கரண்டி, மிளகுத்தூள் - தேவையான அளவு, உப்புத்தூள் - தேவையான அளவு, மாஜரீன் அல்லது தேங்காய் எண்ணெய் - 2 மேசைக் கரண்டி, முட்டை - 1

**செய்முறை**

கரட், லீக்ஸ், உருளைக்கிழங்கு, கறிமிளகாய் என்பவற்றைக் கழுவி சிறிதாக வெட்டிக் கொள்க.

கோதுமை மாவை அரைத்து வைத்துக் கொள்க.

முட்டையை ஒரு பாத்திரத்தில் உடைத்துவிட்டு நன்கு அடித்துக் கொள்க.

தாச்சியில் ஒரு மேசைக்கரண்டி மாஜரீனையிட்டு காயவைத்து அதனுள் வெட்டிய மரக்கறி வகைகளைப் போட்டு அரைப் பதமாக வதங்கவிட்டு வதங்கிய பின் அதனுள் வெட்டிவைத்துள்ள பச்சை மிளகாய், வெங்காயம் என்பவற்றைப் போட்டு சேர்த்து மூடி வதங்க விடவும்.

மரக்கறி வகைகள் வதங்கியவுடன் உப்புத்தூள், மாவைப் பாத்திரத்திலிட்டு வதங்கிய மரக்கறிகளையும் போட்டுச் சேர்த்துக்கொண்டபின் அடித்துவைத்துள்ள முட்டையைச் சிறிது சிறிதாக ஊற்றி நன்கு பிசைந்து தண்ணீரும் அளவுக்கு விட்டு ரொட்டிமாப் பதத்திற்கு குழைத்து எட்டு சம அளவான உருண்டைகளாக உருட்டிவைத்துக் கொள்க.

பின்பு தோசை கல்லில் சிறிதளவு மாஜரீனையிட்டு பரவிக்கொண்ட பின் பிசைந்த மாக் கலவையை ஒவ்வொரு உருண்டையாக எடுத்து ஒரு அப்பளமளவு வட்டமாகத் தட்டி கல்லில் ஒவ்வொன்றாகப் போட்டு இருபுறமும் திருப்பி வேகவிட்டு எடுத்துக்கொள்க. ஆனால், ஒவ்வொரு முறையும் ரொட்டி வேகவைக்க முன் எண்ணெய் பூசுதல் வேண்டும்.

**குறிப்பு:**

இதற்கு முட்டை சேர்க்காமல் தண்ணீரை அளவிற்கு விட்டும் குழைத்துக்கொள்ளலாம். நோயாளிகளுக்காயின் மரக்கறி வகைகளை நீராவியில் அவித்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாமே சிவில் நிர்வாகம் தான்

## ஆனாலும் ஆக்கிரமிப்பு

வடக்கில் இப்போது இயல்புநிலைக்குத் வேகமாக திரும்பிக்கொண்டிருப்பதாக பலரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சிலரோ எல்லாமுமே திரும்பிவிட்டதாகவும் கூறுகின்றனர். சிலவேளை, அவ்வாறு சொல்ல நிர்ப்பந்திக்கவும் படுகின்றார்கள். ஜனாதிபதி கூட 'ஏ-9' வீதியோரம் சண்டையில் அழிந்துபோன கட்டடங்களைப் புனரமைக்குமாறு பணித்துள்ளார். இயல்பு நிலை ஏற்பட்டவிட்டதாக அறிவிக்க அது கூடத் தேவையாக இருக்கின்றது.

வடக்கில் அரச நிர்வாகம் செயற்பட்டுக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. அதிலும் குறிப்பாக, புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட வன்னியில் இப்போது முழுமையாக எல்லாமுமே சிவில் நிர்வாகம் தான். ஆனால் சாதாரண பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கூட படை அதிகாரிகளே கலந்துகொண்டிருக்கும் புகைப்படங்களை உள்ளூர் நாளிதழ்களில் சாதாரணமாகவே பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. அவற்றில் பெரும்பாலும் ஓரங்களில் அரச அதிகாரிகள் நின்றுகொண்டிருப்பதையும் காணக்கூடியதாகவும் இருக்கின்றது. அங்கு எது நடந்தாலும் எல்லாமுமே தமது கண்காணிப்பிலேயே நடக்கவேண்டும் என்பது படைத்தரப்பின் எதிர்பார்ப்புது. அது அமைச்சரது வருகை விடயமாக இருந்தாலும் சரி அல்லது புனர்வாழ்வு முகாமிலிருந்து வீடு திரும்பும் முன்னாள் போராளிகளின் விடயாமாக இருந்தாலும் சரி.

இலங்கையின் ஏனைய பகுதிகளைப் போன்றே வடக்கிலும் அரச நிர்வாகக் கட்டமைப்பு இருக்கின்றது. ஆனால், அதன் செயற்பாடுகள் வெறும் பெயரளவில் மட்டுமே உள்ளன எனப் பலரும் குற்றஞ்சாட்டுகின்றார்கள். அரச அதிபர், பிரதேச செயலர், கிராமசேவையாளரென ஒருபுறமும்; உள்ளூராட்சி, கல்வி மற்றும் மருத்துவம் என மறுபுறமுமாக பல்வேறு தளங்களில் பெயரளவில் இக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

வடக்கில் குறிப்பாக வன்னியில் படைத்தரப்பின்றி எதுவுமே இல்லையென்ற சூழலையே அரசு இப்போது ஏற்படுத்தி வருகின்றது. எந்தவொரு விழாவிலும் அப்பகுதிப் படை அதிகாரிகளே விருந்தினர்களாக அழைக்கப்படுகின்றனர். இவ்வாறு அழைக்கப்படுவதின் பின்னணியில் பல கேள்விகளுகான விடைகள் தொக்குநிற்கின்றன. அரச சார்பற்ற அமைப்புக்கள் வழங்கும் உதவி நிகழ்வுகளினில் கூட இவர்களின் பிரசன்னத்தக்கும் குறைச்சல் இல்லை. அமைச்சர்களுக்கு வழங்கப்படும் கௌரவத்தை படை அதிகாரிகளுக்கும் வழங்க அரசு கோருகின்றது.

ஆனாலும், இத்தகைய பிரசன்னம் படைத் தரப்பு மீதான மக்களது ஆதரவுப் பலத்தை ஏற்படுத்துவதற்கு அப்பால் வெறுப்பை ஏற்படுத்திவருகின்றமை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்கழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஆணைக்குழு அண்மையில் கூட்டமொன்றைக் கூட்டியிருந்தது.

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச சார்பற்ற தரப்புக்களென பலரும் அங்கு அழைக்கப்பட்டிருந்தனர். அங்கு கருத்து வெளியிட்ட பலருமே படைத் தரப்பின் சிவில் நிர்வாகத் தலையீடு பற்றியே காட்டமாகப் பேசினர். விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன. இக் கூட்டத்திற்கு இடம் ஒதுக்கி வழங்கியமைக்காகப் பாடசாலை அதிபர் மிரட்டப்பட்ட சம்பவம் இடம்பெற்றமை வேறுவிடயம்தான்.

கடந்த காலங்களில் யுத்த நெருக்குவாரங்கள் இருந்தன. அவ்வகையில் சிவில் நிர்வாகக் கட்டமைப்பை படைத்தரப்பு தனது கையில் வைத்திருந்தது. இராணுவ ரீதியில் சிவில் நிர்வாகம் பயன்படுத்தப்பட்டுமிருந்தது. ஆனால், இப்போதோ எல்லாமுமே முடிந்துவிட்டதாக அரசு கூறிக்கொண்டிருக்கின்றது. ஆனால், இப்போது இராணுவப் பிரசன்னத்தின் மத்தியில் சிவில் நிர்வாகத்தினை வைத்திருப்பது தேவையற்ற விடயமே. இராணுவத்தினரின் கண்காணிப்பில் வடக்கை வைத்திருப்பதற்கு அரசு எண்ணுகிறதா என்ற ஐயப்பாடு மக்கள் மத்தியில் உள்ளது.வீதிகளில் படையினர் இறங்கிய ஓரிரு நாட்களினுள்ளாயே குடாநாட்டினில் சட்டம், ஒழுங்கு திரும்பிய அதிசயத்தை எப்படி நம்புவதென பலருக்கு புரியவேயில்லை. வழமைபோலவே சட்டம், ஒழுங்கைப் பேணிய காவலர்களுக்கு நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிடுபவர்கள் தற்போதும் இருக்கின்றனர்.

அதிகரித்த இராணுவப் பிரசன்னம் உண்மையில் சிவில் நிர்வாக அதிகாரிகளை தங்கள் கடமைகளை சுமுகமாக ஆற்ற அனுமதிக்கவில்லையென்பதே உண்மையாகும். படையிலிருந்து ஒய்வு பெற்ற பின்னராக ஆளுநர், அரச அதிபரென இடம்பெறும் சிவில் நிர்வாகத்திலான அரச நியமனங்கள் கூட இராணுவ தலையீட்டின் ஒரு வகை உத்தியேயாகும்.

பெரும்பாலான சிவில் நிர்வாக அதிகாரிகள் இவ்வாறான கட்டமைப்புகளுக்கு இடையில் சேவையாற்றும்போது கட்டுப்பாடு மற்றும் அச்சுறுத்தல் போன்றவற்றுக் உள்ளாக நேரிடுகிறது. சேவை நீடிப்பு, பழிவாங்கல், இடமாற்றம் போன்ற நடவடிக்கைகளும் உள்ளன. சில வேளைகளில் மிரட்டல்கள் கூட விடுக்கப்படுகின்றன என சிவில் உத்தியோகத்தர்கள் சிலர் தமது ஆதாங்கத்தைத் தெரிவிக்கின்றனர். உண்மையில் மக்களது தேவைகள் மற்றும் அடிப்படைகட்டுமான வசதிகளை ஏற்படுத்தி வழங்கவேண்டியவர்களாக அதிகாரிகளே உள்ளனர்.

ஆனால், சிவில் நிர்வாக அதிகாரிகளது பொறுப்பின்மை அல்லது அசட்டைதன்மைக்கு காரணம் புரியாமலே இருகின்றது.

அண்மைக் காலங்களில் வன்னியில் மீள்குடியமர்வு, அரச காணிகள் பங்கீடு எனபவற்றில் அவ்வப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சாதாரண படை அதிகாரிகள் கூட தலையிடும் நிலையே உள்ளது.

யாழ்ப்பாணத்தில் இன்று சாதாரண குடும்ப விடயங்களுக்குக் கூட படை முகாம்களுக்குச் செல்ல மக்கள் உள்ளனர். இவ்வாறான செயற்பாடுகள் கலாசார ரீதியிலும் குடும்ப ரீதியிலுமாக பாதிப்பையே ஏற்படுத்தி வருகின்றன.

வடக்கின் அபிவிருத்தி இயல்புநிலை திரும்புவதிலேயே தங்கியிருக்கின்றதது. புதிய தொழில் முதலீடுகள் உள்ளிட்ட பலவற்றிற்கு இயல்புநிலை முக்கியமானது. அதிலும் குறிப்பாக, மக்கள் இயல்புவாழ்வை வாழ சிவில் நிர்வாகம் சுமுகநிலையை அடையவேண்டும்.

அத்தகைய சூழலினை ஏற்படுத்த வேண்டுமாயின் இராணுவப் பிரசன்னத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இதற்கான சந்தர்ப்பத்தை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அச்சந்தர்ப்பத்திலேயே 'வடக்கின் வசந்தம்' வீசும் என்பதே உண்மை.

**பாவலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

## முதன்முதலாக...

- உலகில் முதல் கிரிக்கெட் டெஸ்ட் தொடர் இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் அவுஸ்திரேலியாவில் 1877.03.17 அன்று ஆரம்பமாகியது.
- உலகின் முதலாவது துவிச்சக்கரவண்டி 1839 இல் இங்கிலாந்தில் அமைக்கப்பட்டது.
- உலகின் முதல் ஆகாயக் கப்பல் (பலூன்) 5.06.1783 இல் பிரான்ஸில் பறக்கவிடப்பட்டது.
- உலகின் முதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி 27.01. 1926 இல் இங்கிலாந்தில் ஒளிபரப்பப்பட்டது.
- உலகின் முதலாவது மோட்டார் வண்டி (பெற்றோலில் இயங்கியது)1885 இல் பென் என்னும் ஜேர்மனியரால் அமைக்கப்பட்டது.
- உலகின் முதல் புகையிரத இயந்திரம் ட்றைவித்திக் என்னும ஆங்கிலேயரால் 1801 இல் அமைக்கப்பட்டது.
- உலகின் முதலாவது இஸ்லாமியப் பெண் ஆட்சித் தலைவர் பெனாசீர் பூட்டோ. பாகிஸ்தானில் 1988 இல் பிரதமரானார்.
- முதல் முதலில் இராட்டோஸ்நெளங் என்பவர் கி.மு. 270 ஆம் ஆண்டில் உலக நிலப்பரப்பின் சுற்றளவு 24,850 மைல் என கணக்கிட்டார்.

*செல்வராசா சுசிதா,*
*தரம் - A/L*
*யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை*

# இவரே பெரியார்



*'பணியுமாம் என்றும் பெருமை சிறுமை*
*அணியுமாம் தன்னை வியந்து'*

'பணிவுடனிருத்தல் பெருமையுடையோர் இயல்பு. சிறியோர் தம் பெருமை தாமே பாராட்டுவார்' என்று உலகப் பொதுமறை தந்த வள்ளுவப் பெருமான் கூறுகின்றார்.

ஒரு மாவட்ட நீதிபதி, அவர் மிகவும் நேர்மையானவர் என்று எல்லோரும் கூறுவர். அவர் தனிப்பட்ட பயணமாக அயல் மாவட்டத்திற்குச் சென்று இருந்தார். திரும்பும் போது அவரது ஊர்தி கோளாறுக்குட்பட்டது. சீர் செய்ய நேரம் எடுக்கும் என்று திருத்தியவர் கூறினார்.

அவர் தான் நிற்கும் மாவட்டத்திற்கோ அரச அதிபருக்கோ இவ் விடயத்தை அறிவித்திருந்தால் அவர்களிடம் இருக்கும் சொகுசு வாகனத்தில் நீதிபதி செல்லவேண்டிய இடத்திற்கு கௌரவமாக அழைத்துச் சென்று இருப்பார்கள். அல்லது அவர் தனியார் சொகுசு வாகனத்தை வாடகைக்கு அமர்த்தி தனது பயணத்தை முடித்து அரசாங்கப் பணத்தில் கட்டணத்தையும் செலுத்தியிருக்கலாம். நீதிபதியின் அதிகாரப் படி மேற்சொன்னவை எல்லாம் சின்ன விடயமே.

ஆனால், அந்த பெருமகன் இவை ஒன்றுமே செய்யவில்லை. சாதாரண பேருந்தில் ஏறி பேருந்தின் பின் ஆசனத்தில் அமர்ந்து தனது பயணத்தைத் தொடர்ந்தார். கடும் புழுதியும், குண்டும் குழியுமான நெடுஞ்சாலையில் பேருந்து துள்ளி விழும்போது எவ்வித மாற்றமுமின்றி சிரித்த முகத்துடன் பயணத்தைத் தொடர்ந்தார்.

சோதனைச் சாவடி வந்தது. சோதனைக்காக ஏறிய படைச்சிப்பாயிடம் சாதாரண பொது மகன் போன்று தேசிய அடையாள அட்டையை எடுத்து நீட்டினார். படைச்சிப்பாயும் வாங்கிப் பார்த்துவிட்டுச் சென்றார்.

இந்த இடத்திலாவது தான் நீதிபதி என்று கூறியிருந்தாலோ அல்லது தனது நீதிபதிக்கான அடையாள அட்டையைக் காட்டியிருந்தாலோ படைச்சிப்பாய் 'சல்-யூட்' செய்து தனது மேலதிகாரிகளுக்கு அறிவித்து சொகுசான வாகனமொன்றில் ஏற்றி அனுப்பிவைத்திருப்பார்கள். ஆகக் குறைந்தது, பேருந்தின் முன் ஆசனத்திலாவது அமர்த்தி இருப்பார்கள்.

ஆனால், தற்பெருமை இல்லாத பெருமைக்குரிய நீதிபதி சாதாரண மக்கள் பேருந்தில் படும் துன்பத்தை தானும் அனுபவித்துப்பார்த்தார்.

'நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே' என்று ஔவைப் பாட்டி கூறியதுக்கமைய அப்பா கூறிய உண்மைக் கதையை எழுதியுள்ளேன்.

***நேசராஜ்குமார் வித்தியாசாகர்,***
*தரம்-7 சி, கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்*



ஆமை குளத்திற்குச் செல்வதற்கு வழியைக் காட்டுங்கள் பார்க்கலாம்....





தாவரங்களுக்கு குளோரொபில் (பச்சையம்) பிக்மென்ட் தான் பச்சை நிறத்தைக் கொடுக்கின்றது. சாந்தோபில் மஞ்சள் நிறத்தையும் கரோட்டின் என்பது ஒறேஞ் நிறத்தையும் மற்றும் அந்தோசயனின் என்பது சிவப்பு நிறத்தையும் கொடுக்கின்றன. இந்த பிக்மென்ட்கள் எல்லாம் தாவரத்தில் மறைந்துள்ளன. ஆனால், காலநிலை மாறும் போது குளிரில் குளோரொபில் மறைந்து மற்ற நிறமிகள் (பிக்மென்ட்கள்) வெளிக்காட்டப் படுவதால் நிறம் மாறுவதுபோல் தோற்றமளிக்கின்றன.



சிறுவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம். 117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

யுகானந்தன் யசிந்தன் தரம் 3A
சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

ச.கிரிசாந் தரம் 9C
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து விதிகளை மீறிய 4 பேருக்குத் தண்டம் விதிப்பு

கொடிகாமம்,

போக்குவரத்து விதிகளை மீறினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட 4 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்றது.

போக்குவரத்து விதிகளை மீறி மோட்டார் சைக்கிள்களைச் செலுத்திய 4 பேரைக் கைதுசெய்த பொலிஸார் அவர்களை சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இதில் மூன்று பேருக்குத் தலா 5 ஆயிரம் ரூபாவும், ஒருவருக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டமாக விதித்து சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதேவேளை, அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய உழவு இயந்திரச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றம் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது.

அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் 2 மாத சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் அத்தீர்ப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 70 வருடங்களுக்குமேலாக புனரமைக்கப்படாத வீதி

வரணி,

கொடிகாமம் - கச்சாய் பிரதேசத்திலுள்ள உடையார் வீதி சுமார் 70 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாகக் காட்சியளிப்பதாக பொது மக்கள் முறையிடுகின்றனர்.

இவ்வீதி பொது பாவனைக்கு உதவாத முறையில் உள்ளதாக பொது மக்கள் மற்றும் நலன் விரும்பிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சாவகச்சேரி பிரதேச சபை இது விடயத்தில் கவனம் செலுத்தாதுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எதிர்காலத்திலாவது மேற்படி பிரதேச சபை இவ்வீதிப் புனரமைப்பில் கவனம் செலுத்த வேண்டும் எனப் பொது மக்கள் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றனர்.

# இராணுவத்தினர் பொது மக்களுடன் இணைந்து இந்து மயானம் சிரமதானம்

வரணி,

கொடிகாமம் - பாலாவித்தாள் இந்து மயானம் கடந்த வாரம் இராணுவத்தினரினதும் பொது மக்களினதும் பங்களிப்புடன் சிரமதானம் மூலம் துப்புரவாக்கப்பட்டது.

பிரதேச மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து பிரதேச சமாதான நீதிவான் லயன் செ. சரவணமுத்துவின் முயற்சியினால் இம் மயானம் சீர்செய்யப்பட்டு பொது மக்களின் பாவனைக்கு இலகுவாக்கப்பட்டுள்ளது.

கெற்பெலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் உபாலிலாகே தலைமையில் படைத் தரப்பினரும் இச்சிரமதானத்தில் பங்கெடுத்தனர். சுமார் 100க்கும் மேற்பட்டவர்கள் இவ் வேலைத்திட்டத்தில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

# சனசமூக நிலையங்களின் சமாசம் அங்குரார்ப்பணம்

வரணி,

வரணி உப-அலுவலகப் பிரதேசத்தில் இயங்கும் சனசமூக நிலையங்கள் சார்பில் சமாசம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ் வைபவத்துக்கு தென்மராட்சிப் பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ. செல்வராணி மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை செயலர் செல்வி தர்சினி தியாகராசா ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

தலைவராக ஆ. சாந்தகுமார், உப- லைவராக இ. தங்கேஸ்வரன், செயலாளராக இ. சுதாகரன் , உப-செயலாளர் சி. அருணாசலம், தனாதிகாரியாக வே. இரத்தினசிங்கம் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக ச. பாலசுந்தரம், க. இராசையா, சி. தியாகேஸ் ,க. இராசரத்தினம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## சிரமதானம்

தவசிக்குளம்,

கூமாங்குளம் கிராமசேவையாளர் பிரிவில் டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சிரமதான நிகழ்வு கடந்த 29 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு ஆரம்பமானது.

இந்நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் அதிஷ்டசெல்வம், கிராமசேவை அலுவலர் பத்மநாதன் , சமு ர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பெருமளவிலான மக்களும் கலந்துகொண்டனர்.

# இன்றறக்ட் மற்றும் ரோட்டறிக் கழக அங்கத்தவர்களின் ஒன்றுகூடல்

## சர்வதேச தலைவர் பங்கேற்பு

யாழ். மாவட்ட 'இன்றறக்ட்' கழக உறுப்பினர்கள் மற்றும் ரோட்டறிக் கழக அங்கத்தவர்களின் ஒன்றுகூடல் நேற்று முன்தினம் யாழ். பரியோவான் கல்லூரியில் பாடசாலை அதிபர் ஞானபொன்ராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு சர்வதேச ரோட்டறிக் கழகத்தின் தலைவர் ரேகிங் ஸ்மித், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.ஆர். ரவீந்திரன் , யாழ். மாவட்ட ரோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஈ. சரவணபவன் மற்றும் ரோட்டறிக் கழக அங்கத்தவர்கள், பாடசாலைகளில் இன்றறக்ட் கழக அங்கத்துவ மாணவர்கள் என பெருமளவிலானோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின்போது சர்வதேச ரோட்டறிக் கழகத் தலைவர் ரேகிங் ஸ்மித் உரை நிகழ்த்தினார்.

பின்னர் றோட்டறிக் கழக அங்கத்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டதுடன், யாழ். மாவட்ட றோட்டறிக் கழகத்தின் சார்பாக சர்வதேச றோட்டறிக் கழகத் தலைவருக்கு நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

அத்துடன், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவர்களின் நடன நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய யாழ். மாவட்ட ரோட்டறிக் கழகத் தலைவர் ,

ரோட்டறிக் கழகம் பல சமூகநலத் திட்டங்களை யாழ். மாவட்டத்தில் செயற்படுத்தி வருகிறது. அதன் ஒரு கட்டமாக இன்று (நேற்று முன்தினம் ) 50 மி[illegible]யன் ரூபா செலவில் குடத்தனை - றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையை புனரமைத்துத் திறந்துவைத்துள்ளது.

அத்துடன், எதிர்வரும் இரு மாதங்களுக்கு பல திட்டங்களை றோட்டறிக் கழகம் செயற்படுத்தவுள்ளது. அதன் ஒரு பகுதியாக முன்பள்ளிக் கல்வித் திட்டம் ஆரம்பிக்கவிருக்கிறோம். இதன்மூலம், சுமார் 175 முன்பள்ளி ஆசிரியர்கள் பயிற்றப்படவிருக்கின்றனர். இவர்களுக்கு நவீன தொழில்நுட்ப அறிவை வளர்க்கும் பொருட்டு பல செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன - என்றார்.

## கணித பாட செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று காலை 8.00 மணிக்கு சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.





கோப்பாய் வளலாய் கிழக்கில் கிராம அபிவிருத்தி அமைப்பின் அலுவலகத் திறப்பு விழாவில் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் மீள் எழுச்சித் திட்ட யாழ்.மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர் எஸ்.சுதர்சன் நிற்பதையும் பிரதேச செயலர் அலுவலகப் பெயர்ப்பலகையினைத் திரைநீக்கம் செய்வதனையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஏழாலை நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில மொழியைக் கற்றுக்கொண்டால் எவ்வித போட்டிச் சூழலிலும் வெற்றிபெறலாம்

## பேராசிரியர் மா. நடராஜசுந்தரம்

ஆங்கில மொழியைக் கற்பதனால் பல வித போட்டிச் சூழலிலிருந்து நாம் வெற்றிபெற முடியும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வணிக மற்றும் முகாமைத்துவ கற்கை நெறிகள் ஆங்கிலத்துக்கு மாற்றப்பட்டுள்ளதால் மாணவர்களின் வேலை வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன. அதற்காகத் தமிழை நாம் மறந்து விடக் கூடாது. வணிகத்துறை ஆங்கிலத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் தமிழ் அழிந்துவிடுமென்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தல்ல என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக - முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் தெரிவித்தார்.

யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தின் வணிக மாணவர் மன்றத்தின் வணிகஜோதி இதழ் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், எமது வாழ்க்கையில் நாம் நேர ஒழுங்கை சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். நேரம் ஒரு முறைதான் வரும். போனால் அது திரும்பி வரப் போவதில்லை. நேரத்தை சரியாகக் கடைப்பிடித்து வாழும் ஒருவனால் நிச்சயமாக வாழ்வில் முன்னேற்றத்தை அடையமுடியும். அவன் முழு மனிதனாக உருவாகுவதற்கு நேர ஒழுங்கு உதவியாக அமைகின்றது.

எந்தவொரு தொழிலைச் செய்வதாக இருந்தாலும் சரி, அல்லது எந்தவொரு செயற்பாட்டைச் செய்தாலும் சரி, முதலில் தேவை அர்ப்பணிப்பாகும். அர்ப்பணிப்பு எங்குள்ளதோ அங்கே முன்னேறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. இது சிக்கலான காலம். அதிலிருந்து விடுபடுவதற்கு எங்களை நாங்கள் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

மாணவர்களாகிய நீங்கள் சிறந்த கல்வியோடு விளையாட்டுத்துறையிலும் உயர்வடைய வேண்டும். நேர்முகப் பரீட்சைகளில் கல்விச் சான்றிதழ்களோடு விளையாட்டுச் சான்றிதழ்களையும் பார்வையிடுகின்றார்கள். விளையாட்டில் சிறந்து விளங்கிய பலர் உயர் பதவிகளை வகிக்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் - வணிகபீட சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி ந. நிமலதாசனும், வெளியீட்டுரையை யாழ். கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. மாணிக்கமும் நிகழ்த்தினர்.

நூலினுடைய முதற்பிரதியை பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவரும் யாழ். மாநகர சபை உறுப்பினருமான எஸ். விஜயகாந் பெற்றுக்கொண்டார்.




# சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆன்மிகச் சொற்பொழிவு

வடமராட்சி,

தொண்டைமானாறு - சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப்பேரவையினால் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் இன்று முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு 'சிந்தனை செய்' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இச் சொற்பொழிவை செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல் நிகழ்த்தவுள்ளார்.

பேரவை நிர்வாக உறுப்பினர் எஸ். அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை ஏற்பாடு செய்துள்ளது.

# 'வதிரேஸ்வரஸ்தம்' ஒலிப்பேழை வெளியீடு

(அலுவலக நிருபர்)

'வதிரேஸ்வரஸ்தம்' ஒலிப்பேழை வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மூளாய் - வதிரன்புலோ சித்திவிநாயகர் திறந்தவெளி அரங்கில் கா. பார்த்திபன் தலைமையில் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர்களான மா. வேதநாதன் மற்றும் எஸ். சிவலிங்கராஜா, முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா, இலங்கை ஒலி

பரப்புக் கூட்டுத்தாபன சிரேஸ்ட அறிவிப்பாளர் ஜெயகிருஷ்ணா மற்றும் கிண்ணியா உதவி பிரதேச செயலாளர் ச. கிருஷ்னேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் இறுதியில் கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.குடாநாட்டு வர்த்தக நிலையங்களில் கிரிக்கெட் போட்டிகளை பார்க்கும் ரசிகர்கள்



நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்திய பாகிஸ்தான் கிரிக்கெட் அரையிறுதி போட்டியினை கிரிக்கெட் ரசிகர்கள் மானிப்பாய் சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் அகலத்திரையில் கண்டுகளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:அஸ்வின்)

வடமராட்சி,

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பைப் பார்ப்பதில் யாழ். குடாநாட்டு இளைஞர் - யுவதிகள் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வடமராட்சி உட்பட குடாநாட்டின் பிரதான பட்டினங்களில் உள்ள தொலைக்காட்சி, கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையங்களிலும் காட்சியறைகளிலும் வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக தொலைக்காட்சிப் பெட்டிகளில் நிகழ்வுகள் பலவும் ஒளிபரப்பப்படுவது வழக்கம். அவ்வாறு ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சிப் பெட்டிகளில் பத்தாவது உலகக் கிண்ணப்போட்டிகள் இரவு பகலாக ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

வர்த்தக நிலையங்களிலிருந்து ஒளிபரப்பப்படும் இப்போட்டிகளை இளைஞர் யுவதிகள் வீதி ஓரங்களில் ரசித்துவருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதனால், குறிப்பிட்ட பட்டினங்களில் வீதிப்போக்குவரத்துக்களில் நெரிசல் ஏற்படுகின்றது.

# கலை, இலக்கியச் சங்க கிளை அங்குரார்ப்பணம்

நல்லூர்,

அகில இலங்கை கலை, இலக்கிய சங்கத்தின் கிளை ஒன்று அம்பாறை மாவட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது.

இவ் அங்குரார்ப்பண நிகழ்வு தம்பிலுவில் - திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதீன மண்டபத்தில் க. இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் அகில இலங்கை கலை, இலக்கிய சங்கத்தின் தலைவர் பண்டிதர் பொன். சுகந்தனும் கலந்துகொள்வார்.

# பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற கந்தபுராண கதை படிப்பு நிகழ்வு நிறைவு

வடமராட்சி,

பருத்தித்துறை - தும்பளை நெல்லண்டை அருள்மிகு பத்திரகாளி அம்மன் கோவிலில் கடந்த இரு மாதங்களாகத் தொடர்ந்து நடைபெற்றுவரும் கந்தபுராண கதைப் படிப்பு இன்று முதலாம் திகதி வெள்ளிக்கிழமை திருக்கல்யாணப் படிப்புடன் நிறைவுபெறுகிறது.

நாளை 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு இடம்பெறும் வளந்துப்பூசையுடன் அன்று மாலை அன்னதானமும் மறுநாள் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிறைமணிப் பூசையும் இடம்பெறவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத்தில் புதிய சபைகளின் பணிகள் இன்று ஆரம்பம்

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள, அக்கரைப்பற்று மாநகர சபை, ஏறாவூர் நகர சபை, இறக்காமம் பிரதேச சபை என்பனவற்றின் பணிகள் இன்று 01 ஆம் திகதி முதல் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

புதிய உள்ளூராட்சி மன்றங்கள் தடையின்றி இயங்குவதற்கான நடவடிக்கைகளை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.உதயகுமார் மேற்கொண்டுள்ளார்.

ஆணையாளர் உதயகுமார், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் சகிதம் குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு நேரடி விஜயம் மேற்கொண்டு உரிய பணிப்புரைகளை வழங்கினார்.

அக்கரைப்பற்று பிரதேச சபை இயங்கிய கட்டடத்தில் புதிய அக்கரைப்பற்று மாநகர சபையும், அக்கரைப்பற்று முகமதியாபுரம் பொது நூலக கட்டடத்தில் அக்கரைப்பற்று பிரதேச சபையும் இயங்கவுள்ளன. இறக்காமம் பிரதேச சபை அதற்குரிய புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

புதிய அலுவலகங்களுக்கு தேவையான ஆளணியினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெற்றிடம் நிலவும் ஆளணியினரை வேறு திணைக்களத்திலிருந்து இடமாற்றம் மூலம் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ.ஜே.எம் இர்ஷாட் தெரிவித்தார்.

# தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக சமஷ்டியையே முன்வைத்தார் தந்தை செல்வா

## முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்

காங்கேயனோடை,

தந்தை செல்வா தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக சமஷ்டியையே முன்வைத்தார் என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் புதன்கிழமை மாலை நடைபெற்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தந்தை செல்வா செய்த ஒப்பந்தமும் தனி நாட்டு கோரிக்கையல்ல. சமஷ்டியை அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்தது. இன்று அதற்கு மாற்றமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளாயினும் சரி அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாயினும் சரி அவர்கள் செய்து கொண்ட சத்தியப்பிரமாணத்தை மீறியே செயற்படுகின்றனர்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியானது தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் ஒருபோதும் பின்நிற்காது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்கா விட்டாலும் பெரும்பான்மையான வாக்கினைப் பெற்றுள்ளோம்.

தெரிவு செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் திறமைமிக்கவர்களாக செயற்பட வேண்டும்.

யாருக்கும் பயப்பட வேண்டிய எந்த அவசியமும் இல்லை. கிராம மக்களுக்கு எல்லா வகையிலும் சேவையாற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும். கடின உழைப்புடன் செயற்பட்டால் மாத்திரம் தான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை வளர்த்தெடுக்க முடியும் அதற்காக அனைத்து உறுப்பினர்களும் பாடுபடவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# றோஸ் கரிட்டீஸ் விசேட செயற்றிட்டத்தின் பயனாக பரீட்சை அடைவு வீதம் அதிகரிப்பு

காரைதீவு,

கல்முனை றோஸ் கரிட்டீஸ் ஸ்ரீலங்கா கடந்தாண்டு மேற்கொண்ட க.பொ.த (சா/த) வகுப்புக்களுக்கான விசேட செயற்றிட்டத்தின் பலனாக அடைவு மட்ட வீதம் அதிகரித்துள்ளது.

கல்முனை வலயத்தில் மேற்கொண்ட விசேட செயற்றிட்டத்தால் கல்முனை இ.கி.மி. மகா வித்தியாலயத்தில் 44 வீதமாகவிருந்த அடைவு மட்ட வீதம் 61 வீதமாக அதிகரித்துள்ளது.

கல்முனை வெஸ்லிக் கல்லூரி அடைவு மட்டவீதம் 62வீதமாக இருந்து 67 வீதமாக அதிகரித்துள்ளது. காரைதீவு இ.கி.மி. பெண்கள் பாடசாலை அடைவு மட்டம் 82 வீதமாக மாறியுள்ளது.

சம்மாந்துறை வலயத்தில் தாருஸ்ஸலாம் மகாவித்தியாலயத்தில் 33 வீத பெறுபேற்று வீதம் 44 வீதமாகவும் வேப்பையடி கலைமகள் வித்தியாலயம் முதற் தடவையில் 65 வீதமாகவும் உள்ளது.

வேப்படித் தோட்டம் வாணி வித்தியாலயம் நாவிதன் வெளி மகா வித்தியாலயம், ஆகியன 64 வீதம் மற்றும் 48 வீதமாக உள்ளது.

றோஸ் கரிட்டீஸ் வெளியிட்டுள்ள புள்ளிவிபரப் பதிவேட்டில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

# த.ம.வி. புலிகள் கட்சியின் புதிய உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்

காங்கேயனோடை,

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பில் போட்டியிட்டு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இவர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் வைபவம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பில் உள்ள தலைமையலுவலகத்தில், நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான பி. பிரசாந்தன், எட்வின் சில்வா, கிருஸ்ணானந்தராசா, அற்புதராசா மற்றும் அக்கட்சியின் செயலாளர் கைலேசராசா உட்பட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது அக்கட்சியில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்ட ஆலையடிவேம்பு பிரதேச சபை உறுப்பினர் பூபாலபிள்ளை நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் ஏ.நிதர்ஸன், வெருகல் பிரதேச சபை உறுப்பினர் திருமதிதேவதாஸ் சந்திரமணி ஆகியோர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

# முறையான நிர்வாக நடைமுறைகளை கடைப்பிடிக்காது ஏனோதானோ மனநிலையில் தொழிற்படுவதாக கவலை

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

பதிற், பாடசாலை நடைபெறும் சனிக்கிழமை தினங்களில் அக்கரைப்பற்று கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் முறையான நிர்வாக நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது ஏனோ தானோ மனோ நிலையில் தொழிற்படுவதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் வெள்ள அனர்த்தம் காரணமாக பாடசாலை நடைபெறாது மூடப்பட்ட நாட்களுக்கு சனிக்கிழமைகளில் பதிற் பாடசாலை நடத்தி ஈடு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு பதிற் பாடசாலை நடைபெறும் தினங்களில் மாணவர்கள் வகுப்பறை கற்பித்தலின்றியும் முறையான நேர ஒழுங்கின்றியும் அலைக்கழிக்கப்படுவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

பதிற்பாடசாலை தினங்களில் ஆசிரியர் மற்றும் மாணவர்கள் வரவு குறைவடைவதாகவும் இதன் காரணத்தினாலேயே சீர்கேடு இடம் பெறுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. பதிற்பாடசாலை நடத்தப்படும் தினங்களில் மாணவர்கள் வழமையான நேரத்தை விடவும் முன்னரே வெளியேற்றப்படுவதனால் அவர்களை பெற்றோர் வீடுகளுக்கு அழைத்துச் செல்வதிலும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இவை குறித்து கல்வி அதிகாரிகள், அதிபர்கள் கவனம் செலுத்த வேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சிறைச்சாலை ஆலயத்தில் சங்காபிஷேகம்

மட்டக்களப்பு சிறைச்சாலையில் அமையப்பெற்றுள்ள ஸ்ரீ சித்திரவேலாயுத ஆலயத்தின் சங்காபிஷேகப் பெருவிழா, சிறைக்கைதிகள் மற்றும் சிறை அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் நிறைவுபெற்றது.

சிறைச்சாலை அத்தியட்சர் கித் சிறி பண்டார தலைமையில் நடைபெற்ற உற்சவத்தில் நலன்புரி அதிகாரி எஸ். ஸ்ரீனிவாசன் உட்பட நலன்புரிச்சங்க அதிகாரிகளும் பங்கு கொண்டனர்.

108 சங்குகள் வைத்து சங்காபிஷேகம் நடத்தப்பட்டதுடன், விசேட பூசை வழிபாடுகள் நாட்டின் அமைதி சமாதானத்திற்கான பிரார்த்தனை உட்பட பல சமய வழிபாடுகள் இடம்பெற்றன.

# சிறைக் கைதிகளுக்கு கல்வி அறிவூட்டல் செயலமர்வு

மட்டக்களப்பு நலன்புரி சங்கம் ஏற்பாடு செய்திருந்த சிறைக்கைதிகளுக்கு ஒரு நாள் கல்வி அறிவூட்டல் செயலமர்வு சிறைச்சாலை நலன்புரி அதிகாரி எஸ். ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்றது

சிறைச்சாலை அத்தியட்சர் கித்சிறி பண்டார பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில், மட்டக்களப்பு கல்வித்திணைக்கள முறைசாரா கல்வி இணைப்பாளர் திருமதி எஸ்.கிருபாகரன் விசேட உரை நிகழ்த்தினார்.

கல்வித் திணைக்கள அதிகாரிகள், உயர் அதிகாரிகள், நலன்புரிச்சங்க உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சம்பள உயர்வை ஆவலுடன் எதிர்பார்க்கும் தோட்ட தொழிலாளர்கள்

இராகலை,

தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடனான பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்புக்களின் சம்பள கூட்டொப்பந்தம் காலாவதியாகியுள்ள நிலையில் புதிய சம்பள உயர்விற்கான கூட்டொப்பந்த முடிவுகளை அறிவதில் தோட்ட தொழிலாளர்கள் பெரும் ஆவலுடனும் அக்கறையுடனும் எதிர்பார்த்துள்ளனர்.

கடந்த காலங்களில் தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக மேடைகளில் முழங்கியும் அறிக்கைகள் விடுத்தும் பெருந்தொகையினை பெற்றுத் தருவதாக தோட்ட தொழிலாளர்களுக்கு மலையக தலைமைகள் வாக்குறுதி அளித்த போதும் இறுதியில் கிடைத்ததோ மிகவும் அற்ப சம்பளமே. இதனால் தொழிலாளர்கள் பெருத்த ஏமாற்றமும் கவலையும் அடைந்திருந்தனர்.

இவ்வருடம் பெரும்பாலான தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 500 ரூபாவும் சில தொழிற்சங்கங்கள் நாளாந்தம் 700 சம்பள உயர்வும் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை எழுப்பியுள்ளன.

மலைபோல விலைவாசி உயர்ந்துள்ள நிலையில் குடும்பத்திலுள்ளவர்களின் உணவுக்கே பெருங் கஷ்டப்படும் தொழிலாளர்கள் பிள்ளைகளின் கல்வி சுகாதார மற்றும் செலவுகளுக்கும் செய்வதறியாது உள்ளனர்.

# அபிவிருத்தி வேலைத்திட்ட இணைப்பாளர்கள் இருவர் இனந்தெரியாதோரினால் தாக்குதல்

பதுளை,

ஊவா மாகாண முதலமைச்சர் சசிந்திர ராஜபக்ஷவின் அபிவிருத்தி வேலைத் திட்ட இணைப்பாளர்கள் இருவர், வெள்ளை வேனில் வந்த இனந் தெரியாத வர்களினால் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில், ஆபத்தான நிலையில், மொனராகலை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவம், குடாஓயா என்ற இடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இது தொடர்பாக, மொனராகலை பொலிஸ் அதிபர் கப்பில ஜய சேக்கர விற்கு செய்யப்பட்ட முறைப்பாட்டினையடுத்து, பொலிஸ் அதிபர் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளார். எனினும் இது தொடர்பில் இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

முதலமைச்சரின் இணைப்பாளர்கள் கடமை நிமித்தம் மொனராகலையிலிருந்து, கெப் வாகனத்தில் தனமல் விலைக்குச் சென்று, மீண்டும் மொனராகலைக்கு திரும்பிக் கொண்டிருந்த போது, கெப் வாகனத்தை துரத்தி வந்த வெள்ளை வேன், குடா ஓயா என்ற இடத்தில் கெப் வாகனத்தை வழி மறித்து தாக்குதலை மேற் கொண்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

வெள்ளை வேனில் வந்து தாக்குதலை மேற்கொண்டவர்கள் இராணுவத்தினரின் உடையையொத்த உடையினை அணிந்திருந்ததுடன், முகமூடிகள் அணிந்த நிலையில் ஆயுதங்களை ஏந்தியிருந்தார்களென மொனராகலை பொலிஸ் அதிபரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத் தாக்குதலை மேற் கொண்டவர்களைக் கண்டுபிடித்து, கைது செய்யும் நடவடிக்கைகளை மொனராகலை மாவட்டத்தின் அனைத்து பொலிஸ் நிலையங்களின் பொலிஸார் எடுத்துள்ளனர்.

# பதுளை மாவட்ட யாசக சிறுவர்களின் மேம்பாடுகளுக்கான அறக்கட்டளை நிதியம்

பதுளை,

பதுளை மாவட்டத்தில் யாசகம் செய்யும் சிறுவர்களைக் கைது செய்து அவர்களின் மேம்பாட்டு செயற்பாடுகளுக்கென அறக்கட்டளை நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் அந்நிதியத்திற்கு ஆரம்ப நிதியாக ஒரு இலட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு பதுளை மாவட்ட அரச அதிபர் ரோகண கீர்த்தி திசாநாயக்கவை முன்னிலைப்படுத்தி மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் நேற்று முன்தினம் பதுளை அரச செயலகத்தில் வைபவரீதியாக இடம்பெற்றது.

பதுளை மாவட்டத்தின் வெலிமடை நகரில் யாசகம் செய்து வந்த 21 சிறுவர்களை மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் கைது செய்து மாவட்டத்தின் காப்பகமொன்றில் தங்கவைத்து பராமரித்து வருகின்றனர், மேலும் மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் யாசகம் புரிந்து வரும் சிறுவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இச்சிறுவர்களின் பராமரிப்பு மற்றும் கல்வி சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேற்கொள்ள பெரும் நிதி விரயமாவதினால் அதனை ஈடுசெய்யும் வகையிலேயே இவ் அறக்கட்டளை நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். வசதி படைத்தவர்களும் இந்நிதியத்திற்கு தமது பங்களிப்புக்களை வழங்க முடியுமென்றும் கோரிக்கைகள் விடுத்துள்ளனர்.

# வேன் - ஆட்டோ மோதி விபத்து கைக்குழந்தை உட்பட மூவர் படுகாயம்

## அம்புலன்ஸ் - சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்

பதுளை,

வேனும் - ஆட்டோவும் நேருக்கு நேராக மோதி விபத்துக்குள்ளாகியதில் ஆட்டோவில் பிரயாணம் செய்த மூவர் படுகாயங்களுக்குள்ளாகி வெலிமடை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் வெலிமடைப் பகுதியின் பொரலந்த எரபெத்த என்ற இடத்தில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

மரண வீடொன்றிற்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த வானும் எதிராக வந்து கொண்டிருந்த ஆட்டோவுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாயின.

இந்த விபத்தில் காயங்களுக்குள்ளானவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன் மனைவி கைக்குழந்தை ஆகியோராவர். கைக்குழந்தையினதும் அக்குழந்தையின் தாயுமே ஆபத்தான நிலையிலிருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

விபத்து குறித்து வெலிமடை பொலிசார் ஸ்தல விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் விபத்துக்குள்ளான வேன் சாரதியை கைது செய்துள்ளனர்.

இதேவேளை அம்புலன்ஸ் வாகனமும் - மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேராக மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற நபர் கடுங் காயங்களுக்குள்ளாகி பதுளை அரசினர் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து நேற்று முன் தினம் இரவு பதுளை கேட்ட கொடை என்ற இடத்தில் இடம் பெற்றுள்ளது.

விபத்தின் போது காயங்களுக்குள்ளான நபரின் உடல்நிலை ஆபத்தானதாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவ்விபத்தில் மேமலை பெருந்தோட்டத்தைச் சேர்ந்தவரே காயங்களுக் குள்ளானவராவார்.

பதுளைப் பொலிசார் இவ்விபத்து குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அம்புலன்ஸ் சாரதி பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

# ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதுளை மாவட்டத்திற்கு இரு நாள் விஜயம்

பதுளை,

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நாளையும் நாளை மறுதினமும் பதுளை மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

**இரு உள்ளூராட்சி மன்றங்கள் ஐ.தே.க வசமாகியதால் அம்மன்றங்களின் ஆரம்ப நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் வகையில் அழைக்கப்பட்டிருக்கிறார்.**

பதுளை மாவட்டத்தின் இரு உள்ளூராட்சி மன்றங்களை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியதினால் அம்மன்றங்களின் ஆரம்ப நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளும் வகையிலேயே ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் அழைக்கப்பட்டிருக்கின்றார்.

மாவட்டத்தின் பண்டாரவளை மாநகர சபை மற்றும் பசறை பிரதேச சபை ஆகியனவே ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றிய உள்ளூராட்சி மன்றங்களாகும்.

நாளை 2ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பசறைப் பிரதேச சபையின் ஆரம்ப நிகழ்வும் நாளை மறுதினம் 3ஆம் திகதி முற்பகல் பண்டாரவளை மாநகர சபையின் ஆரம்ப நிகழ்வும் நடைபெறவுள்ளன. பண்டாரவளை மாநகர சபையின் முதல்வராக எல்.டபிள்யூ. சமிந்த விஜயசிரியும், பிரதி முதல்வராக அனுர ஜயசிங்க மத்துஹேவாவும், பசறைப் பிரதேச சபையின் தலைவராக ஏ.எம்.எம்.காதர் மற்றும் உபதலைவராக ஆர்.எம்.ஞான திலக்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விரு நிகழ்வுகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பசறைத் தேர்தல் தொகுதியின் பிரதம அமைப்பாளரும் ஊவா மாகாண சபை உறுப்பினரும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளருமான க.வேலாயுதம் மற்றும் பண்டாரவளை தேர்தல் தொகுதி அமைப்பாளரும் ஊவா மாகாண சபை உறுப்பினருமான ரவி குணவர்த்தன ஆகியோர் துரிதமாகச் செய்து வருகின்றனர்.

# பாதைபுனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

இறத்தோட்டை,

மத்திய மாகாண கைத்தொழில் விளையாட்டு மகளிர் விவகார மற்றும் தமிழ் கல்வி அமைச்சர் அனுஷியா சிவராஜா மாத்தளை கம்மடுவ வீடமைப்பு திட்டப் பாதை புனரமைப்புக்காக மூன்று இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

அம்பங்கங்கை பிரதேச சபையின் உபதலைவர் என் யோகராஜாவின் வேண்டுகோளிற்கிணங்க மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் கற்போம்

### பறவைகள் பற்றி பார்ப்போம்

கோழி - கிக்கிலி

சேவல் - குக்குளா

குயில் - கொவுலா

பருந்து - உகுஸ்சா

வீட்டுக்குருவி - கேகுருல்லா

காகம் - கபுடா

கிளி - கிரவா

கொக்கு - கொகா

மைனா - மயினா

புறா - பரவியா

பெங்குயின் - பென்ங்வின்

தாரா - தாராவா

மயில் - மொனரா

தீக்கோழி - பெஸ்ரா

அன்னப்பறவை - அங்சயா

தூக்கணாங்குருவி - வடுகுருல்
லா

ஆந்தை - சிலுபகமுனா

### மரக்கறி

பூசனிக்காய் - வட்டக்காய்

தக்காளி - தக்காளி

உருளைக்கிழங்கு - அர்தாபல்

பயற்றங்காய் - மேகரல்

பசளி - நிவிதி

கத்தரிக்காய் - படு

கறி மிளகாய் - மாலுமிரிஸ்

தீரச்சுரைக்காய் - தியலபு

வட்டுக்காய் - தலனபடு

கோவா - கோவா

கரட் - கெரட்

பீர்க்கங்காய் - வெடகொழு

பாகற்காய் - கரவில

வற்றாளைக்கிழங்கு - பதல

பீட்ரூட் - பீட்ரூட்

கெக்கரிக்காய் - பிபிஞ்சா

வாழைப்பூ - கெசல்முவ

வெண்டிக்காய் - பண்டக்கா

ஈரப்பலாக்காய் - தெல்

பலாக்காய் - கொஸ்

புடலங்காய் - பதொல

பச்சைமிளகாய் - அம்பிரிஸ்

லீக்ஸ் - லீக்ஸ்

புளி - சியம்பலா

இஞ்சி - இகுரு

பெரிய வெங்காயம் - பொம்பயி
லூணு

கொஹிலை - கொகில

வெள்ளைப்பூடு - சுதுலூணு

**மீண்டும் அடுத்த**
**பாடத்தில் சந்திப்போம்**
**● வேலு. ஸ்ரீவராஜா**

---

*கைது செய்து நிலவை*
*காதல் செய்து*
*தோல்வியானேன்*
*வானுக்கு இல்லாத உரிமை*
*எனக்கு எதற்கென்று*
*அவள் நினைத்தாளோ*
*புரிவில்லை...*

நீ நினைக்க மறந்தாலும்
உனை மறக்காது
வாழ்கிறேன்

சிறகொடிக்கப்பட்ட
பட்டாம் பூச்சியாய்
துயரத்தின் விதைப்புகளில்
ஏன் இந்த அவல வாழ்வு

நிவாரணம் தாருமென்று
கைகளை ஏற்தினோம்
எம்மை நிர்வானமாக்கி
விட்டார்கள்...

வே.அகிலேஸ்வரன்

---

## Telephone Conversation between two Friends one from Jaffna other from Colombo.

## கொழும்பிலிருக்கும் நண்பனும் யாழ்ப்பாணத்திலிருக்கும் நண்பனுக்குமிடையிலான தொலைபேசி உரையாடல்.

***Namely :*** Robert (Jaffna) & Nithees (Colombo)

அவர்களின் பெயர்கள் - ரொபேட் (யாழ்ப்பாணம்), நிதிஷ் (கொழும்பு)

Robert is Calling Nithees on his mobile phone and Nithees answers the call.

ரொபேட் தொலைபேசியில் நிதிஷுடன் உரையாடுகின்றான்.

*Nithees :* (Identifies the calling number and answers the call). yes Robert. What is the matter?

***நிதிஷ்:*** (தொலைபேசி இலக்கத்தை அடையாளம் கண்டுகொண்டு), ஆம், ரோபேட் என்ன விடயம்?

*Robert:* How are you getting on? how is life over there? (Colombo)

***ரொபேட்:*** எப்படி இருக்கிறாய்? எப்படி உனது வாழ்க்கை போகின்றது?

*Nithees:* I am fine. I am busy with my lectures and seminars. O.K. how are things over there?

***நிதிஷ் :*** நான் நலம். நான் விரிவுரைகளோடும் கருத்தரங்குகளோடும் ஓய்வில்லாமல் இருக்கின்றேன். சரி, உவ்விடத்தில் வேறு என்ன புதினம்?

*Robert:* Everything is ok. I have a glad news for you?

***ரொபேட்:*** எல்லாம் நன்றாக போகின்றது. நான் உனக்கு நல்ல செய்தியொன்று சொல்லப் போகின்றேன்.

*Nithrees:* What is that? tell me will you?

***நிதிஷ் :*** என்ன செய்தி என்று சொல்.

*Robert:* My elder sister is getting married next month.

***ரொபேட்:*** எனது மூத்த சகோதரிக்கு எதிர்வரும் மாதம் திருமணம் நடத்தவிருக்கின்றோம்.

***Nithees:*** How glad. actually I am very glad to understand that. because your parents have been searching for a bridegroom for a longtime - they were really sad. now it is ok.

***நிதிஷ்:*** சந்தோசம். உண்மையில் இதைக் கேட்டபோது மகிழ்ச்சியாக இருக்கின்றது. ஏனென்றால், உன்னுடைய பெற்றோர் நீண்டகாலமாக சகோதரிக்குமணமகன் பார்த்தவண்ணம் இருந்தார்கள். அவர்கள் உண்மையில் கவலை கொண்டிருந்தார்கள். இப்பொழுது எல்லாம் சரிதானே.

***Robert:*** Good heaves. Proposed bridegroom is now is U.K. working as an accountant is a reputed firm.

***ரொபேட்:*** நல்ல அதிஷ்டம். மணமகன் லண்டனில் பிரபல நிறுவனத்தின் கணக்காளராக பணிபுரிகின்றார்.

***Nithees:*** Anyway. Things have come right. your parents must be very happy. please convey my congratulation.

***நிதிஷ் :*** எப்படியோ எல்லாம் நல்ல வகையில் அமையட்டும். உன்னுடைய பெற்றோர்கள் நிச்சயமாக சந்தோசப்படுவார்கள். என்னுடைய வாழ்த்துக்களையும் அவர்களுக்கு கூறு.

Robert: This is only an information the formal invitation card will follow one thing nithees. you must attend the wedding at any rate and I request you to take active past in everything.

***ரொபேட்:*** இச்செய்தி உத்தியோகபூர்வ திருமண அழைப்பிதழாக இருக்கட்டும் நிதிஷ். நீ நிச்சயமாக திருமண விழாவுக்கு வரவேண்டும்.

Nithees: Ok. Ok. I will definitely attend your sister's wedding. I will apply for leave now it itself.

***நிதிஷ்:*** சரி, சரி, நான் நிச்சயமாக சகோதரியின் திருமண விழாவுக் சமுகமளிப்பேன். அத்துடன், நான் விடுமுறைக்கும் இன்று விண்ணப்பிக்கின்றேன்.

Robert: No Excuse. Ok. we are expecting you two days before the wedding. Because a lot of arrangements have to made what else?

***ரொபேட்:*** ஒரு மன்னிப்பும் இல்லை. சரிதானே. நாங்கள் திருமண நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே உன்னை எதிர்பார்க்கின்றோம்.

*Nithees:* Don't worry Robert. I will attend the wedding. I will come to Jaffna before two days of the wedding. good bye.

***நிதிஷ்:*** கவலைப்படாதேரொபேட், நான் நிச்சயமாக திருமண விழாவுக்கு சமுகமளிப்பேன். திருமணத்திற்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு வருவேன்.

*Robert:* Good bye!

**எஸ். சிவசுப்பிரமணியம்**
முன்னாள் வருகை தரு விரிவுரையாளர்
யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியான்மரில் புதிய அரசு பதவியேற்பு

மியான்மரில் கடந்த 20 ஆண்டுகளாக நிலவி வந்த இராணுவ ஆட்சி நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது.

இதையடுத்து, புதிய ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை பொறுப்பேற்றுக் கொண்டது. மியான்மரில் தான் ஷ்வே தலைமை யிலான இராணுவ ஆட்சி கடந்த 20 ஆண் டுகளாக நடந்து வந்தது.

கடந்தாண்டு நவம்பரில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. இதில், இராணுவத்தின் ஆதரவு பெற்ற ஐக்கிய ஒற்றுமை மேம்பாட்டுக் கட்சி வெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்தது. புதிய அதிபராக தெய்ன் செய்ன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அவருடன் இரண்டு துணை ஜனாதிபதிகள், 58 அமைச்சர்கள் உள்ளிட்ட அமைச்சரவையும் நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக் கொண்டது. இராணுவ ஆட்சித் தலைவரான தான் ஷ்வே, எதிர்காலத்தில் என்னென்ன பொறுப்புகள் வகிப்பார் அல்லது ஆட்சி க்கு ஆலோசக ராக இருப்பாரா எனப் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

தற்போது அவர் இராணுவத் தலைவர் பதவியில் இருந்து இறக்கப்பட்டுள்ளார். அவரது பதவிக்கு ஜெனரல் மின் அவுங் ஹைங் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் புதிய அரசு பொறுப்பேற்றதன் மூலம் மியான்மரில் ஜனநாய கம் மலரும் என்று நிபுணர்கள் சிலர் கரு துகின்றனர்.

ஆனால் அமைச்சர் களில் பலர், இரா ணுவத்தின் முன்னாள் ஜெனரல்கள் என்பதால், இது வும் இரா ணுவ ஆட்சியின் நீட்சியாகவே இருக்கும் என்று பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

# கடாபிக்கு அடைக்கலம் கொடுக்க உகாண்டா அரசாங்கம் தயார்

மக்களின் கிளர்ச்சியாலும், அமெரிக்க கூட்டுப் படைகளின் தாக்குதலாலும் அதிர்ந்து போயிருக்கும் லிபிய ஜனாதிபதி கடாபி வேண்டும் என்றால் எங்கள் நாட்டில் தஞ்சம் புகுந்து கொள்ளலாம் என அழைப்பு விடுத்துள்ளது உகாண்டா அரசு.

உகாண்டா அரசின் செய்து தொடர்பாளர் டமலே மிருண்டி இதனை பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்தனர்.

ஆபத்தில் இருக்கும் யார் தஞ்சம் கேட்டாலும், அடைக்கலம் அளிக்க வேண்டும் என்பது தங்கள் நாட்டின் கொள்கை என்றும் எனவே ஜனாதிபதி கடாபி விரும்பினால் அவர் உகாண்டாவில் தங்கிக் கொள்ள லாம் என்றும் கூறினார்.



போர்த்துகல் வந்திருந்த பிரேசில் ஜனாதிபதி தில்மாரூசெப் (இடது), போர்த்துக்கல் ஜனாதிபதி அனிபால் கவாகோ ஆகியோர், கொயி ம்ப்ரா நகரில் உள்ள ஹோனாரிஸ் பல்கலையில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.


195 வது மைல்கல்

## வேலணை

புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க பொலனறுவை காலத்தில், வடகடலின் பிரதான கப்பல் கட்டும் துறைமுகமாக விளங்கிய ஊர்காவற்துறை தண்ணி தீவினால் சூழப்பெற்றுள்ளது. 17ம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த போர்த்துக்கேயரின் பிரசித்திபெற்ற கடல் மத்திய நிலையமாக விளங்கிய "பொருட்கள் ஏற்றும் துறையான" அப்பகுதிக்கு "கையிஸ்" எனும் பெயரையும் சூட்டியதாகவும், அதனைத் தொடர்ந்து வந்த ஆங்கிலேயர் அப்பகுதியை "கையிட்ஸ்" என்றழைத்து வர்த்தகத்தில் ஈடுபட்ட காலத்தில் "வேலணை" நகரம் கையிட்ஸ் தீவின் கடல் வர்த்தக கேந்திர நிலையமாக திகழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

"வேலணை" எனும் பெயரானது சிங்கள மொழியில் "முத்து பெல்லன்" அதாவது தமிழில் "முத்துச் சிப்பி" அதிகமாக பெற்ற ஊர் எனும் காரணத்தால், முதலில் பெல்லன் (சிற்பி) பின்னர் வெல்லன என்று அழைக்கப்பட்ட இப்பெயரானது மறுவி "வேலணை" என அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அத்தோடு பழமைவாய்ந்த முருகன் கோவில் வேலனின் பெயராலும், கையில் வேல் அணைந்திருந்தமையினால் (வேல்+அணை) வாய்மொழி வழக்கில் "வேலணை" எனும் பெயர் புழக்கத்திற்கு வந்ததாக இன்னுமொரு கருத்தும் உள்ளது.

நீண்ட கால இடைவெளியை தொடர்ந்து, இருள் நீங்கி ஒளி பெற்று வட மாகாணமெங்கிலும் அதிவேக அபிவிருத்திப் பணியை முன்னோக்கி செயற்படுத்தும் இப்பொற்காலத்தில், அப்பிரதேசங்களின் உடனடித் தேவைகளை அறிந்து உட்கட்டமைப்பு வசதிகளை செய்யவேண்டிய தலையாய பொறுப்பு அரசுக்கு மட்டுமின்றி தனியார் துறையினைரையும் சார்ந்ததாகவே அமைகிறது. எனவே, அதிவேகமாக இப்பிரதேசம் அபிவிருத்தியடைவதால் தேவையான நவீன வசதிகளுடன் நிதியியல் பலத்தைக் கொண்ட கொமர்ஷல் வங்கி, இப்பிரதேச வாழ் மக்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்காக, புதிய கிளையை ஊர்காவற்துறை தீவிலுள்ள வேலணை நகரில் இன்று திறந்து வைக்கிறது.

கொமர்ஷல் வங்கியின் இப்புதிய கிளை, குறிக்கட்டுவான் வீதி, வங்களாவடி சந்தி, வேலணை, என்ற முகவரியில் 2011 மார்ச் மாதம் 28 ஆம் திகதி முற்பகல் 9.17 மணிக்கு சுபவேளையில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படுவதை மகிழ்ச்சியுடன் அறியத்தருவதுடன், அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

முகாமையாளர்: 021 3202142 பொது: 021 3202143, 021 3202144 தொலைநகல்: 021 3734813



COMMERCIAL BANK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஜோதிகா

சூர்யாவும் ஜோதிகாவும் தேநீர் விளம்பரத்தின் மூலம் மீண்டும் நடிக்க வந்துவிட்டார்கள். ஔவையார் தந்த நெல்லிக்கனியை பிரிட்ஜில் வைத்து சாப்பிட்டது போல அப்படியே இருப்பதுதான் ஜோதிகாவின் சிறப்பு. இந்த விளம்பரத்தை பார்த்தவர்கள் அத்தனை பேரும் மீண்டும் நீங்கள் இருவரும் இணைந்து நடிக்கலாமே என்று ஆர்வத்தைத் தெரிவிக்க, அதுக்கென்ன... செஞ்சிட்டா போச்சு என்கிற முடிவுக்கு வந்திருக்கிறாராம் சூர்யா.

இந்த அரும்பெரும் ரீ-என்ட்ரியை அலுங்காமல் குலுங்காமல் அடுத்தவர்களுக்குக் கொடுக்க இவர்கள் என்ன சினிமா தெரியாதவர்களா? தனது சொந்தக்காரர் கம்பெனியிலே படத்தைத் தயாரிக்கலாம் என்று முடிவெடுத்திருக்கிறார்களாம். இன்னும் சில மாதங்கள் கழித்து இந்த படத்தின் விளம்பரங்கள் ஞானவேல் ராஜாவின் கிரீன் ஸ்டூடியோ பெயரில் வெளிவரலாம். ரசிகர்களே ....கைதட்டவும் விசிலடிக்கவும் தயாரா?

நில் கவன





காதல் 2 கல்யாணம்

# என் தனிப்பட்ட உறவு

பிரபல இந்தி நடிகை ராணி முகர்ஜி. இவரையும் இயக்குநர்/தயாரிப்பாளர் ஆதித்ய சோப்ராவையும் இணைத்து நிறைய கிசுகிசுக்கள் வருகின்றன. இது பற்றி பிரபல பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், "கிசுகிசுக்களை பார்த்து நடிகைகள் விரக்தியடையக் கூடாது. ஐஸ்வர்யா ராய் பற்றி ஆரம்பத்திலேயே எக்கச்சக்க கிசுகிசுக்கள் வந்தன. அவர் திருமணத்துக்குப் பிறகும் கிசுகிசு பரப்பினர். அவர் பொறுமையாகவே இருக்கிறார். ஆனால், சிலர் இப் படித்து மனம் உடைந்து போகிறார்கள். கப்பலே கவிழ்ந்துவிட்டது போல அழுகிறார்கள். ஆனால், நான் வருத்தப்படுவதில்லை.

கிசுகிசுக்கள் என்றால் எனக்கு ரொம்ப இஷ்டம். பெரிய நடிகர்களோடு இணைத்து என்னைப் பற்றி வரும் செய்திகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைவேன். யாஷ் சோப்ரா மகன் ஆதித்ய சோப்ராவுடன் நட்பு என்றும் பிறகு அது காதலாக மலர்ந்தது என்றும் எழுதினார்கள்.

எனக்காகவே அவர் முதல் மனைவியை விவாகரத்துச் செய்தார் என்றும் செய்தி வந்தது. இதற்காக நான் வருத்தப்படவில்லை. மகிழ்ச்சிதான். இப்படியும் ரசிகர்களை மகிழவைக்க முடிகிறதே என்று நினைக்கையில் சந்தோஷப்படுகிறேன்.

இன்னொன்று, என் தனிப்பட்ட உறவு பற்றி நான் வெளியில் பேசுவதில்லை. காரணம், நானும் என்னோடு தொடர்புடையவரும் தவிர மூன்றாவதாக ஒருவரும் பாதிக்கும் சூழல் உள்ளதால் இந்த உறவை ரகசியமாக வைத்துக்கொள்ளவே விரும்புகிறேன் என்றார்.

# கரிகாலனில் க

மதராஸப் பட்டினம் விஜய் இயக்கத்தில் 'தெய்வத்
முடித்திருக்கிறார் விக்ரம். அடுத்த படத்திற்கான வேலை
விட்டார் விக்ரம். படத்தின் பெயர் 'கரிகாலன்' படத்தை
இயக்குகிறார். இந்தப் படத்தை 'சிங்கம்புலி'யைத் தயா
தயாரிக்க இருக்கிறது.

இதெல்லாம் மேட்டரே இல்லை. படத்திற்கு கதாநாய
மாதிரி இருப்பாங்களே கத்தரினா கைப். இந்தப் படத்தி
என்று கரிகாலன் டீம் சொல்கிறது. பெரிய பட்ஜெட்டில்
பிக்க இருக்கிறது 'கரிகாலன்'.



# 2000 பேர் கலந்துகொண்ட பாடல்

'ஆனந்தம்', 'ரன்', 'சண்டக்கோழி', 'பையா' போன்ற பல வெற்றிப் படங்களை இயக்கிய டைரக்டர் லிங்குசாமி அடுத்து 'வேட்டை' என்றபடத்தை எடுத்துவருகிறார். இதில் ஹீரோவாக ஆர்யாவும் மாதவனும் நடக்கின்றனர். அவர்களுக்கு ஜோடியாக சமீரா ரெட்டி, அமலா பால் நடிக்கின்றனர். இவர்களுடன் நாசர், தம்பி ராமையா, இந்தி வில்லன் நடிகர் ராணா உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். இப்படத்தின் சூட்டிங் காரைக்குடியில் சில தினங்களுக்கு முன்னர் தொடங்கியது. படத்தின் துவக்கமே "டம்ம ... டம்ம ... டம்மா ... டம்மா ..." என்ற அட்டகாசமான பாடல் காட்சியுடன் தொடங்கியது. இந்த பாட்டு சூட்டிங்கின்போது சுமார் 2,000 பேர் கலந்துகொண்டனர். நா. முத்துக்குமார் எழுதிய இந்தப் பாடலுக்கு டான்ஸ் மாஸ்டர் பிருந்தா அனைவரையும் ஆடவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாதே



# ...த்தரினா

...ருமக'னை ஒரே ஆட்டத்தில் ...யையு... பரபரப்பாக ஆரம்பித்து ...சங்கா... உதவியாளர் கண்ணன் ...த்த சில்வர்லைன் பிலிம் பேக்டரி

...கி நம்ம எப்பவும் பிரிட்ஜல வச்ச ...கு இவர் தான் சரியான தேர்வு ...விரைவில் ஆரம்



மகாராஜா

# விஸ்வரூபம்





**ஸ்ரேயாவின்** கைகளில் தமிழ்ப் படங்களே இல்லை. ஆனால், அவ்வப்போது கோவையிலிருக்கும் இஷா யோகா மையத்திற்கு மட்டும் தவறாமல் வந்துவிடுகிறாராம்.

இவரை மக்கள் மறந்துபோவதற்குள் மீண்டும் கோடம்பாக்கத்துக்கு கூட்டிவந்துவிட வேண்டும் என்று துடித்த இயக்குனர்களில் வெற்றி என்னவோ செல்வராகவனுக்கு மட்டும்தான். இவரது அடுத்த படத்தில் கமல் நடிக்கிறார் என்றும் ஜோடியாக சோனாஷி நடிக்கிறார் என்றும் தெரியும்தான். ஆனால் இப்படத்தில் இன்னொர முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறாராம் ஸ்ரோயா.

சோனாஷி இப்படத்தில் நடிக்கவருவதற்கு முன்பே முக்கியமான ஒரு கண்டிஷன் போட்டிருக்கிறாராம். அது லிப் கிஸ் அடிக்க சம்மதிக்க மாட்டேன் என்பது தான். உலக நாயகன் படத்தில் உம்மா இல்லாமலா? அதற்காகத்தான் ஸ்ரேயாவோ என்றும் யோசிக்க வைக்கிறது இவரது திடீர் வருகை....

கமல் நடிக்கும் படத்துக்கு தலைப்பு 'விஸ்பரூபம்' என்று சில தினங்களுக்கு முன்பே செய்திகள் வெளிவந்தன. இந்தத் தலைப்பை நடிகர் கமலஹாசனும் இயக்குநர் செல்வராகவனும் அதிகாரபூர்வமாக உறுதி செய்துள்ளனர்.

இந்தப் படத்தில் நாயகியாக நடிக்கும் சோனாஷி சின்ஹாவுக்கு ரூபா 2 கோடி பேசப்பட்டுள்ளதாம். ஆரம்பத்தில் ரூபா 2.5 கோடியில் இருந்த சோனாஷி செல்வராகவனுடன் பேசிய பிறகு ரூ 2 கோடிக்கு ஒப்புக்கொண்டதாகக் கூறப்படுகிறது. இந்த சம்பளம் தமிழில் யாரும் வாங்கவில்லை என்பதுதான் கமலை மட்டும் அல்ல. நம்மளையும் வாய் பிளக்க வைத்திருக்கிறது.

இதற்கிடையில் தனுஷை வைத்து இயக்கிவரும் 'இரண்டாம் உலகம்' படத்தின் படப்பிடிப்புகளை முடித்துவிட்ட செல்வராகவன் விஸ்வரூபம் வேலைகளில் பிஸியாகிவிட்டார். இந்தப் படத்தை தயாரிப்பது ஆஸ்கார் ரவிச்சந்திரனின் பேர்தான் என்றாலும் உண்மையான தயாரிப்பாளர் ஆந்திராவைச் சேர்ந்தவர் என்கிறார்கள். இவர் செல்வராகவனுக்கு மிகவும் நெருக்கமானவராம்.



# 18 வயது விக்ரம்

'தெய்வ திருமகன்' படத்தில் விக்ரம் 18 வயது பையனாக நடிக்கிறாராம். இதற்காக அவர் பல மடங்கு உடல் இளைத்தார் என்கிறார்கள். அது மட்டுமல்ல. இந்த கெட்டப் வெளியே தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக வெளியிடங்களில் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளுக்கும் கூட வராமல் தவிர்த்து வந்தார்.

படமே முடிந்துவிட்டது. இனிமேலும் இந்தத் தகவலை பொத்திப் பொத்தி வைத்திருந்தால் பெப் இருக்காது என்ற நினைத்திருக்கலாம். லேசாக செய்தியை கசிய விடுகிறார்கள் டைரக்டர் விஜய் தரப்பிலிருந்து.

'ஆதவன்' படத்திலும் சூர்யா இப்படித்தான் ஸ்கூல் பையனாக நடிக்கிறார் என்று பெரும் ஆச்சர்ரியத்தை கிளப்பினார்கள். அப்புறம் படம் வந்தபின் அந்த சூட்சுமத்தை அறிந்து வாட்டமடைந்தது ரசிகர்கள் முகம். விக்ரம் அந்தளவுக்கு ஏமாற்றமாட்டார் என்ற நம்பலாம். எனென்றால் ...?

அடவிடுங்க. என்னவோ ஒரு நம்பிக்கை.அப்படியே இன்னொரு தகவல், கவுதம் மேனனும் விக்ரமும் சந்தித்து பேசியிருக்கிறார்கள். இது அடுத்த படத்திற்கான சந்திப்பாக இருக்கலாமாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...



# கலாபூஷணம் மெற்றாஸ்மயில் இவரைப் பற்றி 25

- பாரம்பரியக் கலைகளின் காவலன் கலாபூஷணம் மெற்றாஸ்மயில் ஈழத்து கலை உலக வரலாற்றில் பாரம்பரிய நாட்டுப்புறக் கலைகளை அழிவடையடது அவற்றைப் பாதுகாத்து வரலாற்றுப் பொக்கிஷமாகத் தந்தவர்களில் என்றும் முதன்மையானவர். நாட்டின் கலைகளையும் கலைஞர்களையும் தற்கால வரலாற்றில் தடம் பதிக்கச்செய்தவர் மெற்றாஸ்மயில். நாட்டுக் கூத்துக் கலையில் புகழ் பெற்று விளங்கிய இவரைப் பற்றி சில குறிப்புகள்...
- செல்லையா தம்பதியினருக்கு 1945ஆம் ஆண்டு மகனாக முல்லைத்தீவில் பிறந்தவர் தான் மெற்றாஸ்மயில்.
- இவர் தனது ஆரம்பக் கல்வி முதல் சாதாரண தரம் வரை புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் கற்றுக்கொண்டார்.
- தனது உயர் கல்வியை யாழ்ப்பாணம் - புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் கற்று கொழும்பு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிச் சென்றார்.
- இவர் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை படித்துக்கொண்டிருக்கும் போதே பாரம்பரிய நாட்டார் கலைகளுக்கு புத்துயிர் ஊட்டும் முயற்சியில் ஈடுபட்டு வந்தார்.
- 1966 ஆம் ஆண்டு அரச எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் முதல் தொகுதியில் சித்திபெற்று எழுதுவினைஞராக நியமனம் பெற்று அரசாங்கத் திணைக்களங்கள் பலவற்றில் கடமையாற்றியுள்ளார்.
- கண்டியில் இவர் கடமையாற்றும் போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவனாக இணைந்து புவியியலில் சிறப்புத் தேர்ச்சி பெற்று பட்டதாரியானார்.
- மலையகத்திலுள்ள ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட இவர், அவர்களின் கல்வி உயர்வுக்காக இலவச வகுப்புக்களை நடத்தியுள்ளார்.
- மெற்றாஸ்மயில் 1978 ஆம் ஆண்டு திருமண பந்தத்தில் இணைந்துகொண்டார்.
- வன்னி மண்ணில் அழிந்துபோகும் நிலையிலில் இருந்த பாரம்பியக் கலைகள் பலவற்றை தனி ஒருவராக செயற்பட்டு பாடல் பதிவுகளாகவும் எழுத்துருக்களாகவும் சேகரித்து அழிவிலிருந்து காத்துவந்துள்ளார்.
- கடந்த காலச் சூழ்நிலையில் முற்றுமுழுதாகவே அழிந்து போயும், பாரம்பரியக் கலைஞர்கள் இல்லாது போயுமுள்ள வன்னியில் பாரம்பரியக் கலைகளுக்குச் சான்றாக இருப்பது இவர் அன்று சேகரித்து வைத்த கலைப்பொக்கிஷங்கள் தான்.
- இன்றைய காலகட்டத்தில் ஈழத்தின் வடபகுதியில் மறைந்துகொண்டிருக்கும் கூத்துக் கலைக்கு நீண்டகாலமாக உயிர்கொடுத்து காத்துவந்த பெருமைக்கு உரியவர் மெற்றாஸ்மயில்.
- சிறுவயது முதலே ஆலயங்களிலும் கலைவிழாக்களிலும் ஆடப்பட்டு வரும் கோவலன் கூத்தைப் பார்த்து ரசித்துவந்த இவர் பிற்காலத்தில் அதன்பால் ஈர்க்கப்பட்டு அதில் நடித்துவந்தார்.
- கிழக்கிலங்கையில் தென்மோடிக் கூத்தினை பேராசிரியர் மௌனகுரு காத்துவருவதைப் போல் வடக்கில் வடமோடிக் கூத்து மரபினை பாதுகாத்து வந்தவர் என்ற பெருமைக்குரியவர் இவர்.
- தனது 45ஆவது வயதிற்குப் பின்னரே கூத்து ஆடுவதில் ஆர்வம் காட்டிய இவர் கோவலன் கூத்தை ஆட்டத்தில் பெருகூட்டி ஆசிரியர்களை கலைஞர்களாக வைத்து முல்லைத்தீவு மாவட்டத்தில் மேடையேற்றிப் பெயர் பெற்றார்.
- பாரம்பரியக் கூத்துக்களில் ஒன்றான கோவலன் கூத்தை ஒளிப்பதிவு செய்து ரூபாவாஹினி தொலைக் காட்சியில் ஒளிபரப்பி கூத்துக்கலையை புதிய பாதைக்கு இட்டுச்சென்றதன் மூலம் அன்றைய பல தமிழ் அமைச்சர்களின் பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டார்.
- யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவியர்களுக்கு காத்தவராயன் சிந்து நடைக் கூத்தை நவீனத்துவத்துடன் பழக்கி மாவட்ட தமிழ்த் தினப் போட்டியில் முதலாமிடம் பெறச்செய்ததன் மூலம் பலரது கவனத்திற்கும் ஈர்ப்புடையவரானார்.
- பெரும் இடப்பெயர்வுக்குப் பின்னர் யாழ்ப்பாண மக்களும் கலைஞர்களும் மீண்டும் சொந்த இடங்களுக்கு வந்தபோது 'வேழம்படுத்த வீராங்கனை' என்ற நாட்டுக்கூத்தை தயாரித்து, நடித்து, அண்ணாவியராக புதிய பரிமாணம் எடுத்து கூத்துக் கலைக்கு மெருகூட்டினார்.
- தனது 53 ஆவது வயதில் இசை நாடகத்துறைக்குள் பிரவேசித்த இவர் சத்தியவான் - சாவித்திரி இசை நாடகத்தில் சத்தியவானாக நடித்து மூத்த பல கலைஞர்களின் பராட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்.
- பாரம்பரிய கலைகளை பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய எண்ணம் கொண்ட மெற்றாஸ்மயில் பிரதேச ரீதியாகச் சென்று அழியும் நிலையிலிருந்த பல நாட்டார் கலைகளை வரலாற்றில் பதிவாக்கிக் கொண்டார்.
- இவர் வாழ்ந்த காலத்தில் இருந்த மூத்த நாட்டுப்புறக் கலைஞர்களைச் சந்தித்து அருகிவரும் நாட்டுப்புறப் பாடல்களையும் கூத்து வடிவங்களையும் ஒலிப்பதிவுகளாகவும் புகைப்பட சேகரிப்புக்களாகவும் சேகரித்துக் காத்துள்ளார்.
- பொருளாதார நெருக்கடியால் நவீன தொழில்நுட்ப வசதிகள் அற்ற நிலையில் இருந்த காலப் பகுதியில் ஒலிநாடாக்களில் பாடல்களை ஒலிப்பதிவு செய்து அழியப்படாத நாட்டார் பாடல்களை வெளியுலகிற்கு வெளிப்படுத்தி கலைஞர்கள் பலருக்கு கௌரவத்தைப் பெற்றுக்கொடுத்தார்.
- ஈழத்தமிழர்களில் பாரம்பரியக் கலைகளில் அழிந்து போகும் நிலையிலிருந்த மயிலாட்டம், ஒயிலாட்டம் போன்ற கலைகளை மூத்த அண்ணாவியார்களிடம் முறையாகக் கற்றுக்கொண்டு 1994ஆம் ஆண்டில் மேடையேற்றி பலரது பாராட்டையும் பெற்றுக்கொண்டார்.
- கலைகளையும் கலைஞர்களையும் கௌரவிக்கும் பண்புடைய மெற்றாஸ்மயில், பாரம்பரிய மேம்பாட்டுக் கழகத்தினூடாக மூத்த கலைஞர்கள் 62 பேருக்குகிரீடம் அணிவித்து பொன்னாடை போர்த்திக் கௌரவித்துள்ளார்.
- மெற்றாஸ்மயில் தமிழ்க் கலை உலகிற்கு ஆற்றிய சேவைக்காக 2001ஆம் ஆண்டு ஆளுநர் விருது வழங்கியும் 'மரபுவழி இசை நாடகங்கள் 9' என்ற நூலை எழுதியதற்காக 2002ஆம் ஆண்டு தங்கக் கிரீடம் அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.
- சுயநலமும் சுயகௌரவமும் எதிர்பார்த்து பயணிக்கும் கலையுலக வாழ்வில் எவ்வித பிரதிபலன்களையும் எதிர்பாராது பாரம்பரியக் கலைகளை அழிந்துபோகாது காத்துவந்த மெற்றாஸ் மயில் 2010 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். கலைவடிவங்களைக் காத்துவந்த இவரின் உன்னதமான இடத்தினை நிரப்புவதற்கு இன்னும் ஒருவர் இல்லாதது தமிழ்க் கலை உலகிற்கு ஒரு இழப்பேயாகும்.

தொகுப்பு அஸ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவலுப் பெறாது போன ஒப்பந்தங்கள் (பகுதி நான்கு)

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

1952ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலின் பின்னர் ஐ.தே.கட்சித் தலைவர் டட்லி சேனநாயக்கா இலங்கையின் இரண்டாவது பிரதம மந்திரியாக மகா தேசாதிபதி ஒலிவர் குணதிலகவால் நியமிக்கப்பட்டார். இது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மேலும் ஒரு பூகம்பத்தை ஏறபடுத்தியது. தேசபிதா (Father of the nation) என்று வர்ணிக்கப்பட்டவருடைய இறப்பின் பின்னர் தேசத்தின் மாமா (Uncle of the nation) என வர்ணிக்கப்பட்ட சேர். ஜோன். கொத்தாலாவல தானே இலங்கையின் அடுத்த பிரதமராக வரவேண்டுமென்று ஆசைப்பட்டார். ஆனால், துரதிஷ்டவசமாக புகழ்மிகு தேசபிதாவின் மாண்புமிகு மகன் டட்லி சேனநாயக்கா பிரதமராக்கப்பட்டமை சேர். ஜோன். கொத்தலாவலைக்கு மனநெருடலை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் தான் அப்போதைய நிதி மந்திரியாக இருந்த அதி உத்தமர் ஜே.ஆர். ஜெயவர்த்தன அப்போது 25 சதமாக விற்றுவந்த ஒரு கொத்து அரிசியின் விலையை ஒரு கொத்து அரிசி 75 சதம் என விலை நிர்ணயம் செய்தார். இது இலங்கை முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இலங்கை மக்கள் கொதித்து எழுந்தனர். இது நடந்தது 1953ஆம் ஆண்டிலாகும். இதன் விளைவாக 195ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் ஒரு ஹர்த்தால் இடம்பெற்றது. இதனை 1953 ஆம் ஆண்டு அரிசிக் ஹர்த்தால் என்பார்கள். இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் விளைவாக டட்லி சேனநாயக்கா தனது பதவியைத் துறந்து கதிர்காமத்திற்கு யாத்திரை போனார். இதனால் 1959 இல் சேர். ஜோன். கொத்தலாவல இலங்கையின் மூன்றாவது பிரதமராகப் பதவியேற்றார்.

சட்டமும் 21 சமூகமும்


வழக்கறிஞர் பொன். பூலோகசிங்கம்

அப்போதைய நிதி மந்திரியும் 20ஆம் நூற்றாண்டின் குள்ளநரியும் என இலங்கை அரசியலில் வர்ணிக்கப்படுபவரான ( 20th century fox) ஜே.ஆர். ஜெயவர்த்தனா சகல அதிகாரங்களையும் சட்டத்தையும் தனது கையில் எடுத்து இலங்கையின் தொழிலாளர் வர்க்கம் முன்னெடுத்த சாத்வீகப் போராட்டத்தை இராணுவ ரீதியாக ஆயுதமுனையில் ஒடுக்கினார். இதன்போது சில அப்பாவிப் பொது மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். பல இலங்கை மக்கள் படுகாயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களில் ஒரு தமிழரும் அடங்குவார். அரிசி ஹர்த்தால் இராணுவ ரீதியில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இது 1953 இல் நடந்த துன்பியல் நிகழ்வாகும்.

### பிரதமர் கொத்தலாவலையின் யாழ்ப்பாண விஜயம்

1954 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமராக இருந்த சேர். ஜோன். கொத்தலாவலை யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இதனால் அவருக்கு குடாநாட்டில் பல பாகங்களிலும் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. கொழும்பு வாழ் தீவக வர்த்தகப் பிரமுகர்களால் அவருக்கு அளிக்கப்பட்ட மாபெரும் வரவேற்பு விழாவில் சேர்.ஜோன். கொத்தலாவலைக்கு 'நெடுந்தீவின் சக்கரவர்த்தி' என்ற மகுடம் சூட்டப்பட்டது. (Emporer of Delft)

அத்தோடு, 'ஊர்காவற்றுறை மண்ணின் மன்னன்' (King of Kayts) என்ற கிரீடமும் சூட்டப்பட்டது. இரண்டு மாபெரும் வெற்றிக் கேடயங்களை வடக்கில் சுவீகரித்த தேசத்தின் மாமாவிற்கு (Uncle of the nation) கொக்குவில் இந்துக் கல்லூரியில் அக்கால கட்டத்தில் அதன் அதிபராக இருந்த ஹண்டி பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் மாபெரும் வரவேற்பு விழா ஒன்று ஏற்பாடுசெய்யப்பட்டது.

அவ்விழாவில் பேசிய பிரதமர் சேர். ஜோன். கொத்தலாவலை, இலங்கை அரசாங்கம் சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்கத்தீர்மானித்திருப்பதாக ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்.

இது கேட்டு அங்கு கூடியிருந்த தமிழ்ப் பெருங்குடிகள் பலத்த கரகோஷம் செய்தனர். யாழ்ப்பாணத்தில் வாக்குறுதி கொடுத்த பிரதமர் கொழும்பு செல்ல முன்பு தென்னிலங்கை ஊடகங்கள் அவருக்கு எதிராக எதிர்ப்பை வெளியிட்டன.

*(தொடரும்...)*

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# மண்டைதீவு கார்த்திகேசு வித்தியாலயம் எப்போது மீண்டும் ஆரம்பிப்பது?

யுத்த அனர்த்தங்களால் முற்றாகப் பாதிக்கப்பட்டு நீண்ட காலமாக செயலிழந்து காணப்படும் மண்டைதீவு கார்த்திகேசு வித்தியாலயத்தைப் புனரமைத்து மீண்டும் ஆரம்பிக்குமாறு இப்பகுதி பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து தீவகக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துவருகின்றனர்.

விதானையார் பரம்பரையில் வந்த கார்த்திகேசு விதானையார், அம்பலவாணர் விதானையார் ஆகிய இரு சைவப் பெரியார்களும் மேற்படி கிராம அபிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வந்தவர்கள் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப் பகுதி ஏழை மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக மண்டைதீவு கிழக்கில் ஒரு சைவ பாடசாலையை நிறுவி, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வந்தவர். இதனால், இவ்வூர் மக்கள் அவ்வித்தியாலயத்தை கார்த்திகேசு வித்தியாலயம் என பெயர் சூட்டி அழைத்துவருகின்றனர்.

இப் பாடசாலையில் கல்விகற்ற மாணவர்கள் உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் உயர்ந்த பதவிகளை வகித்துவருகின்றனர். அத்தோடு பலர் தொழில் அதிபர்களாகவும் விளங்கிவருகின்றனர். தீவகக் கல்வித் திணைக்களம் மேற்படி கல்லூரி புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டால் அவர்கள் தங்களால் இயன்ற நிதியுதவிகளை வழங்க காத்திருக்கின்றார்கள்.

மேற்படி பாடசாலையில் அதிபராகக் கடைசியாகக் கடமையாற்றிய (1990) வேலணையைச் சேர்ந்த அமரர் சண்முகரத்தினம் இந்த பாடசாலை வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் உழைத்தவர். தனது சொந்தப் பணத்தில் பாடசாலையை சுற்றி வேலி அமைத்துக் கொடுத்தவர்.

மண்டைதீவிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவிலும் மற்றும் நலன்புரி நிலையங்களிலும் தங்கியிருந்த மண்டைதீவு மக்கள் தற்போது ஏற்பட்ட அமைதியான சூழலைத் தொடர்ந்து தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிய வண்ணம் உள்ளனர். இதனால், இங்கு மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ள போதும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீராத நிலை உள்ளதாக பிரதேச வாசி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தங்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் கூடிய பணம் ஒதுக்கி மேற்படி கல்லூரி புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு உதவவேண்டும் என பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றார்கள். இதேவேளை, மண்டைதீவு முன்னாள் கிராமத் தலைவர் அம்பலவாணர் விதானையார் மேற்கொண்ட சேவைகளை இப்பகுதி மக்கள் இன்றும் கூறிப் பெருமைப்படுகின்றார்கள்.

இப் பகுதி மக்களின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்வதற்காக தனது சொந்தப்பணத்தில் ஆட்களை நியமித்து மண்டைதீவுச் சந்தியில் நீண்டகாலமாக குடிநீர் நிலையம் ஒன்று நிறுவி மக்களின் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்கியவர்.

மண்டைதீவுப் பகுதியில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க இவர் உழைத்து வந்தவர். இதனால், அருள்மிகு சிறுப்புலம் கந்தசுவாமி கோவிலை நிறுவி இப்பகுதி மக்களுக்கு இறைபணியை உணர்த்தியவர். இவர் ஆற்றிய ஆன்மிக தொண்டுகளை மக்கள் இன்றும் நினைவுகூருவர்.

அத்தோடு இப்பகுதி ஏழை எளிய மக்களின் வயிற்றுப் பசியை தீர்க்க பல அன்னதானப் பணிகளை தனது சொந்தப் பணத்தில் செய்துவந்தவர். அவர் மறைந்துபோனாலும் இப் பகுதி மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடமாக என்றும் இருப்பார்.

•வேலணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 21

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | ■ | 06 | 07 | 08 |
| 09 | 10 | ■ | 11 | 12 | 13 | ■ | 12 |
| 14 | 15 | 16 | ■ | 16 | 18 | 19 | 20 |
| 21 | 19 | 22 | 21 | ■ | ■ | 25 | ■ |
| 25 | ■ | 28 | 29 | 30 | 29 | ■ | 32 |
| ■ | 34 | 35 | 33 | 36 | ■ | 33 | 34 |
| 38 | 39 | ■ | 40 | 41 | 42 | 43 | ■ |
| 44 | 39 | 37 | 45 | ■ | 47 | 48 | 49 |

**இடமிருந்து வலம்**

1. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று
9. ஒட்டுவதற்குப் பயன்படுவது
11. மைதானம் (குழம்பியுள்ளது)
14. அளவுகளின் ஒன்று (குழம்பியுள்ளது)
18. கண்ணன் வளர்ந்த இடம் (இறுதி எழுத்து இல்லை)
23. வெள்ளம் பாயும் இடம்
27. இராசிகளில் ஒன்று
31. பிரணவ மந்திரம் (திரும்பியுள்ளது)
33. பறவைகளில் ஒன்று
36. காற்றடிக்க உதவுவது
38. கையடக்கத் தொலைபேசியில் இது முக்கியம்.
40. நிகழ்வின் அலங்காரப் பொருட்களில் ஒன்று
45. மகுடி வாசிப்பவர் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. மிகவும் உயர்ந்தவைகளில் ஒன்று/ஒரு படத்தின் பெயர்
2. சங்கீதத்தின் பிதா (குழம்பியுள்ளது)
4. வீட்டில் ஆணியில் மாட்டுவது
5. இந் நாட்களை வைத்துத்தான் இந்துக்கள் கருமங்களை கணிப்பார்கள்
6. தரம் ஒன்று மாணவர்களுக்காக பாடசாலையில் இடம்பெறும் வைபவம்.
16. வையகம்
19. நீர் நிலைகளில் ஒன்று
20. அவலக்குரல் (குழம்பியுள்ளது)
23. சுழல்வது
27. நட்சத்திரங்களில் ஒன்று
33. பூமியை இவ்வாறு அழைப்பர்
37. அம்பு (தலைகீழாக உள்ளது)
40. இராகங்களில் ஒன்று
43. அரிசி வகைகளில் ஒன்று (முதல் எழுத்து இல்லை)

**குறுக்கெழுத்துப் போட்டி 19க்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வி | கா | ரை | த | ப் | ம | சூ | ■ |
| ■ | லை | க | பா | கு | ■ | து | ரு |
| வை | ச | ■ | சு | ர | ர் | ■ | டி |
| ச | ப | க | ■ | ங் | கி | ம் | யோ |
| லை | ம் | ம் | ■ | ■ | ப | ள் | த |
| வ | சி | ■ | ணி | வே | ■ | க | ■ |
| க | ப | டி | ■ | ம் | தூ | ய் | மை |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. **திருமதி. தி. சிதம்பரநாதன்**
டச் வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

2. **நேசராஜ்குமார் வித்தியாசாகர்**
கிளி/நொச்சி ம.வி,
கிளிநொச்சி.

3. **செ. றொபட்**
சென். மேரிஸ் லேன்,
ஊர்காவற்றுறை.

**குறுக்கெழுத்துப் போட்டி 21க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**

**குறுக்கெழுத்துப் போட்டி**
**'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,**
**117, புகையிரத நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்**




"இரண்டு நாளா ஒரே இருமல் டாக்டர்!"
"கடைசிவரைக்கும் இரண்டாவது இருமல் வரவே இல்லையா?"




"வீடு வாசல்கூட இல்லாம ஈ ஒட்டிக் கொண்டிருந்தீரே இப்போ எங்கே இருக்கிறீர்?"

"ஈ மெயில் அட்ரஸ் தரவா?"




"வீட்டு வேலை செய்ய முடியலேனு என் மனைவி ரொம்ப கவலைப்படறா!"
"வேலைக்காரியை வைக்கிறது தானே?"
"வேலைக்காரியை வச்சிருந்தாலும் கவலைபடறா!"




"உன் மாமியாரை அடிக்கடி டீ.வி. சீரியல் பார்க்க கூப்பிடறாயே மாமியார் மீது அத்தனை அன்பா?"
"இல்லை அவங்க அழுறதைப் பார்க்க எனக்குக் கொள்ளை ஆசை!"




"உங்க தாத்தாவுக்கு 60 ஆம் கல்யாணத்துக்கு இஷ்டமே இல்லையாமே?"
"ஆமாம், 60 ஆம் கல்யாணத்துக்கும் அதே பொண்ணுதானா என்று கேட்கிறார்!"




"பல் வலி டாக்டர்"
"இதோ பல்வலிக்கு மருந்து தருகிறேன்!"
"அதில்லை டாக்டர் கைவலி, தலை வலி, வயிற்றுவலி, முதுகு வலி என்பதைத்தான் சுத்தத் தமிழில் 'பல்வலி' என்று கூறினேன்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்



யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை இளைஞர்களின் அடாவடித்தனங்கள் எல்லை மீறிச் சென்றுகொண்டிருக்கின்றன. மூலைக்கு மூலை - சந்திக்குச் சந்தி குந்தியிருந்து வம்பளக்கும் இளைஞர்கள் கட்டாக்காலிகளைப் போல் மக்களின் இயல்பான நடமாட்டத்திற்குக் குந்தகம் விளைவிக்கின்றனர்.

அண்மையில் நல்லூர் குறுக்கு வீதியில் மதியவேளையில் ஆள் நடமாட்டம் சற்றே குறைந்திருந்த நேரத்தில் தனிமையாகச் சென்றுகொண்டிருந்த குடும்பப் பெண்ணுடன் அங்க சேஷ்டை விட்ட இளைஞர்கள் சிலர், அப்பெண் கூக்குரல் இடவே 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று எண்ணியவாறு தப்பியோடிவிட்டனர். இப்படியான பல சம்பவங்கள் தற்போது குடாநாட்டில் அதிகரித்து வருகின்றன.

அண்மையில் வெளிவந்த குடாநாட்டுப் பத்திரிகை ஒன்றில், பெண்களுடன் சேஷ்டை விட்டுவந்த இளைஞர்கள் சிலர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்ற செய்து பலரது கவனத்தையும் ஈர்த்திருக்கும்.

அவர்களை இராணுவத்தினரால் எப்படி கைதுசெய்தனர் என்ற வினாவுக்கும் அச்செய்தியில் விடையிருக்கிறது. மக்கள் மீது காட்டும் காடைத்தனத்தை தமக்கிடையே காட்டிக்கொண்டதால் தான் அவர்களுக்கு இந்த விபரீதம் நிகழ்ந்தது. இல்லாவிடில் ஊர்சுற்றும் சண்டித்தனக் கதாநாயகர்களாக வலம் வந்திருப்பர் என்பதே உண்மை.

'பலநாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்' என்ற நம் ஊர்ப் பழமொழியை நிதர்சனமாக்குவது போல இளைஞர்களின் கைதும் இடம்பெற்றிருக்கிறது. குடாநாட்டில் இவ்வாறு பெண்களுடன் சேஷ்டை விடுதல் மற்றும் அடிதடியில் ஈடுபடுதல் போன்ற காடைத்தனமான இழிசெயல்களில் நீண்டகாலமாக ஈடுபட்டுவருவது இவர்களின் தொழிலாக அமைந்திருந்தது.

எமது நாட்டைப் பொறுத்தவரை பாவனைப் பொருட்களின் விலைகள் அன்றாடம் விசம் போல் ஏறியிருக்கும் நிலையில் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை நகர்த்துவதற்காகப் பெரும் பாடுபட்டு வரும் இவ்வேளையில், அடாவடியில் ஈடுபடும் இவ்வாறான ரவுடிக் கும்பல்களோ வருமானத்தின் இருப்பைப் பறைசாற்றும் விலையுயர்ந்த - பல ரகங்களில் காணப்படும் மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசிகள், தங்க ஆபரணங்கள் என அவர்கள் வைத்திருக்கும் பல இலட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் அவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தன?

சாதாரண ஒருவர் பல வருடங்கள் கடுமையாக உழைத்தால் கூட இப்படியாக ஆடம்பரமாக நடக்க அவரின் ஊதியம் இடம்கொடுக்காது. இருந்தும், தான் கஷ்டப்பட்டுத் தேடிய பணத்தைக் கொண்டு இப்படியான ஆடம்பரங்களுக்கு அவரே பணத்தைக் கரைக்க மாட்டார் என்பதே நிதர்சனமாகும். ஏனெனில், பணத்தின் அருமையும், உழைப்பின் மகத்துவமும். அவருக்கே புரியும்!

ஆனால், இத்தகைய வேலை வெட்டியில்லாமல் வீணே பொழுதுகளை அவமாகக் கழித்துவரும் இவ்வாறான இளைஞர்கள் தமது நாளாந்தச் செலவுகளுக்கு எப்படி அவர்களின் கைகளில் தாராளமாகப் பணம் கிடைக்கின்றது என்ற வினா நம்மனதில் எழுவது தவிர்க்கமுடியாதது. அவர்களது நாளாந்த செலவுகளைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் சாதாரண குடும்பம் நாள் ஒன்றுக்குச் செலவிடும் பணத்திலும் பார்க்க பல மடங்கு அதிகமாகும். எனவே, காட்டுமிராண்டித் தனமான செயல்களில் ஈடுபடுவதை தமது தொழிலாகக் கொண்ட இளைஞர்களுக்கு எப்படிப் பணம் தாராளமாகக் கைகளில் புழங்குகிறது என்ற சந்தேகம் இருக்கவே செய்கிறது.

> குடாநாட்டில் பெண்களுடன் சேஷ்டை விடுதல் மற்றும் அடிதடியில் ஈடுபடுதல் முதலிய காடைத்தனமான இழிசெயல்களில் ஈடுபட்டு வருவது தற்போது இளைஞர்கள் சிலரின் தொழிலாக அமைந்திருக்கின்றது. 'பலநாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்' என்ற பழமொழியை நிதர்சனமாக்கும் வகையில் குறித்த காடைத்தனங்களில் ஈடுபட்ட இளைஞர்கள் சிலர் இ

அதுமட்டுமன்றி இவ் இளைஞர்கள் மது, போதைப்பொருள், சிகரெட் போன்றவற்றுக்கு அடிமையாக இருக்கின்றனர். இவற்றின் விலைகளோ மிக அதிகம் என்பதால் இத்தகைய பொருட்கள் பெருமளவு பணத்தை விழுங்குகின்றன. இத்தகைய பொருட்களின் பாவனையால் கிடைத்த போதையின் கிறக்கம் உச்சமடைவதால் வீதிகளில் சிவனே என்று தம் பாட்டிற்குப் போவோர் வருவோரையெல்லாம் வம்புக்கு இழுக்கின்றனர். வீதியில் செல்லும் பதின்ம வயதுப் பெண்கள் அதாவது மாணவிகள் முதல் வேலைக்குச் செல்லும் குடும்பப் பெண்கள் வரை இத்தகைய துர்நடத்தையுள்ள இளைஞர்களின் சேஷ்டை மற்றும் காடைத்தனங்களுக்குப் பலிக்கடாக்களாகின்றனர்.

'தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்' என்பது போல இவ் இளைஞர்களின் அட்டூழியங்கள் எல்லை மீறிச் செல்கின்றன. யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை சட்டம், ஒழுங்கு என்பன அதல பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இத்தகைய அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்த வேண்டியவர்கள் கூட வினைத்திறனற்று இருப்பது ஏனோ என்ற கேள்வி பலரது மனங்களையும் குடையும் கேள்வியாகும்.

தற்போது குடநாட்டில் வீதி ஒழுங்குகளை கண்காணிக்கவென பொலிஸார் சந்திக்குச் சந்தி - மூலைக்கு மூலை தமது சேவைகளை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வருகின்றனர். சாரதி அனுமதிப்பத்திரம், தலைக்கவசம், காப்புறுதிப் பத்திரம் என்பவற்றைப் பரிசோதிப்பதில் பொலிஸாருக்கு இருக்கும் அர்ப்பணிப்பு உணர்வை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. இருந்தும், வீதி ஒழுங்குகளைப் பேணுவதில் பொலிஸார் காட்டும் அக்கறை இத்தகைய இழிசெயல்களில் ஈடுபடும் இளைஞர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் அக்கறை காட்ட வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் தாழ்மையான கோரிக்கையாகும்.

யாழ். குடாநாட்டு இளைஞர்களிடையே போதைப்பொருட்கள், மது என்பவற்றின் பாவனை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன. இத்தகைய பொருட்களின் பாவனைகள் இளைஞர்களை 'மிருகங்களாக' மாற்றுகின்றன.


இதனால், தமக்குள் இருக்கும் மனிதத்துவத்தை இழந்தவர்களாக - மறந்தவர்களாக மாறிவருவதுடன், ஏற்கெனவே தமக்குள் உறங்கிக்கொண்டிருக்கும் மிருக உணர்வைத் தட்டியெழுப்பியும் விடுகின்றனர்.

இதன் விளைவாகவே குடாநாட்டில் அரங்கேறி வருகின்ற கலசாரச் சீரழிவுகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஆக, யாழ். குடாநாட்டில் இளைஞர், யுவதிகளிடையே ஆழ வேர்விட்டுள்ள எமது கலாசாரத்திற்கு இழுக்கை ஏற்படுத்தும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த சமூக அக்கறை கொண்டவர்கள் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது காலத்தின் கட்டாயமும், பொறுப்புமாகும்.

உதிஷ்டிரன்

Digitised by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உயிர்க்கொல்லி



## நுளம்பினால் பரவும் நோய்கள்

வளர்முக நாடுகளில் ஏற்படுகின்ற நோய்களில் நுளம்புகளால் பரவுகின்ற நோய்கள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. கிட்டத்தட்ட 400 இன நுளம்புகள் உள்ளன. அவற்றில் 1/4 பங்கு மட்டுமே நோய்களைப் பரப்பக் கூடியதாகக் காணப்படுகின்றன. சாதாரண நுளம்புகளால் பரப்பக்கூடிய நோய்களாவன-

மலேரியா (Malaria) அனோபிலிஸ் (Anopheles) எனும் இன நுளம்பாலும் யானைக்கால் நோய் (Filariasis) கியூலெக்ஸ் (Culex) எனும் இன நுளம்பாலும் சிக்குன்குன்யா (Chickunguniya) மஞ்சள் காய்ச்சல் (Yellow Fever) டெங்கு முதலியன ஏடிஸ் எஜீப்டஸ் (Aedes Aegyptus) எனும் இன நுளம்பாலும் பரப்பப்படுகின்றன.

***அட்டவணை - 1 இல் நுளம்புகளின் இனமும், அவை பரப்பும் நோய்களும் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.***

உருவாகி வளர்வதற்குக் காரணமாய் அமைந்ததோடு மட்டுமல்லாமல் அதனால் ஏற்படும் மலேரியா தொற்று நோய் மரணத்திற்கும் இட்டுச்செல்லக் கூடியதாகக் காணப்படுகின்றது.

1934, 1935 ஆம் ஆண்டுகளில் மலேரியாவினால் இலங்கையில் 80,000 இறப்புக்கள் ஏற்பட்டன என கணக்கிடப்பட்டுள்ளது. அந்த ஆண்டுகளில் 6 மாத காலத்தில் இலங்கையின் சனத்தொகையில் 1/2 பங்கினர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1877ஆம் ஆண்டில் நுளம்புகள் யானைக்கால் நோய் எனும் நோயைப் பரப்புகின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின் மலேரியா(1898), மஞ்சள் காய்ச்சல் (1900), டெங்கு (1903) ஆகிய நோய்களும் நுளம்புகளாலேயே பரவுகின்றன என கண்டுபிடிக்கப்பட்டது.

| நுளம்பின் வகைகள் | நோய்கள் |
|---|---|
| அனோபிலிஸ் (Anopheles) | மலேரியா (Malaria) |
| கியூலெக்ஸ் (Culex) | யானைக்கால் நோய் (Filariasis) |
| ஈடிஸ் எஜீப்டஸ் - (Aedes Aegyptus) | சிக்குன்குன்யா, மஞ்சள் காய்ச்சல், இரத்தக் கசிவுடன் கூடிய டெங்கு காய்ச்சல் (Dengue Haemorrhagic Fever), ஜப்பான் மூளைக் காய்ச்சல் |

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக இவ்வகை நோய்கள் உலகில் பல்லாயிரக்கணக்கான மக்களின் இறப்பிற்குக் காரணமாய் அமைந்துள்ளன. இலங்கையில் அனுராதபுரம் இராச்சியம், பொலன்னறுவை இராச்சியம் என்பன மலேரியா நோயின் அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவே நாட்டின் வேறு பகுதிக்கு மாற்றப்பட்டன என்று கூறப்படுகின்றது. விவசாயத் தேவைக்காக நிர்மாணிக்கப்பட்ட பெரிய குளங்கள் நுளம்பு

நுளம்புகள் ஒட்டுண்ணிகளையும் (மலேரியா, யானைக்கால் நோய்), பக்ரீரியா, வைரஸ் (டெங்கு காய்ச்சல்) நோய்களையும் பரப்புகின்றன.

இவ்வகை நோய்கள் நுளம்புகள் கடிப்பதால் ஒரு மனிதனிடமே இருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவுகின்றன. பெண் நுளம்புகள் மட்டுமே மனிதனைக் கடிப்பதால் அவை இவ்வகை நோய்களைப் பரப்புகின்றன. ஒரு பெண் நுளம்புக்கு தனது முட்டையை முதிர்ச்சியடையச் செய்ய மனிதக் குருதி தேவைப்படுகின்றது.

தொற்றுக்குள்ளான ஒரு மனிதனை ஒரு தடவை கடித்தால் அந்த நுளம்பு அதன் வாழ்நாள் வரை தொற்றுள்ளவையாக இருக்கும். ஆண் நுளம்பு 2 - 4 கிழமைகளும் பெண் நுளம்பு 5 - 7 கிழமைகளும் வாழக்கூடியன. பெண் நுளம்பு தன் வாழ்நாளில் தனது இரையாக குருதியினை 3 அல்லது 4 தடவைகள் எடுக்கும். அதாவது, முதலாவது தடவை இரைக்கான குருதியினைப் பெறும் போது அந் நுளம்பு தொற்றுக்குள்ளாகி விட்டால் அது தொடர்ந்து இரைக்காகக் குருதியினை ஒவ்வொரு முறையும் எடுக்கும் போது தொற்றினைப் பரப்பக் கூடிய தன்மை கொண்டதாக இருக்கும்.

**நுளம்புகளை பற்றி...**

நுளம்புகள் ஒருவகைப் பூச்சிகளாகும். அவை மனிதன், விலங்குகள் வாழும் சுற்றுச் சூழலிலேயே வாழ்கின்றன. இவை கூடுதலாக வெப்ப வலயப் பிரதேசங்களிலேயே வாழும். சில ஆட்டிக் வட்டப் பிரதேசத்திலும் காணப்படும். நுளம்புகள் கடல் மட்டத்திலிருந்து 1,500 அடி உயரம் வரையும், 28 பாகை செல்சியஸ் முதல் 32 பாகை செல்சியஸ் வெப்ப நிலையில் விருத்தியடைந்து பரவலாக வாழக்கூடியன.

முதிர்ச்சியடைந்த பெண் நுளம்புகள் நீருக்கு மேல் முட்டையிடும். எங்கு நீர் காணப்பட்டாலும் அச்சூழல் அவற்றின் பெருக்கத்திற்கும் உதவும். சில நுளம்புகள் உதாரணமாக மலேரியாவைப் பரப்பும் அனோபிலிஸ் நுளம்பின் குடம்பிகள் தெளிந்த, சூரிய ஒளி படுகின்ற நீரில் வளரும். ஆனால், யானைக்கால் நோயைப் பரப்பக் கூடிய கியூலெக்ஸ் வகை நுளம்பு கழிவுநீர்க் குழிகள், மலசலகூடக் குழிகள் போன்ற அழுக்கு நீர் நிலைகளில் வளரும். டெங்கு, சிக்கன் குன்யாவைப் பரப்பக் கூடிய நுளம்புகள் எமது வீட்டுக்குள்ளேயும் வீடுகளைச் சுற்றியும் காணப்படுகின்ற சிறிய பிளாஸ்ரிக் கிண்ணங்கள், பேணிகள், தேங்காய்ச் சிரட்டைகளில் சேருகின்ற சிறிய நீர்த்தேக்கங்களில் வளரும்.

ஒரு பெண் நுளம்பு ஒரு வேளையில் 80 தொடக்கம் 120 வரையிலான முட்டைகளை இடும். சாதாரண நிலையில் 2 - 3 நாட்களில் முட்டையில் இருந்து குடம்பிகள் உண்டாகும். நீரில் தேங்கிநிற்கும் சேதனப் பொருட்களை குடம்பிகள் உணவாக உட்கொள்ளும். 7 - 10 நாட்களில் குடம்பி கூட்டுப்புழுவாக மாறும். இது நீரின் மேல் மட்டத்தில் 2 - 4 நாட்களுக்கு ஓய்வாக இருக்கும். பின் முதிர்ந்த நுளம்பாக மாறும். இவ்வனைத்துச் செயற்பாடுகளும் நடைபெற்று முற்றாக வளர 10 - 14 நாட்கள் எடுக்கும். எனினும், கால நிலை குளிர்சியாக இருக்கும் பட்சத்தில் இக்கால அளவு நீடிக்கலாம். ஒரு மாதம் கூடிச் செல்லலாம். சூழல் வெப்பம் உயர்வாக இருப்பின் இவ்வட்டம் சிலவேளைகளில் 7 - 10 நாட்களில் முடிவுறலாம்.

**நுளம்புகளால் யானைக் கால் நோய் பரப்பபடுகின்றது என்று 1877ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. மலேரியா(1898), மஞ்சள் காய்ச்சல் (1900), டெங்கு (1903) ஆகிய நோய்களும் நுளம்புகளாலேயே பரப்பப்படுகின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டது.**

முதிர்ச்சியடைந்த நுளம்புகள் பழங்களில் தாவரங்களில் உள்ள சாறுகளை உணவாக உட்கொள்ளும். ஆண் நுளம்புகள் தாவரச்சாறுகளை மட்டுமே உண்ணும். பெண்நுளம்புகள் தாவரச்சாறுகளுடன் பாலூட்டிகள், பறவைகளது குருதியையும் தம் உணவாகக் கொள்ளும். இக் குருதி அவைகளின் முட்டையின் முதிர்ச்சிக்கு இன்றியமையாததாகும். வெவ்வேறு இன நுளம்புகள் தங்களுடைய குருதி உணவை வெவ்வேறு நேரங்களில் எடுக்கின்றன. மலேரியா நோயைப் பரப்பும் அனோபிலிஸ் நுளம்பானது ஒரு வீட்டுக்குள் நுழைந்து இரவுவேளையில் தங்கி காலையில் வெளியில் செல்லும். டெங்கு (Dengue), சிக்குன்குன்யா பரப்பும் ஏடிஸ் இன நுளம்புகள் சூரிய அஸ்தமனத்திற்கு 2 மணித்தியாலத்திற்கு முன்பும் சூரிய உதயத்திலிருந்து 2 மணித்தியாலத்திற்குள்ளும் கடிக்கும். யானைக்கால் நோயைப் பரப்பும் நுளம்பு நடு நிசிக்கு முன்பும் பின்பும் மனிதரைக் கடிக்கும். எனவே, நுளம்புக் கடியினைத் தடுக்கப் பயன்படுத்துகின்ற முறைகள் நுளம்பின் வகையில் தங்கியுள்ளன.

(தொடரும்...)

• வைத்தியக்கலாநிதி ந. சிவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைப்போமா?

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

தற்காலத்தில் மிகத் தாக்க வன்மையோடு இருக்கின்ற சினிமா மற்றும் தொலைக்காட்சி மூலம் தெரிவிக்கப்படும் கருத்துகளை மருட்கை நீக்கம் செய்யவேண்டியது அவசியம். நண்பர்கள் ஒன்றுசேர்ந்து கட்டிளமைப் பருவப் பிள்ளைகள் சேர்ந்துவாழ்வதற்கு உதவுவதனைக் காட்டும் பல சினிமாக்கள் பின்பு அந்த வாழ்க்கையில் பிரச்சினைகள் வருகின்ற பொழுது உதவிக்கு வர ஒருவரும் இல்லாமல் போவதனைக் காட்ட விரும்புவதில்லை. இவ்வகையான அறிவூட்டல்கள் அவசியமானவை.

**சமூகம்:**

என்னதான் ஆணாதிக்க சிந்தனைப் போக்கைக் கொண்டிருந்தாலும் சமூகம் இவ்வாறான நடத்தைகளை ஊக்குவிக்கவோ, சகித்துக்கொள்ளவோ கூடாது. இவ்வாறான நடத்தைகளுக்கான தகுந்த எதிர்வினையை சமூகம் காட்டவேண்டும். ''யாருடைய பிள்ளைக்கோ ஏதோ நடக்கிறது'' என்கிற விதமான அணுகுமுறை பாதகமானது. அந்த 'யாரோ' 'நாமாக' மாறுவதற்குக் காலம் எடுக்காது.

முக்கியமானது என்னவென்றால், பாதிக்கப்பட்ட பிள்ளையையே தொடர்ந்தும் பாதிப்படையச் செய்வதற்கான தீர்மானங்களை எடுப்பதற்குச் சமூகம் இடம்கொடுக்கக் கூடாது. ''வீட்டை வர வேண்டாம்,'' ''எங்கடை பள்ளிக்கூடத்திலே இனி இடமில்லை,'' ''உப்பிடியான பிள்ளைகளை நாங்கள் எங்கடை இல்லத்திற்கு எடுக்கிறதில்லை'' போன்ற தீர்மானங்களின் நியாயத்தன்மை பற்றி சமூகம் கேள்வியெழுப்ப வேண்டும். ஒரு சமூகம் அதீத கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டு, சடுதியான 'சுதந்திரத்தை' அனுபவிக்கின்றபொழுது, அங்கு பல்வேறுவிதமான நடத்தைப் பிறழ்வுகளும், ஒழுக்க விழுமியங்களின் சிதறல்களும், சீர்கேடுகளும் நடப்பதற்கு வாய்ப்புக்களிருக்கின்றன. இவ்வாறான நிலைமைகளில் ''நடப்பது நடக்கட்டும்'' என்ற நிலையிலிருந்து விடுபட்டு, சமூகமானது அவற்றை வெவ்வேறு மட்டங்களில் கூட்டாக எதிர்கொள்ள வேண்டியது அவசியமானது. உடைந்து போன சமூக கட்டுமானங்களை மீளக் கட்டியெழுப்புவது சுலபமானது. ஆனால், சமூகப்பெறுமானங்கள் சிதைந்துபோனால் அவற்றை மீளப் பெறுவது இயலாததாகி விடும்.

சமூகப் பெறுமானங்களையும் வாழ்க்கையின் இயல்புகளையும் நிலைநிறுத்துவதிலும் விளங்கிக் கொள்வதிலும் மதங்கள் நிறையப் பங்குவகிக்கலாம். மதங்களில் கூறப்பட்டிருக்கும் நல்ல கருத்துகளும் கடவுளரால் எழுதப்பட்ட எல்லா விடயங்களும் காலத்திற்குப் பொருத்தமான வகையில், தற்கால உதாரணங்களோடும், உவமான உவமேயங்களோடும் மறுவாசிப்புச் செய்யப்பட வேண்டும். அதன் மூலம் தான் மதங்களின் மூலம் கூறவிழைந்த வாழ்க்கைத் தத்துவங்களை இருபத்தோராம் நூற்றாண்டு மனிதர்களிடையே பரவலாக்க முடியும்.

**முடிவுரை:**

''அம்மாட்டை என்னைக் கூட்டிக்கொண்டு போகச் சொல்லுங்கோ... நான் படிக்கப்போறன்... இனிமேல் இப்பிடி செய்யமாட்டேன்... கவனமாயிருப்பேன்...''

ஒரு பிள்ளை யாருடனாவது ஓடிப்போவதற்கும், உறவுகொள்வதற்கும், அதனால் வரும் சிக்கல்களுக்கும் அந்தப் பிள்ளை மட்டும் பொறுப்பாக மாட்டாது. அப்படி அந்தப் பிள்ளையை மட்டும் பொறுப்பாக்குவது என்பது அதில் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புக்களும் தமது பொறுப்புணர்விலிருந்து தப்பித்துக் கொள்ளும் ஒரு பொறிமுறையாகவே பார்க்கப்பட வேண்டும். பிரச்சினைப்பட்ட பிள்ளைகளை ஆதரவோடு அணுகி, அவர்களின் பாதிப்புகளைக் குறைத்து, தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் உதவுவதே நம் எல்லோருடைய கடமையுமாகும். மௌனம் கலைப்போமா?

*(முற்றும்)*

**வைத்தியக்கலாநிதி சா. சிவயோகன்**
(உள மருத்துவ நிபுணர்)

# வீட்டு வைத்தியம்

- வெறும் வயிற்றில் வெந்தயத்தை உட்கொள்வது பலருக்கு முடியாத காரியம். முளை கட்டிய வெந்தயத்தை வெறும் வயிற்றில் காலையில் முதலில் உட்கொள்ளலாம். அல்லது இட்டலி, தோசைக்கு அரைக்கும் மாவுடன் சேர்த்து அரைக்கலாம்.
- பூச்சிக்கடியால் ஏற்படும் எரிச்சல், அரிப்பு நீங்க வெட்டிய வெங்காயம், சுண்ணாம்பு தடவவும். பேபி ஒயிலில் கிருமிநாசினி லோஷன் சில துளிகள் கலந்து கொட்டிய இடத்தில் தடவலாம்.
- உங்கள் பற்கள் கோடை காலத்தில் கொதிக்கிறதா? கவலை வேண்டாம். ஒவ்வொரு நாள் காலையும் நல்லெண்ணெயை வாயில் விட்டு 20 நிமிடங்களுக்குப் பிறகு கொப்பளிக்கவும்.
- உங்கள் பாதங்களில் வெடிப்பா? தினமும் குளிக்கச்செல்லும் முன்னர் தேசிக்காய்த் தோலினை உங்கள் பாத வெடிப்பில் தேய்த்து வரவும்.
- உங்களின் நகங்கள் வெண்மையாக ஜொலிக்க வேண்டுமா? தினமும் ஒரு வேளையாவது தேசிக்காய்த் தோலினால் நகங்கள் மீது தேய்த்த பின்னர் இளஞ்சூடு கொண்ட நீரினால் கழுவிவரவும்.
- 2 தேக்கரண்டி தேன், 2 தேக்கரண்டி எலுமிச்சைச் சாறு இவற்றைச் சேர்த்து ஒரு டம்ளர் வெதுவெதுப்பான நீரில் கலந்து குடிப்பது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது.
- வேர்க்கடலை சாப்பிடுவதால் அதிகமாகும் கலோரியைக் குறைக்க வாணலியில் எண்ணெய் தடவி அதில் வேர்க்கடலையை வறுக்கவும். எண்ணெயில் போட்டுப் பொரிக்க வேண்டாம்.
- உள்ளூறுப்பான கல்லீரரை நல்ல நிலையில் பாதுகாக்க குளிர்சாதனப் பெட்டியில் பைனாப்பிள் துண்டைத் தேனில் தோய்த்து ஒரு நாளைக்கு இருமுறை சாப்பிடவும்.
- பன்னீர் கலந்த எலுமிச்சைச் சாறால் அடிக்கடி வாய் கொப்பளித்தால் வாய் துர்நாற்றம் அகலும்.
- பூச்சாடியில் ஊற்றும் தண்ணீர் நீண்ட நாள் கெடாமல் இருக்க ஒரு துண்டு கரியை அதில் வைக்கவும்.
- சுத்தமாகவும் வாசனை இல்லாமலும் இருக்க 'தேர்மோ பிளாஸ்க்'கின் அரைப்பகுதிக்கு வினிகர், சுடுதண்ணீர், சில துண்டு முட்டை ஓடு போட்டு வைக்கவும்.
- குப்பைத் தொட்டிக்கு கீழ் செய்தித் தாளை வைப்பதால் அது ஈரத்தை உறிஞ்சும்; துர்நாற்றம் வீசாது.
- உணவைக் கட்டுப்படுத்த வேண்டுமா? அதனால், உணவில் கொழுப்புச் சத்தைக் குறைக்க வேண்டுமா? ஆனால், சமையல் குறிப்புக்களில் கொடுக்கப் பட்டுள்ள எண்ணெய் அளவைக் குறைக்கமுடியாத நிலையா? அதற்கு இதோ ஒரு தீர்வு: சாப்பிடும் நேரத்திற்கு முன்பாக உணவைத் தயாரித்து குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும். சாப்பிடுவதற்கு சுடவைப்பதற்கு முன்பு குளிர்சாதனப் பெட்டியிலிருந்து எடுத்து உணவின் மேல் பகுதியை நீக்கி விட்டு சுட வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணச் சந்தையில் ஆண் சமூகம்



இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் எம் மக்களிடம் இன்றும் ஆட்கொண்டிருக்கும் வரதட்சணை எனும் கொடிய நோய். இது மக்களின் இரத்தத்தில் ஊறிவிட்ட - அழிக்க முடியாத நோய்க்கிருமியாகும். ஒரு குழந்தை இவ் உலகில் அவதரிக்கும் போது பெற்றோர்கள் எவ்வளவு மகிழ்ச்சியடைகின்றார்கள். ஆனால், அக் குழந்தை பெண்ணாகப் பிறந்துவிட்டால் ஒரு கணம் தலையில் அடித்துக்கொள்வார்கள். ஏனெனில், இப் பெண்குழந்தையை வளர்த்து படிப்பித்து பெரியவளானதும் திருமணம் எனும் மேடையில் இப் பெண்ணை கண்குளிரக் காணும் வரை பயப்படவேண்டிய சூழ்நிலை. இன்றும் கூட நாற்பது வயதினை கடந்த நிலையில் வரதட்சணைக் கொடுமையினால் எவ்வளவோ பெண்கள் திருமணமாகாமல் முதிர் கன்னிகளாக பெருமூச்சு விடும் ஓசை நம் சமூகத்தின் காதுகளில் கேட்டுக் கொண்டே தான் இருக்கின்றது.

இத்தகைய சூழ்நிலையில் ஆண் பிள்ளைகளைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் தன் மகனை வளர்த்து ஆளாக்கி படிப்பித்து ஒரு கணக்காளராகவோ, வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ மாற்றி அவர்கள் திருமண வயதினை அடைந்ததும் சம்பந்தம் பேசுகின்றார்கள். தமக்கு வரவேண்டிய மருமகள் நல்ல அழகியாகவும் படித்துப் பட்டம் பெற்று நல்ல அரச தொழில் புரிபவளாகவும் இருக்கவேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். அப்படியே அமைந்துவிட்டாலும் அவர்களின் ஆசை நின்றுவிடப் போவதில்லை. தன் மகனைப் படிப்பித்து ஆளாக்கிய செலவுகள் அத்தனையையும் கணக்குப் போட்டு மொத்தமாக வசூலிக்க முடியும் என்றதன் பிற்பாடு தான் திருமணத்திற்கு ஒப்புக்கொள்வார்கள். இருப்பினும் ஜாதி, மதம், இனம், மொழி என்பவற்றையும் கருத்தில் கொண்டே இவர்களது திருமண வியபாரம் நடைபெறுகின்றது.

ஆண் மகனைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் தன் மகனை திருமணம் என்கின்ற சந்தையில் நிற்கவைத்து பெண்களின் பெற்றோரிடம் ஏலத்தில் விடுகின்றனர். ஏனென்று கேட்டால் என் மகனுடன் சந்தோசமாக வாழப்போவது உன் மகள் தானே என்று கூறி அவர்களின் வாயினை அடைத்துவிடுவார்கள். நீங்களே கூறுங்கள், ஒரு மளிகைக் கடையில் நாம் ஒரு பொருளை பணம் கொடுத்து வாங்குகின்றோம். அப்பொருளை வாங்கிய பின் அப் பொருள் எமக்கு மட்டுமே சொந்தமானதும் முழு உரித்துடையதுமாகும். அப்பொருளை விற்ற கடைக்காரருக்கும் அப் பொருளுக்கும் எவ்வித தொடர்பும் பயன்பாடும் இல்லை. அதேபோல் தான். திருமணச் சந்தையில் விற்கப்படும் ஆண்கள் அவர்களை வாங்கிய பெண்களுக்கே முற்று முழுக்க சொந்தமானதும் உரித்துடையதுமாகும். ஆண்மகனின் பெற்றோருக்கும் அவனுக்கும் எவ்வித உறவும் உரிமையும் இல்லை என்றால் ஏற்றுக்கொள்வீர்களா? அதேவேளை, ஒரு குழந்தையைப் பெற்று வளர்த்து படிப்பித்து ஆளாக்கிய பெருமை கூட உங்களைச் சேராது போய்விடும். அப் பெருமைகள் கூட அவர்களை விலைகூறி திருமணம் செய்த பெண்களையே சேரும் என்று கூறினால் பொறுத்துக்கொள்வீர்களா? யோசித்து தான் பாருங்களேன்.

ஒவ்வொரு பெண்ணும் வீட்டின் குத்துவிளக்கு, ஒளியேற்றும் தெய்வங்கள். இவர்களை வரதட்சணைக் கொடுமையால் வதைக்காதீர்கள். மேலும் வருத்தத்திற்குரிய விடயம் என்னவென்றால் வரதட்சணை வலையினை விரிப்பவர்கள் வாழ்ந்துமுடித்த வயதில் பெரியவர்களான தாய்க்குலம் தான் இக்கொடிய வலையினை விரிக்கின்றனர் என்பது மனதை கசப்பாகும் விடயமாகும். இரு மனங்கள், உணர்வுகள் சேர வேண்டிய திருமண பந்தத்தினை அசுத்தமாக்காதீர்கள். வரதட்சணை கொடுமையால் பெருமூச்சு விடும் பெண்களின் சாபம் உங்களை சுட்டெரிக்கும் அக்கினி பிளம்புகளாகும். எனவே, உங்கள் வீட்டிற்கு வரப்போகும் மருமகள் புகுந்த வீட்டு சிறப்பையும் பிறந்த வீட்டு பெருமையினையும் பாதுகாக்கும் காவல் தெய்வங்கள். அவர்களை வாழவைத்து நீங்கள் சந்தோசமாக வாழுங்கள்.

செ.க.தமிழினி

# மூலிகை மருத்துவம்



## சிற்றரத்தை

**Bin Alpinia Galanga**

***E.N Lesser Galangal***

உபயோகபாகம்-வேர்

சுவை-கார்ப்பு

***செய்கை*** - கோழையகற்றி,வெப்பகற்றி,பசித்தீதூண்டி

இது இருவகைப்படும் பேரத்தை,சிற்றரத்தை என இருவகை உண்டு.

***குணம்*** - இருமல்,வாந்தி,தலைவலி,சுரம் என்பன தீரும்.

**உபயோகம்**- ஒரு துண்டு சிற்றரத்தையை வாயில் இட்டு மென்றுவர தொண்டையில் கட்டும் இருமல் வாந்தி என்பன குணமாகும்.

குழந்தைகளுக்கு உண்டாகும் முக்குற்ற நோய்களுக்கு இதனைச் சுட்டு சாம்பல் ஆக்கி தேனும் முலைப்பாலும் சேர்த்துக் கொடுக்க குணமாகும்.

அதிமதுரம் தாளிச பத்திரி, திப்பலி, சிற்றரத்தை வகை 5 கிராம் எடுத்து நீர் விட்டு கரைத்து 500 மில்லிலீற்றர் நீர் விட்டுக்காய்ச்சி வடித்து தேன் சேர்த்துக் கொடுக்க இருமல் , கோழை, தலைவலி, சுரம் என்பன தீரும்.

ரீ. உமா (2 ஆம் வருடம்)
லங்கா சித்த, ஆயுள்வேதக் கல்லூரி - சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி அகராதி தந்த சதாவதானி நா.கதிரை வேற்பிள்ளை

*"செந்தமிழணங்கின் சிந்தையிலென்றும் தங்கும் தமிழொளித் தூங்கவன்"*

எமது நாடு அந்நியர் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் எவ்வாறு நல்லூர் ஆறுமுகநாவலர் தமிழ்மொழியையும் சைவ சமயத்தையும் அழியாது காப்பதற்கு அரும் சேவையாற்றினாரோ அவ்வாறே மேலை புலோலி சதாவதானி ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளையும் சைவத்தையும் தமிழையும் அழியாது தழைத்தோங்க அரும் பணியாற்றி தனது 37ஆவது அகவையில் தமிழ்நாட்டின் நீலகிரியில் பங்குனி மகத்தன்று முருகன் காலடி சேர்ந்தார்.

1871 ஆம் ஆண்டு மேலைப் புலோலி - தம்பசிட்டிக் கிராமத்தில் பிறந்து 1907ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் நீலகிரியில் இறைவனடி சேர்ந்த சதாவதானியின் 22 வயதில் தமிழகம் சென்றவர். அங்கு தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதில் அங்குள்ள தமிழறிஞர்கள் ஆச்சரியப்படும் வகையில் நிறைந்த தமிழ், சைவ அறிவுப்புலமை பெற்றவராகத் திகழ்ந்திருக்கிறார்.

ஈழத்தின் ஒரேயொரு சதாவதானி மட்டுமல்ல. தமிழ் அகராதியை யாவரும் விளங்கும் வகையில் சிறந்த அகராதியாக ஒரு மொழி அகராதியாகப் படைத்தார். பல சமய நூல்களை வெளியிட்டார். அவற்றுள் சுப்பிரமணிய பராக்கிரமம், சைவசந்தரிகை, சிவாலய மஹோற்சவ விளக்கம், சைவ சித்தாந்தச் சுருக்கம் முதலியன குறிப்பிடத்தககவை.

மேலும் சதாவதானியின் சிறந்த சொற்பொழிவாளர், வாதம் செய்வதில் வல்லவர், சிறந்த தமிழ் ஆசிரியர், சிறந்த நூல் ஆசிரியர், உரையாசிரியர், புராண விரிவுரையாளர், பதிப்பாசிரியர் என பன்முகம் கொண்டவர். எனினும், அவருடைய தலையாய பணியாகத் திகழ்ந்தது அகராதிப் பணி என்றால் மிகையாகாது. 1842 இல் மானிப்பாய் அகராதி வெளிவந்த போதிலும் சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளையால் தொகுக்கப்பட்ட தமிழ்ப்பேரகராதி அனைவராலும் விளங்கத்தக்க வகையில் ஒரு மொழி அகராதியாக 1899 இல் வெளிவந்தது. இதன்மூலம் தமிழ்மொழியின் காவலராக எங்கள் சதாவதானி திகழ்ந்திருக்கிறார்கள். தமிழ்மொழியில் பயிற்சி பெற விரும்பும் பிற நாட்டார் தமிழகராதிகளை உருவாக்கினர். எனினும், அதற்கு முன்பே செய்யுள் வடிவில் நிகண்டுகள் எழுதப்பட்டன. பின்பே உரைநடையில் விளக்கம் கொண்ட அகராதிகள் தோன்றின. இவரது அகராதி 1901 இலும் இரண்டாம் பதிப்பாக வெளிவந்தது. இத்தகைய சிறந்த அகராதியைத் தொகுக்க சதாவதானியின் தமிழ்மொழிப் புலமையுடன் வடமொழிப்புலமையும் உதவியாக அமைந்தது.

அவர் தம் தமிழ்மொழிப் புலமையை அவர் தம் நன்மாணாக்கரும் தமிழ்நாட்டின் பெரும் தமிழறிஞருமான வி. கல்யாணசுந்தர முதலியாரின் குறிப்பு ஒன்றை மீட்பது பொருத்தமானதாகும். அக் குறிப்பில் இராயப்பேட்டை தமிழ்ப்பண்டிதர் வல்லி. ப.தெய்வநாயக முதலியார் அவர்கள் "யாழ்ப்பாணத்திலிருந்து கதிரைவேற்பிள்ளை என்பவர் வந்திருக்கிறார். அவர் நாயகரை விட நன்றாகப் பேசுகிறார். அவரது பேச்சைக் கேட்கவேண்டாமா" என்றார்.

கதிரைவேற்பிள்ளையின் பேச்சைக் கேட்பதற்கு என்று ஒரு கூட்டம் திரண்டது. புரசையிலே சுந்தரம்பிள்ளை தெருவிலே ஒரு வீர சைவர் வீட்டிலே பெருங்கூட்டம் திரண்டிருந்தது. அக்கூட்டத்தை காளமேகம் ஒருருக் கொண்டு நெற்றியிலே நீறணிந்து கழுத்திலே அக்கமாலை பூண்டு இடுப்பில் பீதாம்பரம் புனைந்து சொன்மழை பொழிந்ததைக் கண்டோம்" என்று கூறுகின்றார். மேலும், இராமலிங்க வள்ளலாருடைல பாக்கள் அருட்பாக்கள் அல்ல. மருட் பாக்கள் என்று சதாவதானி அவர்கள் வாதிட்டு வென்றார்.

இதற்காக நீதிமன்றம் சென்றும் பெரிய தமிழ் அறிஞர்களுடன் வாதிட்டும் ஈற்றில் வெற்றிபெற்றார். இதனால்தான் பின்னர் தமிழகத்தில் சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் தமிழ்ப் புலமை பற்றிய தமிழ்ப்பணி பற்றிய செய்திகள் திட்டமிட்டே மழுங்கடிக்கப்பட்டு வருவது கண்கூடு. ஒருவகையில் ஈழத்திலிருந்து வந்த ஒரு அறிஞர் தம்மையெல்லாம் விஞ்சிவிட்டார் என்ற வகையில் அவர் தம் பெருமையை ஏற்றுக்கொள்ளாத மனநிலையே தமிழக அறிஞர்களிடையே இருந்தது என்பதே உண்மை. இதனால் சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் பெருமைகளை இருட்டடிப்புச் செய்யவும் மழுங்கடிக்கவும் திரிபடையச் செய்யவும் தமிழகம் கங்கணங்கட்டி நின்றது உண்மையே.

அவரின் பன்முக ஆற்றலுக்கு மணிமகுடமாய்த் திகழ்வது அவரது தமிழ்ப் பேரகராதியே என்றால் மிகையாகாது.

**கி. குகநாதன்**
*(தலைவர் - சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்)*

# திருநெல்வேலி பொதுச்சந்தை கழிவுகள் அகற்றப்படுமா?

யாழ்.குடா நாட்டில் பிரசித்தி பெற்ற பொதுச்சந்தைகளில் திருநெல்வேலி பொதுச்சந்தையும் ஒன்றாகும். இப்பொதுச்சந்தை நல்லூர் பிரதேச சபைக்கு கீழ் இயங்கி வருகின்றது. இச்சந்தை ஆரம்பகாலத்தில் மிகச் சிறிய கட்டடத் தொகுதிகளைக் கொண்டது. கால கதியில் சந்தைக்கட்டடங்கள் அதிகரித்து கசல வளங்களையும் கொண்டதாக மாறியுள்ளது.

இச்சந்தைக்கு காலை வேளைகளில் பெரும் எண்ணிக்கையான வியாபாரிகளும் பொருட்களைக் கொள்வனவு செய்வோரும் ஒன்று கூடுவர். இதனால் கட்டடங்கள் விஸ்தரிக்கப்பட்டு மீன், பழ, மரக்கறி சந்தைகள்என பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் மக்கள் தங்கள் மரக்கறி தேவைகளுக்கு மருதனார் மடம் பொதுச் சந்தைக்குச் சென்று வந்தனர். இன்று குடாநாட்டு மக்கள் அனைவரும் மரக்கறி தேவைக்கு திருநெல்வேலி சந்தைக்கே சென்று வாங்குகின்றார்கள்.

குடாநாட்டுப் பொதுச்சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மரக்கறி வியாபாரிகள் காலையில் சந்தையில் கூடும் போது என்ன என்ன மரக்கறி வகைகள் என்ன விலையில் விற்கவேண்டும் என்று தங்களுக்கு தாங்களே தீர்மானித்து எல்லோரும் ஒரே விலையில் மரக்கறி வகைகள் விற்று வருவதாக பாவனையார் ஒருவர் தெரிவித்தார்.

அன்றாடம் உழைத்து வாழ்க்கை நடத்திவரும் குடும்பங்கள் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் வாழ்க்கை நடத்த முடியாது திண்டாடுகின்றார்கள்.

கூலி வேலை செய்யும் தொழிலாளி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 500 ரூபாவோ அல்லது 600 ரூபாவோ சம்பளமாக பெற்று எப்படி குடும்பம் நடத்துவது? அதோடு திட்டமிட்டு செயற்படாத காரணத்தால் இவர்களில் சிலருக்கு குழந்தை அதிகம். இந்த நிலையில் எப்படி குடும்பத்தை நடத்துவது?

வியாபாரிகள் தங்களுக்கு தாங்கள் விலை நிர்ணயம் செய்வதற்கு தடைவிதித்து பாமரமக்களின் நலன்கருதி மரக்கறிகளுக்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விலைகளை நிர்ணயிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மரக்கறி விலை அதிகரிப்பு குறித்து மௌனம் சாதிப்பதன் மர்மம் என்ன என்று பாவனையாளர்கள் கேட்கிறார்கள். இதேவேளை, பெரும் தொகையான மரக்கறிகள் தென்இலங்கைக்கு தினசரி ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் டம்புல என்ற இடத்திலிருந்து மரக்கறிவகைகள் இங்கு கொண்டுவருவதாகவும் தெரிய வருகிறது.

எதுவாயினும் மக்களுக்குச் சேவை செய்வதிலும் மக்கள் கஷ்டங்களை நீக்கி இயல்பு வாழ்க்கை வாழ வழிவகுத்து கொடுப்பது அரசின் கடமையாகும். விலைவாசியை கூட்டி ஏழை மக்கள் வயிற்றில் அடித்து ஓலமிடுவதாக பாவனையாளர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை திருநெல்வேலி பொதுச்சந்தையில் காணப்படும் கழிவுப் பொருட்களை உடனுக்குடன் அகற்றி உதவ வேண்டும் என்று மக்கள் கோரிவருகின்றனர். தினசரி காலை வேளை சேகரிக்கும் கழிவுப் பொருட்களை ஒரு இடத்தில் சேகரித்து இரண்டு மூன்று மணித்தியாலயங்களுக்குப் பின்பு டிரக்டர் வண்டி மூலம் சுகாதார ஊழியர்கள் அகற்றி வருகின்றனர்.

இதற்கிடையில் அக்கழிவுப் பொருட்களை காகங்கள், நாய்கள் சிதறவைப்பதோடு அதிலிருந்து துர்நாற்றமும் வீசுவதாக தெரிவிக்கப்படுகின்றது.ஆகவே சுகாதார ஊழியர்கள் உடனுக்குடன் அப்புறப்படுத்துவதால் அத்துர்நாற்றத்தை தடுத்து நிறுத்தலாம் தானே?இது இவ்வாறு இருக்க பாடசாலை வீதியை அடுத்து நாவலடி வீதிச் சந்தியில் அப்பகுதி வாழ்மக்கள் தங்கள் வீடுகளில் உள்ள கழிவுப் பொருட்களைக் கொண்டு வந்து போடுவதால் கட்டாக்காலி நாய்களும் பறவைகளும் சிந்தி சிதறுகின்றன.

எனவே உடனுக்குடன் இக் கழிவுப் பொருட்களை அகற்ற வழி செய்ய வேண்டும்.

**வன்.இராமச்சந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இன்பம்

உறையூர் என்ற நகரம் முற்காலத்தில் சோழ மன்னர்களின் இராஜதானியாக இருந்தது. காவிரிக் கரையிலே அந்நகர் பொன்னகர் போல் பொலிவுற்றுத் திகழ்ந்தது. இம் மகிமை தங்கிய இந் நகரைச் சோழ மன்னர்கள் பரம்பரையாக ஆட்சிபுரிந்து வந்தனர்.

இத்தகைய சோழர் குலத்திலே கி.பி. 1133 - 1150 வரை அரசு புரிந்து வந்த அநாபாயச் சோழன் மிகப்பெரும் கீர்த்தியுடையவன். இவன் மிகுந்த சிவபக்தியுடையவன். இவனை 2 ஆம் குலோத்துங்கன் எனவும் அழைப்பர். பகைவர்களால் வரும் அபாயங்களை அழித்தபடியால் அநபாயன் என்ற பெயர் இவனுக்கு உண்டாயிற்று. இவனிடம் மந்திரியாக இருந்த சேக்கிழார் பெருமான் இம் மன்னனின் தூண்டுதலால் தான் பெரிய புராணம் பாடினார் என்பது சிறப்பிற்குரியது.

இத்தகைய சிறப்பிற்குரிய அநபாயனின் அவைக்களப் புலவராக ஒட்டகக் கூத்தர் விளங்கினார். 'கவிச்சக்கரவர்த்தி', 'கவிதாச கவிராயர்' என்ற சிறப்புப் பட்டங்களும் இவருக்கு இருந்தன. இவர் அநபாயனுடைய தந்தை விக்கிரம சோழனிடம் ஆஸ்தான புலவராக இருந்தார். அப்போது அநபாய மன்னன் இவரிடம் கல்வி பயின்றார். அநபாயனின் மகன் 2ஆம் இராஜராஜனும் ஒட்டகத் கூத்தரிடம் தான் கல்வி பயின்றான்.

அக்காலத்திலே உள்நாட்டுக் கலகங்கள் இல்லை. சேர, சோழ, பாண்டியர்கள் ஒற்றுமையாக இருந்தனர். அதனால் தமிழகத்தில் அமைதி நிலவியது. அன்புநெறி தழைத்தது. இன்பம் செழித்தது.

இந்நிலையில், அநபாயனின் பிறந்த நாள் கொண்டாட்டத்தை மக்கள் வெகு சிறப்பாக கொண்டாடினார்கள். காலை தொடங்கி மாலை வரை அன்னதானம், சொர்ணதானம் முதலிய பல தானங்கள் வழங்கப்பட்டன.

இடிபோல் பல்லியங்கள் முழங்கின. எங்கும் இன்பமயம். திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

இரவு 9.00 மணி மன்னர் பரிவாரங்கள் சூழல் திருவுலா சென்றார். இராஜவீதியில் ஆண்கள் ஒருபுறம் பெண்கள் இன்னொருபுறம் என ஒழுங்காகச் சென்றனர். அவ்வுலாவின் பெருமைகளை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

இசை நுணுக்கங்கள் தெரிந்த பல இசைவிற்பன்னர்கள் ஒருபுறம் குழலிசை, மத்தள இசைக் கலைஞர்கள் மறுபுறம் என இசை என்ற இன்பவெள்ளம் கரைபுரண்டு ஓடியது. எள் விழுந்தால் கூட கீழே விழாத வகையில் மக்கள் கூட்டம் கூடியிருந்தது. இந்த மக்கள் வெள்ளத்தில் அமைதி வெள்ளம் நிறைந்திருந்தது தான் பெரு அதிசயம்.

இவ்வாறான உபசாரங்களுக்கு மத்தியில் மன்னர் தெருவீதியுலா வந்துகொண்டிருக்கும் போது நேரம் நடுநிசியை நெருங்கியது. நட்சத்திர மண்டலம் போல் விளக்குகள் ஒளிவீசிக் கொண்டிருந்தன. அமைச்சர்கள் முதலிய பரிவாரங்கள் மன்னரைச் சூழ்ந்திருந்தனர்.

சூரியன் அருகில் சந்திரன் இருப்பது போல் ஒட்டகத்கூத்தரும் அருகில் இருந்தார். இருபுறமும் வெண்சாமரை வீசினார்கள். வெண்கொற்றக் குடைபிடித்தனர். இரவிலே குடை பிடிப்பதைக் கண்ட குறும்புக்காரப் பெண்ணொருத்தி கூர்மையான அறிவு படைத்தவள். அருகில் நின்ற மற்றொரு பெண்ணைப் பார்த்தது, ''என்னடி இப்போது என்ன வெயிலா? மழையா? இல்லையே. இந்த நேரத்தில் குடை அவசியமோ, அற்பனுக்கு வாழ்வுவந்தால் அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பான் என்பது பழமொழி. அப் பழமொழி இப்போது என் நினைவுக்கு வருகிறது'' என்று அப்பெண் மற்றொரு பெண்ணிடம் கிண்டலாகச் சொன்னாள்.

மன்னருடைய செவிகளிலும் இவ் வார்த்தைகள் விழவே அதை கேட்டு அதிர்ச்சியடைந்தார். அவமானப்பட்டவராக அர்த்த ராத்திரியில் குடை ஏன்? என்று அப் பெண் குறும்பாகக் கேட்ட கேள்விக்கு விடை கூறவேண்டும் என மன்னர் ஒட்டக்கூத்தரிடம் வேண்டினார்.

ஒட்டக்கூத்தர் குறிப்பறிந்து பாடுவதில் மதிநுட்பம் வாய்ந்தவர். பெண் கூறிய வார்த்தைகளைக் கேட்டு மன்னர் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை உணர்ந்து ஒரு பாடல் பாடினார்.

அதாவது, மன்னர் பெருமானே! வணக்கம். பெண்களின் கற்பொழுக்கத்தால் உலகிற்கு எல்லா நலன்களும் உண்டாகின்றன. அத்தகைய பெண்களின் கற்பொழுக்கத்தை காத்தருள்வது காவலனின் கடமை. விண்ணிலே இருப்பவள் அருந்ததி. அவள் கற்புக்கரசி. அரசனான நீ பவனி வரும்போது விண்ணிலிருந்து உன்னைக் கண்டால் இத்துணை அழகனும் உளனோ? என்று உன் அழகில் மயங்கினால் அவள் கற்பு மாசு படும். அவ் வண்ணம் இரவு வேளையில் வானத்தில் உலவும் இயல்புடையவளாகிய அருந்ததியின் பார்வை உன்மேல் விழக்கூடாது. இதனால் அவளது கற்பைப் பாதுகாக்கும் பொருட்டுத் தான் உனக்கு குடை பிடிக்கப்படுகிறது.

இது வெறும் ஆடம்பரத்திற்காகப் பிடிக்கப்படவில்லை என மிக அழகாக கவிநயத்துடன் நகைச்சுவையாக கூறினார்.

அவர் கூறிய கருத்துக்கள் பொதிந்த பாடல் இதோ,


*'அண்ட மீதுலவும் அருந்திறல்*
*கற்புக் கரசியாம் அருந்ததி*
*நின்னைக்*
*கண்டதால் ஊறுபட லொனா*
*தென்று கருதி நீ பவனியில்*
*கவிகை*
*கொண்டதும் முறையே*
*குலோத்துங்க எனும் கொற்றல*
*நற்றவ மணியே!*
*மண்டனைப் புரப்போர் மாதார்*
*கற்பை வளர்த்திடல் மாண்புடைத்*
*தன்றோ?'*

இப் பாடலைக் கேட்டு மன்னர் மட்டுமன்றி அர்த்த ராத்திரியில் குடை எதற்கு எனக் கேட்ட பெண்ணும் கூட தலைகுனிந்து அரசனிடம் மன்னிப்புக் கேட்பது போல தலைவணங்கி நின்றாள்.

இனிமையான - பொருள் ஆழம் மிக்க - தெளிவான கருத்துக்களையுடைய புலவரது பாடலினால் தனது மானம் காப்பாற்றப்பட்டது குறித்து மன்னனின் உள்ளமும் உணர்வும் குளிர்ந்து ஆனந்தப் பட்டான்.

**எஸ். நதிபரன்** B.A. (Hons)

# ஊர்ப் புதினம்



கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது நாம் யாவரும் அறிந்த முதுமொழி. அண்மையில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டேன்.

அங்கு பேசிய பெரியார் ஒருவர், இது தவறு என்றும் தொடர்ந்து கற்றுக் கொண்டு இருப்பவருக்குத் தான் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று கூறினார். சிந்திக்கத் தக்க விடயம் தான். அவர் கூறியது சரியென்று படுகிறது. ஏனெனில், அறிவியல் உலகம் கணத்துக்குக் கணம் - நாளுக்கு நாள் மாறுபடுகின்றது.

முன்பு ஏதாவதொரு துறையில் பாரிய முன்னேற்றம் ஏற்பட சில வருடங்கள் பிடித்தன. ஆனால், இப்போது விஞ்ஞானத்தின் விரைவான வளர்ச்சி குறிப்பாக தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானம் மிக மிக வேகமாக வளர்ச்சி அடைகின்றது.

மனித வாழ்வின் அனைத்து தளங்களையும் அடியோடு அசைத்து விடுகின்றது.

இதனால் தான் கற்றோர் எனும் இறந்தகாலச் சொல் வழக்கை விடுத்து தொடர்ந்து கற்றுக் கொண்டிருப்போர் எனும் நிகழ் காலச் சொல் வழக்கிற்கு நாம் மாறவேண்டியுள்ளது.

அரச பணிமனைகள், கல்வி நிறுவனங்களை எடுத்துப் பார்ப்போமாயின் தொடர்ந்து கற்றுக் கொண்டிருப்போருக்கு இருக்கும் மதிப்பைக் காணலாம்.

ஆனாலும், அங்கு இருக்கின்ற பதவியில் உயர்வுபெறுவதற்கு பாரம்பரியமான - பழைமையடைந்த முறைகள் கடைப்பிடிக்கப்படுவது மனவருத்தத்திற்குரியது.

ஆனால், தனியார் துறையோ தொடர்ந்து கற்பவர்க்கு மதிப்பளித்து மிக விரைவாகவே மேலுயர்த்தி விடுகின்றது.

தொடர்ந்து கற்றல் செயற்பாட்டை யாவரும் மேற்கொள்வதில்லை. ஒரு சிலரே மேற்கொள்கின்றனர்.


மாறிவரும் அறிவியலை அவ்வப்போது உள்வாங்கக் கற்றுக் கொள்ள வேண்டும். மாற்றம் ஒன்று தான் உலகில் நிரந்தரமானது.

**சிவகாமி -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில்நுட்பம்

## 4 • வரலாற்றினூடாக ஒரு பயணம்



16



16

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

(iii) மூன்றாவது சந்ததி (Third Generation (1964-1979) தனிப்பட்ட Transistors Integrated Circuits ஆல் பிரதியீடு செய்யப்பட்டது. Magnetic Tape உம் Disks உம் முற்றுமுழுதாக வெளியக சேமிப்பான்களாகப் பயன்படுத்தப்பட்டன.


MOS (Metal Oxide Semiconductors) உள்ளக சேமிப்பான்களாகப் பயன்படுத்தப்பட்டது.

Operation System அறிமுகப்படுத்தப்பட்டது. கணினி மொழியாக BASIC பயன்படுத்தப்பட்டது. Microsoft இன் ஆரம்ப உருவாக்கம் 1975 இல் ஆரம்பிக்கப்பட்டது. Pictures (17) (iv) நான்காவது சந்ததி (Fourth Generation (1979 இன்று வரை) LSI (Large Scale Integrated Circuits) உம் VLSI (Very Large Scale Integreated Circuits) உம் பயன்பாட்டிற்கு வந்தன.


Memory, Logic மற்றும் ஒரு கட்டுப்பாட்டு (Control) பகுதிகள் மூன்றும் ஒன்றாக ஒரு Chip ஆக உருவாக்கப்பட்ட இவ் அறிமுகமானது. நான்காவது சந்ததிக்கான கணினி மொழியாக Visicale, Lotus 1-2-3, deBase மற்றும் Microsoft Word என்பன பாவிக்கப்பட்டன.

பாவனையாளர்களுக்கு இலகுவாகக் கையாளக் கூடியதாக GUI (Graphical User Interface) 1980 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. Ms Windows இன் முதல் வடிவம் 1983இல் உருவாக்கப்பட்டது. Apples கணினிகள் GUI 1984 இல் உருவாக்கப்பட்டன. Picture 18

(முற்றும்)




17



18

### கணினிச் சொற்கள்

1. CPU: Central Processing Unit
2. MPU: Micro Processor Unit
3. ALU :Arithmetic Logic Unit
4. CU :Control Unit
5. ODBC :Open DataBase Connctivity
6. SQL :StructuredQueryLanguage
7. URL: Uniform Resource Locator
8. HTTP: Hyper Text Transfer Protocol
9. FTP: File Transfer Protocol
10. PC: Personal Computer
11. UPS: Uninterruptible Power Supply
12. USB: Universal Serial Bus
13. CRT: Cathode - Ray Tube
14. LCD: Liquid Crystal Display
15. TFT :Thin Film Transistor

மேகலா பாலமுரளி

கணினி தொடர்பான உங்களது சந்தேகங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். பதில் கிடைக்கும்.

முகவரி

'வீரகேசரி' கிளைக் காரியாலயம்
117, புகையிரத வீதி, யாழ்ப்பாணம்.

# திருப்பாடுகளை நினைவுகூருவோம்

## கடவுளின் அன்பை உணராத உள்ளங்கள் வெறும் வெற்றிடங்களே



அன்புதான் அனைத்திற்கும் முதன்மையான கட்டளை. கடவுளை அன்பு செய்வதும் அடுத்திருப்பவரை அன்பு செய்வதும் விவிலியத்தின் எல்லா எதிர்பார்புக்களையும் நிறைவு செய்கிறது.

இறைவன் தன்னுடைய அளவற்ற - எல்லையற்ற அன்பினை படைப்புக்கள் வழியாக வெளிப்படுத்தியுள்ளார். இருப்பினும், அன்பு தான் வாழ்வின் உண்மை, அன்பு தான் வாழ்வின் ஒளி, அன்பு தான் பாதை என்பதனை தன்னுடைய ஒரே மகனாகிய இயேசு கிறிஸ்து வழியாக இவ்வுலகில் வெளிப்படுத்தியுள்ளார்.

இறைவனின் படைப்பின் பால் எல்லா உயிரினங்களும் அன்புகொண்டு வாழுகின்றன. அதனையே கடவுளும் விரும்புகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக மனிதன் அன்பினை இயேசு தனது வாழ்வின் ஊடாக எமக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

இன்று எம் மண்ணில் அன்பு என்ற நற்பண்பு அருகிக்கொண்டு செல்கின்றது. ஏனெனில் கொலையும், கொள்ளையும், கருச்சிதைவுகளும், கலவரங்களும், பிளவும், கட்சி மோதல்களும், சுயநலப்போக்கும், பொறாமையும், எரிச்சலும், பழிவாங்கும் தன்மையும், போலியான வாழ்வும், முகமூடி வாழ்க்கையும் இதனை எமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.

இவை அனைத்தையும் நீக்கி மனிதனிடத்தில் முழு மனித விடுதலையினை பெற்றுக் கொடுக்கவே இயேசு இல்வுலகிற்கு வந்தார். தம்மையே பலியாக எமக்கு அளித்தார். ஆனால், அவரது எண்ணம் சிந்தினையினை நிலைநாட்டுபவர்களாக எத்தனை பேர் வாழ்கின்றோம்?

ஆண்டுதோறும் தவக்காலம் உருண்டோடிக் கொண்டு போகின்றதே தவிர, மனித மனங்களில் எந்தவித மாற்றங்களும் இன்றுவரை ஏற்படவில்லை.

உண்மை அன்பு மண்ணில் மலர உளமார அயலாரை அன்பு செய்ய வேண்டும். அத்தகைய அன்பானது சுயநலம் அற்ற அன்பதாக தன்னலம் நாடாத அன்பாக இருத்தல்வேண்டும். அப்போது தான் உண்மையும் நீதியும் பகிர்வும் பொறுமையும் அரவணைப்பும் உதவும் மனப்பக்குவமும் உள்ளத்தூய்மையும் அமைதியும் தனி மனிதனிடத்திலும் குடும்பத்திலும் சமூகத்திலும் மிளிரும் என்பது அனுபவமுடையோர் கருத்து. இத்தகைய உண்மையினையே இறைமகன் இயேசுவும் எமக்கு தம் வாழ்வின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

அன்பிலே வாழும் போது தான் நாம் ஆண்டவரில் வாழுகின்றோம். அவருடைய திருமுன்நிலையில் வாழுகின்றோம். அன்புதான் மனித வாழ்வின் அடையாளம். இயேசுவின் வாழ்வும் போதனையும் குறிப்பாக அவரது பாடுகள், மரணம் அன்பின் வெளிப்பாடுகளே. மேலும், இறையாட்சியின் அடையாளம் அன்புதான். எங்கெல்லாம் அன்பு வெளிப்படுகிறதோ அங்கெல்லாம் இறையாட்சி செயற்படுகின்றது என தூய பவுலடியார் கூறுகிறார். அன்பையே நம் வாழ்வின் மையமாகக் கொண்டு வாழ்வோம். அப்போது இறையாட்சி நம்மில் மிளிரும். இறைவாழ்வும் நம்மில் உதயமமாகும்.

• ஜெ.அனுஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் விளையாட்டு செய்திகள்

## மர்ஹூம் அலிபர் ரமீஸ் கிண்ணத்தை நாவாந்துறை சென்மேரிஸ் அணி வென்றது



வெற்றி பெற்ற நாவாந்துறை சென்மேரிஸ் வி.க. தலைவர் வெற்றிக் கிண்ணத்தினைப் பெறுகின்றார்

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழகம் மர்ஹூம் அலிபர் ரமீஸ் ஞாபகார்த்தமாக உதைப்பந்தட்ட போட்டியை நடத்தியது. மேற்படி போட்டியின் இறுதிப் போட்டியானது கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஒஸ்மானியாக் கல்லூரியின் ஜன்னா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அன்ரனிப் பிள்ளையும் கௌரவ விருந்தினராக ஒஸ்மானியாக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் முபாரக்கும் கலந்து கொண்டனர்.

இதில் ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டு கழகத்தினை எதிர்த்து நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டம் தொடங்கிய நேரத்தில் இருந்து போட்டியானது மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. யார் பக்கம் வெற்றி கிடைக்கும் என மிக பரபரப்பாக நடைபெற்றது.

இடைவேளையின் போது இரு அணிகளும் தலா ஒரு கோல்களைப் போட்டு சம நிலையில் இருந்தன.

இரண்டாம் பாதி ஆட்டத்தின் போது நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பெற்று முன்னிலையில் இருந்த போது போட்டியானது மிகவும் விறுவிறுப்படைந்தது.

ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்தினர் கோல் அடிக்க எடுத்த முயற்சிகள் அனைத்தும் கோல் காப்பாளரினால் சிறப்பாக தடுக்கப்பட்டது. இறுதி நேரத்தில் ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் மேலும் ஒரு கோலினைப் பெற்றது. ஆட்ட முடிவில் நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் 3 : 2 என்ற கோல் கணக்கில் வெற்றி வாகை சூடி சம்பியனாகியது.

சிறந்த விளையாட்டு வீரனாக நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த கி.ஜெக்சன் ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த எஸ்.மதிராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

முதலாம் இடம் பெற்ற நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றிக் கிண்ணமும் 15 ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டது.

இரண்டாம் இடத்தினைப் பெற்ற ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்தினருக்கு வெற்றிக் கிண்ணமும் 10 ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டது.

## கோப்பாய் கோட்ட பாடசாலைகளின் வலைப்பந்தாட்டப் போட்டிகள்

தெல்லிப்பழை

கோப்பாய் கோட்ட மட்ட பாடசாலைசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இவ் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் 15 வயதுப் பிரிவு போட்டியில் ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம் முதலாம் இடத்தையும் அச்சுவேலி புனித திரேசாஸ் மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தினையும் புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது.

17 வயதுப் பிரிவு போட்டியில் புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரி முதலாம் இடத்தினையும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தினையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது.

19 வயதுப் பிரிவு போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முதலாம் இத்தினையும் நீர் வேலி அத்தியார் இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தினையும் புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரி மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டது.

இவ் வலைப்பந்தாட்ப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் 11 பாடசாலை அணிகளும் 17 வயதுப் பிரிவில் 12 பாடசாலை அணிகளும் 19 வயதுப்பிரிவில் 6 பாடசாலை அணிகளும் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது

## வலி.கிழக்குப் பிரதேச சபை விளையாட்டு விழா

கைதடி

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் நிகழ்வின் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாதுரை ,என்ரிப் பிரதி திட்டப் பணிப்பாளர் ச.குகதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக விளையாட்டுத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் சு.கனகராஜா, யாழ்.மாவட்ட விளையாட்டதிகாரி திருமதி ஏ.எப்.சீ ரூபசிங்கம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதபர் இ.குணநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 92 வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவினை முன்னிட்டு கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியானது கடந்த 23 ஆம் திகதி மற்றும் 24 ஆம் திகதியும் மின்னொளியில் அருநோதயா விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியின் முதலாவது அரை இறுதிப்போட்டியில் கே.கே.எஸ் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்த இளைஞன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இதில் கே.கே.எஸ் ஐக்கிய விளையாட்டுக் கழகமானது 25:22, 25:23, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தொடச்சியாக மூன்று நேர் செற்றுகளில் வெற்றியினைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாவது அரை இறுதிப்போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகமும் அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இதில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகமானது 25:20, 18:25, 25:23, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் 3:1 என்ற செற்றுகளில் வெற்றியினைப் பெற்றுக் கொண்டது.

இதில் வெற்றிபெற்ற அணிகள் எதிர் வரும் 10ம் திகதி அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டரங்கில் இரவு 7.30 மணிக்கு மின்னொளியல் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் மோதவுள்ளன.



இறுதிப்போட்டியில் மோதவுள்ள காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.



இறுதிப்போட்டியில் மோதவுள்ள உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறி சொன்னவனின் உயிரைக்குடித்த ஆவி



உலகத்தை விஞ்ஞானம் விழுகிவரும் காலத்தில் ஆவிகளின் உலகை மறக்காமல் வாழும் மக்கள் இன்னும் உள்ளனர் என்பது வியக்க வைக்கிறதுமு

60 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகம், ராமநாதபுரம் மாவட்டம் கடும் வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்து கொண்டிருந்தது. அந்த நேரத்தில் மக்கள் பல மாவட்டங்களுக்கும் இடம்பெயர்ந்தனர். அப்படித்தான் திருப்பூர் மாவட்டம் மானூருக்கும் பல குடும்பங்கள் சென்றன.

அங்கு இடம்பெயர்ந்து சென்றவர்கள் ஊரையொட்டி சண்முக நதிக்கரையோரம் சில குடும்பங்கள் குடியேறின. அது முன்னர் இடுகாடாக பயன்படுத்தப்பட்ட பகுதி. பயன்பாட்டில் இல்லாததால் அந்த இடத்திலிருந்த கல்லறைகளை இடித்து தள்ளிவிட்டு, அதன் மேல் குடிசையை அமைத்திருந்தனர். அதில் நாட்டுத் துரையும் ஒருவர். இந்த சுடுகாட்டு நிலம், தன் மகளின் வாழ்க்கைக்கு வேட்டு வைக்கப்போகிறது என்பது அப்போது அவர் அறிந்திருக்கவில்லை.

நாட்டுத்துரைக்கு 60 வயதிருக்கும். மனைவி இறந்து விட்டார்.ஒரே மகள் பூமணி. குடிசை போட்ட முதல் இரவே பூமணிக்கு தன்னுள் ஏதோ மாற்றம் தெரிந்தது. உடலுக்குள் ஏதோ ஊடுருவுவது போல இருந்ததால் இது பற்றி தந்தையிடம் கூறினாள். ஆனால், அவர் பெரிதாக கண்டுகொள்ளவில்லை. அன்றுடன் இது நிற்கவில்லை. ஒவ்வொரு நாளும் தொடர ஆரம்பித்தது. அடிக்கடி சுயநினைவை இழந்து வந்தாள்.

'வேறு இடத்திற்கு புதிதாக வந்திருப்பதால் இப்படி இருக்கு. போக போக சரியாயிடும்' என மகளை தேற்றினார் நாட்டுத்துரை. ஆனால் அவள், தனக்குள் ஏதோ புகுந்திருப்பது போல உணர்ந்தாள். ஒரு நாள் பாதிநாள் வேலையை மட்டும் முடித்து நாட்டுத்துரை வீட்டுக்கு வந்தார். அப்போது அவர் கண்ட காட்சி நடுநடுங்க செய்தது.

காதை கிழிக்கும் உறுமல் சத்தம்.. தலைவிரிகோலம்.. செக்கசெவேல் என சிவந்த கண்கள். நாக்கை மடித்து கடித்தபடி அமர்ந்திருந்தாள் பூமணி. தனது மகளா என ஒரு கணம் விக்கித்து போனார் நாட்டுத்துரை. யாரோ ஒருவருடன் பேசி கொண்டிருப்பது போல இருந்த பூமணி, திடீரென அவளுக்கு சம்பந்தமே இல்லாத ஆண் குரலில் 'அவனை கொல்லாமல் விடமாட்டேன்' என தரையில் அடித்து சத்தியம் செய்துவிட்டு மயங்கி சரிந்தாள். அதிர்ச்சியிலிருந்து மீளாத நாட்டுத்துரை தன் மகளுக்கு பேய் பிடித்திருக்கிறது என்பதை நினைத்து பயந்து போனார். வெளியில் சொன்னால் அவளது வாழ்க்கை பாதிக்கும் என்று பேசாமல் இருந்துவிட்டார். ஆனால், அன்றிரவு நடந்த சம்பவம்தான் இன்னும் பயங்கரமானது.

நள்ளிரவு வேளையில் குடுகுடுப்பை அடிக்கும் சத்தம் கேட்டது. நாட்டுத்துரை குடுகுடுப்பை ஒலியால் எழுந்தார். அவரின் குடிசை அருகே வந்த கோடங்கி வாசலில் குடுகுடுப்பை அடித்து குறி சொல்லத் தொடங்கினான். கண நேரத்தில் கண் விழித்த பூமணி ஆவேசம் கொண்டவளாய் வீட்டை விட்டு வெளியே வந்தாள். கோடங்கியின் கழுத்தை கடித்து, அவனது உயிரை குடித்தாள். இதை அதிர்ச்சியோடு பார்க்க மட்டுமே முடிந்தது நாட்டு துரைக்கு. அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

மறுநாள் காலையில் கோடங்கி எப்படி செத்தான் என்பது புரியாமல் ஊரே திகைத்து கொண்டிருந்தது. மறுநாளே ஊரை காலி செய்து விட்டு வெளியேறி விட்டார். பின்னர் கொஞ்ச நாட்கள் கழித்து மானூர் மக்களுக்கு நடந்தது தெரியவந்தது. ஆவி, பூமணி உடலில் புகுந்துதான் குறிசொன்ன கோடங்கியை கொன்றிருக்கிறது என மக்கள் நம்பத் தொடங்கினார்கள். அந்த நம்பிக்கை இன்றும் தொடர்கிறது.

'அந்த கொடூர ஆவி கோடங்கியை ஏன் கொண்டது என்பது மர்மம் தான் இன்னும் எங்களுக்கு பிடிபடவில்லை. ஆனால், அந்த சம்பவத்துக்கு அப்புறம் நாங்க அந்த பழைய சுடுகாட்டு பக்கம் போவதே கிடையாது. எங்க ஊருக்கு கோடங்கி வருவதும் கிடையாது' என்கிறார்கள் மானூர் மக்கள்.

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்

## [01.04.11 முதல் 07.04.11 வரை]

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



### மேஷம்

அன்பர்களுக்கு செலவீனங்கள் சற்று அதிகமாக இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறு சிறு தடை, தாமத நிலை அமையும். தொழில் நிலைகளில் அலைச்சல் நிலைகள், வேலைப்பளு அமையும். குடும்ப நிலையில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் ஏற்படும். பண வரவு சற்று சுமாரான நிலையிலேயே அமையும் பலனுண்டு. கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் அமையும். பெண்களுக்கு மனச்சஞ்சலம் இருக்கும். மாணவர்கள் முயற்சி வேண்டும்.



### இடபம்

இடபராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. குடும்ப நிலையில் நல்ல அனுகூலம் ஏற்படும். தொழில் நிலைகளில் முன்னேற்றகரமான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகள் நல்ல வெற்றிகளை கொடுக்கும்.

பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையிலேயே அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மைகள் அமையும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு அலைச்சல் நிலை சற்று அதிகமாக அமைந்திருக்கும். தொழில் நிலையில் வேலைப்பளு ஏற்படும். எதிர்பாராத வகையில் பிரயாணங்கள் அமையும் நிலையுண்டு. குடும்ப நிலையில் ஓரளவிற்கு நன்மைகள் ஏற்படும் பலனுண்டு. பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு.

கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலம் ஏற்படும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்கள் முயற்சி வேண்டும்.



### கடகம்

கடகராசி அன்பர்களுக்கு நற்பலாபலன்கள் அமைகின்ற நிலையுண்டு. தொழில் நிலைகளில் நல்ல மேன்மை ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நிலைப் பலனும் அமையும். தந்தை வழி மூலம் உறவினர்களால் அனுகூல பலன் ஏற்படும்.

பண வரவு மிகவும் திருப்திகரமாக அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். பெண்களுக்கு வெற்றி உண்டு. மாணவர்களுக்கு அனுகூலமுண்டு.



### சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் ஏற்படும். தொழில் நிலைகளில் சிறு சிறு அலைச்சல், இழுபறி நிலைகள் இருக்கும். குடும்பத்தில் சுமாரான மத்திம பலன்களே ஏற்படும். கடன் நிலைகளில் இழுபறி, தாமத நிலைகள் தொடரும்.

பண வரவு சற்று சுமாரான நிலையிலேயே அமையும் பலனுண்டு. உடல் நிலையில் சிறு சுகவீனங்கள் ஏற்பட்டு மறையும். பெண்களுக்கு சுமாரான பலன் உண்டு. மாணவர்கள் முயற்சி வேண்டும்.



### கன்னி

கன்னிராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு வெற்றிகள் அமைய இடமுண்டு. குடும்ப நிலையில் நற்பலன்கள் ஏற்படும். பண வரவு ஓரளவிற்கு அனுகூலமாய் அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் முன்னேற்ற பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகள் ஏற்படும் நிலையுண்டு.

கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு மனச்சஞ்சலம் உண்டு. மாணவர்களுக்கு மேன்மையுண்டு.



### துலாம்

துலாம் ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறு சிறு தடை இருக்கும். தொழில் நிலைகளில் வேலைப்பளு அதிகமாக அமையும் நிலையுண்டு. குடும்ப நிலையில் சிறு சிறு மந்த நிலைகள் அமைந்திருக்கும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் இழுபறி, தாமத நிலைகள் தொடரும். பெண்களுக்கு அனுகூல பலன் உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### விருச்சிகம்

விருட்சிக ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலன்கள் ஏற்படும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் அமையும் நிலையுண்டு. குடும்பத்தில் மகிழ்வும் நிறைவும் கொண்ட பலன்கள் ஏற்படும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையிலேயே அமையும். எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக் கூடிய நிலைகள் இருக்கும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு மனமகிழ்வு ஏற்படும். மாணவர்களுக்கு வெற்றி உண்டு.



### தனுசு

தனுராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே ஏற்படும். தொழில் நிலைகளில் வேலைப்பளு அதிகமாக அமைந்திருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதான செயல்பாடு வேண்டும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் ஏற்படும்.

கடன் நிலைகளில் இழுபறி, தாமத நிலை தொடரும். பெண்களுக்கு மனச்சஞ்சலமுண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### மகரம்

மகரராசி அன்பர்களுக்கு சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் நிலைகளில் சிறு சிறு மந்த நிலைகள் அமையும். குடும்பத்தில் சுமாரான மத்திமமான பலன்களே ஏற்படும். சகோதரர் வழியில் சிறு சிறு பிரச்சினைகள் அமையும் நிலையிருக்கும். கடன் நிலைகளில் இழுபறி, தாமத நிலைகள் தொடரும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படுகின்ற நிலையுண்டு. குடும்பத்தில் மகிழ்வும் நிறைவும் அமையும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையிலேயே அமையும் பலன் உண்டு. உறவினர்கள் மூலமாக அனுகூலமான பலன்கள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு மேன்மை உண்டு.



### மீனம்

மீனராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். எடுக்கும் முயற்சிகளில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். தொழில் நிலைகளில் சிறு சிறு இழுபறி, தாமத நிலை இருக்கும். பண வரவு சுமாரான மத்திமமான நிலையிலேயே அமையும். உடல் நிலையில் சிறு சிறு சுகயீனங்கள் ஏற்பட்டு மறையும்.

கடன் நிலைகளில் இழுபறி, தாமத நிலைகள் ஏற்படும். பெண்களுக்கு மனச்சஞ்சலமிருக்கும். மாணவர்கள் முயற்சி தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமாதானம் ஏற்பட்ட நிலையிலும் சொந்த இடமின்றி அல்லல்படும் சிறந்ததோர் பாடசாலையின் நிலை

மாவட்டபுரம் - தெல்லிப்பழை எனும் இடத்தில் வீமன் காமத்து குருநாத உடையாரின் மகன் சின்னத்தம்பி என்பவரால் 1981ஆம் ஆண்டு 15 மாணவர்களுடன் டச்சு வீதியில் 'அன்பால் அறம் வளர்க்கும் கலை அருள்வாய்' எனும் மகுட வாசகத்துடன் 'சுப்பிரமணிய வரோதயா வித்தியாசாலை' எனும் நாமத்துடன் உருவாக்கப்பட்ட பாடசாலையே தற்போது வீமன்காமம் மகா வித்தியாலயம் ஆகும்.

கிராமத்தின் ஒரு கோடியில் அடிப்படை வசதிகளின்றிய நிலையில் பல்வேறு கஷ்டங்களுடன் இவ் வித்தியாசாலை இயங்கிவந்ததைக் கண்டு கவலையடைந்த அப்பகுதி மக்களும் நலன்விரும்பிகளும் போக்குவரத்து, குடி நீர் வசதிகளுடன் திண்ணைப்பள்ளி பாரம்பரியமும் சைவமணம் வீசும் இடமாகவும் விளங்கும் மாவிட்டபுரமே பாடசாலைக்கு உகந்த இடம் என எண்ணி மாவை முருகன் ஆலயத்திற்கு கிழக்குப் பக்கமாக பாடசாலைக்கு என நிரந்தரக் கட்டடங்களை அமைத்து இயங்க வைத்ததுடன், இப் பாடசாலை ஊர் மக்களின் பாடசாலை ஆக விளங்க வேண்டும் என கருதி 1935ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி 'வீமன்காமம் தமிழ்க் கலவன் பாடசாலை' என பெயர் மாற்றப்பட்டது.

இப் பாடசாலையில் இக்கிராம மாணவர்கள் மட்டுமன்றி வீமன்காமம், கட்டுவன், குரும்பசிட்டி, தையிட்டி, மயிலிட்டி, சாயுடை, கொல்லங்கலட்டி, கீரிமலை என பல இடத்து மாணவர்களும் தமது கல்விச் செயற்பாடுகளையும் ஏனைய செயற்பாடுகளாகிய இலக்கியம், இலக்கணம், நாடகம், கலை என்பனவற்றையும் கற்றுவந்தனர்.

இப் பாடசாலையில் கல்விச் செயற்பாடுகள் மட்டுமன்றி, ஏனைய கல்விசார செயற்பாடுகள் பலவும் திறம்பட மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இப்படியாக பல செயற்பாடுகளைத் தன்னகத்தே கொண்டு திறம்பட செயற்பட்டுவந்த இப் பாடசாலையின் வளர்ச்சி நாட்டிலுள்ள அனைவரினதும் கவனத்தினையும் ஈர்த்தது. இதன் காரணமாக இப் பாடசாலை 1951ஆம் ஆண்டு 'வீமன்காமன் ஆங்கிலப் பாடசாலை' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 1962 ஆம் ஆண்டு இப் பாடசாலை அரசுடைமையும் ஆக்கப்பட்டது.

இப் பாடசாலையின் தீவிர வளர்ச்சியினைக் கண்ட அரசு உடனடியாக பௌதீக - இரசாயன ஆய்வுகூடத்தினை அமைத்ததுடன் மனையியல், உயிரியல் ஆய்வுகூடங்களும் படிப்படியாக உருவாக்கப்பட்டன. இதனால், பாடசாலை வளர்ச்சி மேலும் பன்மடங்காகியது.

இதனை அவதானித்த கல்வித் திணைக்களம், 1967ஆம் ஆண்டு இப் பாடசாலையினை 'மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தியது. இதனால், 'வீமன்காமம் மகாவித்தியாலயம்' எனும் புதிய பெயருடன் தலைநிமிர்ந்து நின்றது. இதற்கு எல்லாம் காரணம் முற்றுமுழுதாக அப்போதைய அதிபர்களும் முகாமை யாளர்களும் மாணவர்களுமே ஆகும்.

மற்றும் இப்பாடசாலையின் சிறப்பு என்னவெனில் கல்விச்செயற்பாடுகளுக்கு அப்பால் தொழிற்பயிற்சிகளாகிய கயிறு பின்னுதல், நெசவு, கைவினைப் பொருட்கள் தயாரித்தல் போன்ற பயிற்சிகளும் மாணவர்களுக்கு திறமையாக வழங்கப்பட்டன.

இப்பாடசாலையின் அடுத்த வளர்ச்சிப் படியாக 1980ஆம் ஆண்டு கல்விப் பொது தராதர சாதாரண பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் பெருமளவு எண்ணிக் கையான மாணவர்கள் க.பொ.த. (உ/த) வகுப்பிற்குச் செல்லும் தகுதியினைப் பெற்றதனால் 1980ஆம் ஆண்டு இப் பாடசாலையில் முதன் முதலாக க.பொ.த. (உ/த) கலைப் பிரிவு வகுப்புக்கள் பெருமையுடன் ஆரம்பிக்கப்பட்டன.

இதனால், பாடசாலையின் மாணவர் கள் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர் களின் நியமனமும் அதிகரித்தது. அத்துடன், இணைப்பாட விதான செயற்பாடுகளாகிய கலைத் திறன் போட்டிகள், இசைத் திறன்கள், நடனம், நாடகம், இசைநாடகம், வராற்று நாடகம் என்பனவற்றில் வட்டாரம், மாவட்டம், தேசியம் எனும் நிலைகளில் எல்லாம் பங்குகொண்டு வெற்றியீட்டி சாதனைகளும் இப் பாடசாலையில் நிகழ்த்தப்பட்டமை வரலாற்றுச் சான்றுகள் மூலம் அறியக்கிடக்கின்றது.

அத்துடன், இக் காலப் பகுதியிலேயே பாடசாலைக்கு விளையாட்டு மைதானமும் அமைக்கப்பட்டது. இப்படி சிறந்த கல்வி காரணமாக க.பொ.த. உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு முதல் பரீட்சையிலேயே தோற்றிய மாணவர்களில் முதன் முதலாக 1983ஆம் ஆண்டு இ. ஞானேஸ்வரன் என்ற மாணவன் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டு அகில இலங்கை ரீதியில் பாடசாலைக்குப் பெருமையினை சேர்த்தார். அவரைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு 05 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார்கள். இவர்களில் குறிப்பாக ஏ. இராஜேஸ்வரி எனும் மாணவி 279 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் 7ஆவது நிலையினைப் பெற்று (தமிழ் மாணவர்களுள்) பாடசாலையினை உன்னத நிலைக்கு இட்டுச்சென்று மகாபொல புலமைப் பரிசிலையும் பெற்றார். தொடர்ந்து பல மாணவர்கள் வருடாவருடம் பல்கலைக்கழம் சென்றனர்.

அப்போதைய எதிர்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாண்புமிகு அ. தர்மலிங்கம் அவர்கள் பாடசாலையின் வளர்ச்சியினைக் கண்டு வியந்ததுடன், பாடசாலைக்கு 1983ஆம் ஆண்டளவில் மாடிக் கட்டடங்களை அமைத்துக் கொடுத்தார்.

இப் பாடசாலையில் 3 விளையாட்டு இல்லங்கள் உண்டு. இவ் இல்லங்களுக்கு பாடசாலையின் ஸ்தாபகர், முகாமை யாளர்களின் பெயர்கள் சூட்டப்பட் டுள்ளன. அவையாவன: சின்னத்தம்பி இல்லம், முத்துக்குமார் இல்லம், சுப்பிரமணியம் இல்லம் ஆகியவையாகும். இவ் இல்ல விளையாட்டு விழாக்கள், பரிசளிப்பு விழாக்கள், கலைவிழாக்கள் என்பன வருடாந்தம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தன.

இவ்வாறு பல சிறப்புக்களுடன் தலைநிமிர்ந்து தனக்கென ஒரு முத்திரை பதித்து ஒளிவீசிய பாடசாலையின் தலைவிதியினை மாற்றவென உருவாகியதே இடப்பெயர்வு எனும் கொடிய நோய்.

நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலைமை காரணமாகவும், பலாலி விமான நிலையத்திற்கு அருகில் இப்பாடசாலை காணப்பட்டதன் காரணமாகவும் 1987ஆம் ஆண்டு முதன் முதலாக இப் பாடசாலை இடம்பெயர வேண்டி ஏற்பட்டது.

1987 இல் ஏற்பட்ட திடீர் இடப்பெயர்வினால் தனது வளங்கள் அனைத்தையும் இழந்து தவித்து அநாதரவாக நின்றது இப் பாடசாலை.

இதன்போது கைவிடப்பட்ட பாடசாலை ஆவணங்களை எடுப்பதற்காக அப்போதைய அதிபர் மு. சிவராசாவினால் மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள் பெரும் சோகத்தில் - படுதோல்வியில் முடிவடைந்தன.

உயர் பாதுகாப்பு வலயம் என பாடசாலையின் சொந்த இடம் அறிவிக்கப்பட்டமையினால் சுமார் 24 வருட காலமாக இப் பாடசாலை இடம் பெயர்ந்த பாடசாலை எனும் சிறப்புப் பெயருடன் எந்த விதமான வளங்களும் ஆவணங்களும் அற்ற நிலையில் பாரிய பல்வேறுபட்ட சுமைகளுடன் தன்னை நம்பிவரும் மாணவர்களுக்கு சேவையாற்றி வரும் ஓர் பாடசாலையாகவே இன்றுவரை இயங்கி வருகின்றது.

பல நூற்றுக்கணக்கான மாணவச் செல்வங்கள், ஆசிரியர்கள் என சொந்த இடத்தில் தலைநிமிர்ந்து நின்ற பாடசாலை இன்று யா/இராமநாதன் கல்லூரி வளாகத் தில் வடக்குப் பக்கமாக சிறிய திறந்த வெளி மண்டபத்தில் ஒழுங்கான மலசல கூட வசதிகள் இல்லாமலும் 150 மாணவர் களுடனும் 11 ஆசிரியர்களுடனும் 'மாற் றான் தாய் பிள்ளைகளைப்போல்' இயங்கி வருவதை பார்க்கும் போது பார்ப்பவர்கள் கண்களில் இருந்து ஒரு துளி நீரேனும் வரத்தான் செய்கிறது.

வளப் பற்றாக்குறைகள் காரணமாக தமது க.பொ.த (உ/த) வகுப்புக்களை நிறுத்தியுள்ளது. இவ்வீமன்காமம் மகா வித்தியாலயமானது சொந்த சமூகமோ அல்லது பழைய மாணவர் சங்கம் போன்ற சமூகத் தொடர்புகளோ அற்ற நிலையில் மிகவும் வறிய மாணவர்கள், நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவர்கள் என பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட மா ணவர்களுக்கு இன்றும் தனது அளப்பரிய சேவையினை தன்னால் இயன்றளவு ஆற்றிவருகின்றமை பாராட்டுக்குரிய விடயமல்லவா?

1979ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இப் பாட சாலையின் அதிபராக இருந்து பல்வேறு கஷ்டங்கள், இடப்பெயர்வுகள் மத்தியில் தனது அர்ப்பணிப்பான சேவையினை ஆற்றி ஓய்வுபெற்றுச் சென்றுள்ள அதிபர் தி. கங்காதரன் அவர்களைத் தொடர்ந்து தற்போது தற்காலிய அதிபராகக் கடமை யேற்றிருக்கும் திருமதி. ச. தில்லைமணி அவர்கள் இந்த தரம் 1 சி பாடசாலையின் மாணவர்களுக்கு இயன்றவரையிலான சிறப்பான கல்வியினையும் ஏனைய செயற்பாடுகளையும் வழங்கிவருகின்ற மையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

பாடசாலையானது இந்த சமாதான காலத்துடனாவது தனது சொந்த இடத் திற்குச் சென்று மீண்டும் புத்துயிர் பெற்று சிறப்பான வளங்களைப் பெற்று புகழ் பூத்த பாடசாலையாக சொந்த மண் ணில் மலை போல தலைநிமிர்ந்து தனது சேவையினை ஆற்றவேண்டும் என ஆசிரி யர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற் றும் ஏனைய பாடசாலை சமூகத்தினர் வேண்டி நிற்கின்றனர்.

● எஸ்.கே.ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு நிகழ்வுகள்




பெரியகடை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் மீளளிப்பு கடன் திட்டடத்ன் கீழ் அப்பகுதியை சேர்ந்த பயனாளிகள் பத்துபேருக்கு துவிச்சக்கர வண்டிகளை சங்கத் தலைவி ச.சசிரேகா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சுதாகர் சுகுனந்ரா, சமாசத் தலைவர் நா.தனேந்திரன், கிராம அலுவலர் சிவானந்தர் ஆகியோர் வழங்குவதை படத்தில் காணலாம்.



மீள்குடியேற்றப்பட்ட கிளிநொச்சி தொண்டமான் நகர் கிராம சேவையாளர் பிரிவில் பொதுமக்கள் யுத்தத்தால் சேதமான வீதியொன்றை சிரமதானம் மூலம் புனரமைப்பு செய்கின்றனர். அதனைப் படத்தில் காணலாம்.

(படம்:- கிளிநொச்சி நிருபர்)



சித்தன்கேணி தனுவோடைப்பதி சிவகாமி அம்பாள் சமமத சிவசிதம்பர ரேஷ்வரர் ஆலய 33 குண்ட மகா கும்பாபிஷேகம் ஆலய பிரதமகுரு சிவ ஸ்ரீ சபா வாசுதேவ குருக்கள் தலைமையில் இடம்பெறுவதனை படத்தில் காணலாம்.

(படம்:- யாழ். மத்தி நிருபர்)



வியாவில் ஐயனார் தேவஸ்தானத்துக்கு அமரர் நாகலிங்கம் ஞாபகார்த்தமாக கனடாவைச் சேர்ந்த லிங்கவாவாசாவினால் நான்கரை லட்சம் ரூபா செலவில் தேர்க் கொட்டகைக்கு பாரிய இரும்பு கேற் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

(படம்:- வட்டுக்கோட்டை நிருபர்)



யாழ். சுன்னாகம் அ.த.க.பாடசாலையின் கால்கோள் விழாவின்போது தரம் ஒன்று மாணவர்கள் அழைத்துவரப்படுவதை படத்தில் காணலாம்.

(படம்:- ஏழாலை நிருபர்)



யாழ். சன்மார்க்க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டியில் வெற்றியீட்டிய இல்ல தலைவருக்கு யாழ்.கல்வி வலய பணிப்பாளர் திருமதி வேதநாயகம் பரிசுவழங்குவதை படத்தில் காணலாம்.(படம்:-ஐந்துசந்தி நிரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபை, யாழ்ப்பாணம்



# மீண்டுமொரு கிண்ணத்தை நோக்கி இலங்கை



பரபரப்பான பல கட்டங்களைத்தாண்டி பத்தாவது உலகக்கிண்ணத்தொடரின் இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ள இலங்கை மீண்டும் ஒரு உலகக்கிண்ணத்தை இலங்கைக்கு கொண்டுவருமா என்ற எதிர்பார்ப்பு தற்போது இலங்கை ரசிகர்களிடத்து மட்டுமல்லாது உலகினையே எதிர்பார்ப்புக்குள் ஏற்படுத்தியுள்ளது.


1996 ஆம் ஆண்டு நடைபெற்ற 6 ஆவது உலகக் கிண்ணத்துக்கான தொடரில் முதன் முதலாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்த அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இலங்கை அணி உலகக்கிண்ணத்தை கைப்பற்றி இலங்கைக்கு பெருமையைத்தேடிக் கொடுத்தது. 1996 ஆம் ஆண்டு மார்ச் 17 ஆம் திகதி பாகிஸ்தானின் கடாபி அரங்கில் நடைபெற்ற இவ்விறுதிப்போட்டியில் ரணதுங்க தலைமையிலான இலங்கை அணி மார்க் டெய்லர் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியை 7 விக்கெட்டுக்களால் அபார வெற்றியீட்டி கிண்ணத்தை கைப்பற்றியது.

அந்தவகையில் கடந்த 9 ஆவது உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் கிண்ணத்தை நழுவவிட்டு தற்போது 10 ஆவது உலகக்கிண்ணத் தொடரில் இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ள குமார் சங்கக்கார தலைமையிலான இலங்கை அணி இந்தியாவுடனான போட்டியில் வெற்றியீட்டி மீண்டுமொரு உலகக் கிண்ணத்தை இலங்கைக்கு கொண்டுவருமா என்ற கேள்வி அனைவரிடத்திலும் எழுந்துள்ளது.

பத்தாவது உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் இலங்கை- இந்திய அணிகள் நாளை மோதுகின்றன. சம பலமுடை இவ்விரு அணிகளிலும் கிண்ணத்தை கைப்பற்றப்போகும் அணி எது என்பதே கிரிக்கெட் ரசிகர்களின் கேள்விக்குறியான அவாவாகவுள்ளது.

இத்தொடரில் தனது 6 லீக் சுற்றுகளிலும் இலங்கை அணி சில போட்டிகளில் தளம்பல் நிலையை எதிர்கொண்டாலும் காலிறுதியில் கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்து அணிக்கு ஆரம்ப வீரர்களான டில்சான் மற்றும் தரங்க ஆகியோரின் அதிரடியினால் பேரதிர்ச்சியைக் கொடுத்து அவ்வணியை அபார வெற்றியீட்டி அரையிறுதிக்குள் நுழைந்தது.

அரையிறுதியில் நியூஸிலாந்தை எதிர்கொண்ட இலங்கை மிகுந்த பரபரப்புக்கு மத்தியில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ளது. அரையிறுதியில் தன் சொந்த மண்ணில் நியூஸிலாந்திடம் மண்டியிடும் நிலை சற்று உருவான போதிலும் அதற்கு இடம்கொடுக்காத இலங்கை பலத்த போராட்டத்தினை வெளிப்படுத்தி நியூஸிலாந்தை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ளது.



இந்நிலையில் இறுதிப்போட்டியில் இலங்கையின் சாதனை எவ்வாறு அமையப்போகிறது என்பதே தற்போதைய கேள்வியாக உள்ளது. இத்தொடரில் அனைத்துப் போட்டிகளையும் தன் சொந்த மண்ணில் எதிர் கொண்ட இலங்கை இங்கிலாந்துடனான காலிறுதிப் போட்டியை மாத்திரம் பங்களாதேஷில் எதிர் கொண்டது.

துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு என அனைத்திலும் தனது திறமையை இத்தொடரில் வெளிப்படுத்திவரும் இலங்கை நாளைய போட்டியில் அதனை எந்தவகையில் கையாளப்போகிறது என்பதே அனைவரது எதிர்பார்ப்பு. இத்தொடரில் கடந்த போட்டிகளைப் பார்க்கும் போது இலங்கை அணியின் மத்தியதர துடுப்பாட்ட வரிசை சற்று பலமிழந்து உள்ளமையினை அவதானிக்க முடிகின்றது.

ஆரம்ப வீரர்களான டில்சான், தரங்க மற்றும் அணித்தலைவர் குமார் சங்கக்கார, ஜெயவர்த்தன, மத்தியூஸ் ஆகியோர் அணியின் நம்பிக்கை அளிக்கக்கூடிய துடுப்பாட்ட வீரர்களாக உள்ளனர். இதில் ஜெயவர்த்தன இத்தொடரில் சோபிக்கத்தவறிவருகின்றமை அணியின் துடுப்பாட்டபலத்தில் குறைவினை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை ஆரம்ப வீரர்களான டில்சான், தரங்க ஆகியோர் இத்தொடர் முழுவதும் சிறப்பான ஆரம்பத்தினை அமைத்து அணியின் வெற்றிக்கு கைகொடுத்து வருகின்றனர்.

எனவே இது நாளையபோட்டியிலும் தொடருமாயின் அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதேவேளை அணியின் மத்திய தர துடுப்பாட்ட வரிசையே இலங்கைக்கு நாளைய போட்டியில் நெருக்கடியை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. சமரவீர, சில்வா, குலசேகர ஆகியோர் கடந்த போட்டிகளில் குறைந்த ஓட்டங்களுடனே அரங்கு திரும்பியுள்ளமை அணியின் மத்தியதர வரிசையின் பலவீனத்தை எடுத்துக்காட்டுகின்றது. எனவே நாளைய போட்டியில் இந்த இடைவெளியினை இலங்கை நிரப்பும் பட்சத்தில் அணிக்கு பலத்தினை சேர்த்துக் கொள்ளும் அதேவேளை எதிரணிக்கு நெருக்கடியையும் கொடுக்க முடியும்.

இதனிடையே பந்துவீச்சில் அனுபவ சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் மற்றும் மென்டிஸ், மலிங்க, ரங்கனஹேரத், மத்தியூஸ் என பலம் பொருந்திய வீரர்களை கொண்டுள்ளமை எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு சவாலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. கடந்த போட்டிகளில் இவர்களின் விக்கெட் வேட்டை அணியை இறுதிப்போட்டி நோக்கி நகர்த்திவந்தமை மறுப்பதற்கில்லை.

இதில் நாளைய போட்டியுடன் தனது ஒரு நாள் சர்வதேச போட்டியிலிருந்து ஓய்வு பெறவுள்ள சுழல் நாயகன் முத்தையா முரளிதரன் தனது இறுதிப்போட்டியில் சாதனைகளை படைப்பார் என்பது நம்பிக்கை. இதனால் எதிரணிக்கு சவால் அமையும் என்பதே உண்மை.

இந்நிலையில் நாளை இந்தியாவுடன் மோதவுள்ள இலங்கை அவ்வணியை வெற்றி பெற்று மீண்டுமொரு உலகக்கிண்ணத்தை இலங்கைகொண்டுவரும் அதேவேளை இலங்கைக்கும் பெருமையையும் தேடிக்கொடுக்க வேண்டும் என்பதே இலங்கை ரசிகர்களின் ஆவலாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday April 01, 2011